திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

CONNEMARA PUBLIC LIBRARY
7 - JAN 1964
MADRAS



சண்டேசானுக்கிரக மூர்த்தம்,
கங்கைகொண்ட சோழபுரத்துச் சிற்பம்.

மாலை 6] சோபகிருது - மார்கழி - ஜனவரி 1964 [மணி 4

ரதி

சென்னை அரசாங்க அறநிலையப்
பாதுகாப்புத் துறை வெளியீடு




கோடம்பாக்கம் ஸ்ரீ வடபழநியாண்டவர் கோயில் சுதைவேலைச் சிற்பங்கள் சில

பொருள் அடக்கம்

1. தமிழ் நாட்டுத் திருக்கோயில்கள்
2. சண்டேசானுக்கிரக மூர்த்தம்
3. அயந்திகழ் நறுங்கொன்றைத்தெரியலான்
4. திருநாவுக்கரசர் தேவாரம்
5. வெள்ளையர் பாராட்டிய கோயில்
6. சிவப்பிரகாசரும் திருவண்ணாமலையும்
7. சிவமந்திரங்கள்
8. தொண்டைநாட்டுத் திருப்பதியநுபவம்
9. அன்பின் என்பு
10. கண்ணுயிருப்பவன் கண்ணன்
11. திருத்தலத்து இறைவன் திருப்பெயர்கள்
13. சூரியனார் கோயில்கள்
13. சொந்தம்
14. ஞானக் காட்சி
15. பரமேசுவர மங்கலம் கல்வெட்டுகள்
16. புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே
17. அதோமுக தரிசனம்
18. திருவொற்றியூர்க் கல்வெட்டு
19. ஸ்ரீவைஷ்ணவ குருபரம்பரை
20. செய்திகள்

ஆண்டுச் சந்தா ரூ. 10/- ★ தனி இதழ் விலை ரூ. ஒன்று

சந்தா தாரர்களுக்கு வேண்டுகோள்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச்சேர விரும்புபவர்கள், "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை 34" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

ஓர் ஆண்டின் நடுவில் எந்தமாதத்திற் சேர்ந்தாலும், அடுத்த ஆண்டில் அந்தமாதம் வரையில், 12 இதழ்கள் அனுப்பப் பெறும்.

ஓர் ஆண்டிற்குக் குறைந்த சந்தாத் தொகை ஏற்கப் பெறுவதில்லை.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்தல், இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.

திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 6] சோபகிருது மார்கழி-ஜனவரி 1964 [மணி 4

தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள்

திருமிகு. எம். பக்தவத்சலம் அவர்கள், B.A.,B.L.,
முதலமைச்சர், தமிழ்நாடு.

கோயில்களின் சிறப்பு :

தமிழ்நாடு திருக் கோயில்களுக்கு மிகவும் புகழ்பெற்றது. தமிழ் நாட்டிற் போல இவ்வளவு மிகுதியாக வானளாவி உயர்ந்த மாபெரும் கோயில்களை, நாம் வேறு எங்கணும் காண்டல் இயலாது. "**கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்**" என்பது தமிழ்நாட்டுப் பழமொழி.

"மேலொரு பொருளும் இல்லா
மெய்ப்பொருள் வில்லும் தாங்கிக்
கால்தரை தோய நின்று
கட்புலக் குற்ற தம்மா!"

எனக் கம்பர் பாடுவது போல, நம் தமிழ் நாட்டில்தான் ஆழ்வார்களும் நாயன்மார்களும் திருவவதாரம் செய்து, கால் தரை தோய நடந்து சென்று, எத்தனையோ பலப் பல தலங்களைத் தரிசித்து மகிழ்ந்து, திருமுறைகளையும் திவ்வியப் பிரபந்தங்களையும் அருளிச் செய்தனர். திருக்கோயில் இல்லாதவை "**திரு இல் ஊர்கள்**" என்று **திருநாவுக்கரசர்** குறிப்பிட்டருள்கின்றார். இங்ஙனம் பற்பல எழில் மிகுந்த கோயில்களால் நம் தமிழ்நாடு மிகவும் புகழ்பெற்றுத் திகழ்கின்றது. நமது தமிழ் நாட்டு அரசாங்கச் சின்னம் "**கோபுரம்**" ஆக விளங்குவதும், ஈண்டு நாம் நினைந்து இன்புறுதற்குரியது.

கோயில்கள் நமது பழம் பெரும் நாகரிகத்தையும், பண்பாட்டு நலங்களையும் விளக்கிக் கொண்டு நிற்கும் அடையாளங்கள் ஆகும். பிற நாடுகளி லெல்லாம் இரண்டொரு நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட கட்டிடங்களும், பொருள்களும் கூட மிகவும் பழமையும் பெருமையும் வாய்ந்தனவாகக் கருதிப் பெரிதும் போற்றப்படுகின்றன. இதனை உணர்ந்தால் ஆயிரம்-இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்டு, இன்றளவும் தமது சிறப்பும் பெருமையும் சிறிதும் குன்றாமல், நின்று நிலவி ஓங்கி வளர்ந்து வரும் தமிழ் நாட்டுக் கோயில்களின் அருமை பெருமைகளை யாவரும் இனிதுணரப் பெறுவர்.

['கல்கி' தீபாவளி மலரில் (நவம்பர், 1963) வெளிவந்த இக்கட்டுரை, 'கல்கி' ஆசிரியர் அவர்களின் இசைவு பெற்று, இங்கு வெளியிடப் பெறுகின்றது. —ஆசிரியர்]

சமுதாய நல அமைப்பு நிலையங்கள் :

பழந்தமிழ் நாட்டில் கோயில்கள்தான் **சமுதாய நல அமைப்பு நிலையங்கள்** (Social Welfare Centres) எனப் பல வகைகளிலும் விளங்கின. தமிழ் நாட்டுச் **சமயம்-சமுதாயம்-கலையியல்-பொருளியல் பண்பாட்டியல்** முதலிய பல துறைகளில் கோயில்கள் பெரிதும் பங்கு கொண்டு சிறப்புறச் செயலாற்றி வருகின்றன. **பல்லவ – சோழ – பாண்டிய வேந்தர்களும், விஜய நகர அரசர்களும், நாயக்க மன்னர்களும்** பிறருமெல்லாம், கோயில்களின் வளர்ச்சிக்கும் அமைப்பிற்கும் அளப்பரும் தொண்டுகள் ஆற்றியுள்ளனர். அதனால் தமிழ்நாட்டு வரலாற்றுச் செய்திகளிலும் கூட, கோயில்கள் மையமாகச் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றன. கோயில்களில் உள்ள பல்லாயிரக் கணக்கான கல்வெட்டுக்கள் வரலாற்று ஆராய்ச்சிக்கு மிகவும் இன்றியமையாத கருவிகளாகப் பயன் பட்டு வருவதும், இங்கு நாம் சிந்தித்துணர்தல் தகும்.

பழங்காலத்தில் **கோயில்களே பள்ளிக் கூடங்களாகவும், கலை வளர்ச்சிக் கழகங்களாகவும், அறம் கூறும் அவையங்களாகவும், அறக்கூழ்ச் சாலைகளாகவும், மருத்துவ மனைகளாகவும், மக்களுக்குத் தொழில் தரும் நிறுவனங்களாகவும், பொருள் கொடுத்தும் வாங்கியும் உதவும் நிதிநிலையங்களாகவும், மன்பதை நலம் வளர்க்கும் மன்றங்களாகவும், போர்க் காலங்களில் படைவீடுகளாகவும், இன்ன பிறவாகவும் விளங்கி வந்தன.**

மேலைநாட்டினரும் ஈடுபட்டமை :

இத்தகைய பற்பல சிறப்புகளால் தமிழ் நாட்டுக்கோயில்கள், பல அயல் நாட்டு மக்கள் உள்ளத்தினையும் பெரிதும் கவர்ந்து, ஈடுபாடு கொள்ளச் செய்திருக்கின்றன. **காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர்** கோயில் மதிலைக் கட்டி முடிக்கக் காரணமாக இருந்த **ஆட்சன்**(Hodgson), மதுராந்தகம்கோயில் திருப்பணியை நடத்திய **பிளேசு**(Place), **பவானி சங்கமேசுவரர்** கோயிலில் **வேதநாயகி அம்மனுக்குப்** பள்ளியறைத் தந்த ஊஞ்சலை அமைத்து நன்கொடையாக வழங்கி மகிழ்ந்த **வில்லியம் காரோ** (William Garrow), மதுரை மீனாட்சியம்மைக்குத் தங்கத்தாற் செய்த அங்கவடிகளை (Stirrups) அன்பளிப்பாகத் தந்த **ரூஸ் பீட்டர்** (Rous Peter) முதலிய மேனாட்டுப் பெருமக்கள் நம் நாட்டுக் கோயில்கள்பாற் கொண்டிருந்த அன்பையும், ஆர்வத்தினையும் என்னென்பது!

போற்றிப் பாதுகாக்கும் பொறுப்பு :

இத்தகைய சிறப்பு மிக்க கோயில்களே நம்முடைய நலங்கருதி நம் முன்னோர்கள் நமக்காக அமைத்து வைத்து அளித்து விட்டுச் சென்ற அரும் பெரும் கலைச் செல்வங்கள் ஆகும்.

சேலே றியவயல் தென்காசி
ஆலயம் தெய்வச் செய
லாலே சமைந்தது; இங்கு என் செயல்
அல்ல; அதனை இன்னும்
மேலே விரிவு செய்தே புரப்பார்
அடிவீழ்ந்து, அவர் தம்
பால், ஏவல் செய்து பணிவேன்
பராக்கிரம பாண்டியனே

எனத் தென்காசிக் கோயிலைக் கட்டிய **பராக்கிரம பாண்டிய மன்னன்** பாடிய உருக்கம் மிக்க கல்வெட்டுச் செய்யுள் போன்றவை,நாம் நம் கோயில்களைத் தம் பண்டைப் பெருமையில் சிறிதும் குன்றுமல் போற்றிக் காத்து வளர்த்து வரவேண்டிய பொறுப்பையும், கடமையையும் நினைவுபடுத்துவன ஆகும்.

சிறந்த அப் பொறுப்பையும், கடமையையும் செவ்விதின் உணர்ந்து, நமது சென்னை அரசாங்கம், தனது அறநிலைய ஆட்சித் துறையின் மூலம் எல்லா வகைகளிலும் நம் தேசத்தின் பழம்பெரும் பண்பாட்டுக் கலைக் கருவூலங்கள் எனத் தக்க கோயில்களை யெல்லாம், கண்ணும் கருத்துமாகக் கவனித்துப் போற்றிப் பாது காத்து வளர்த்து வருகின்றது.

கோயில்களில் நிகழும் பணிகள் :

சென்னை அரசாங்க அறநிலைய ஆட்சியின் கீழ்த் தற்போது 188 மடங்கள், 7613 கோயில்கள் உட்பட, 8670 நிறுவனங்கள் சிறந்த கண்காணிப்புடன் போற்றிக் காத்து வரப் பெறுகின்றன.

> **"இயற்றலும் ஈட்டலும் காத்தலும், காத்த வகுத்தலும் வல்ல தரசு"**

எனத் **திருவள்ளுவர்** அருளிச் செய்தபடி, கோயில்கள் - அறநிலையங்கள் ஆகியவற்றின் நிதி நிலைமையை ஆராய்ந்து, அவற்றில் காணப்பெற்ற சீர்கேடுகளை நீக்கி, அவற்றின் வருவாய் வளர்வதற்கேற்ற வழிவகைகள் அமைக்கப் பெற்றிருக்கின்றன. இத்தகைய நடவடிக்கைகளின் பயனுக எண்ணிறந்த பலநிறுவனங்களின் நிலைமை திருந்தி, நிதி வருவாய் திருப்திகரமாக விளங்குகிறது. அவற்றின் வரவு செலவுத் திட்டங்களும், ஒழுங்குபடுத்தப் பெற்று,அவ்வப்போது தகுந்த முறைகளில் தணிக்கை செய்யப்பட்டு வருகின்றன.

பழைய சிறந்த கோயில்கள் பலப்பல, அறநிலையத் துறையின் நிதி உதவியினுலும், பொதுமக்களின் நன்கொடைத் தொகைகளினுலும்,பழுது பார்த்துத் திருப்பணிகள் செய்து மகா கும்பாபிஷேகங்களும் சிறப்புற நடத்தப்பட்டிருக்கின்றன. சமீபத்தில் நடைபெற்ற **மதுரை மீனுட்சியம்மன்கோயில் மகாகும்பாபிஷேகம்**, தமிழ் நாட்டு வரலாற்றிலேயே சிறப்பிடம் பெறத் தக்க முறையில் மிகவும் விமரிசையாக நிகழ்ந்தமை, யாவரும் அறிந்ததொன்று. சமீப வருஷங்களில் தமிழ் நாட்டில் இங்ஙனம் **நூற்றுக் கணக்கான கோயில்களில்** திருப்பணிகளும் கும்பாபிஷேகங்களும் நடைபெற்றிருக்கும் திறம், நாம் பெரிதும் மகிழ்ச்சியுறுவதற்குரிய செய்தியாகும்.

கோயில்களில் சமயச் சொற்பொழிவுகளும், தேவாரத் திருமுறை திவ்வியப் பிரபந்தங்களின் பாராயணங்களும் அவ்வப்போது நடைபெறுகின்றன. ஆழ்வார்கள் ; நாயன்மார்களின் பாடல்கள், அவ்வத்தலத்துக் கோயில்களில் சலவைக் கல்லில் பொறித்துப் பலரும் காணத் தக்க இடத்தில் பதிக்கப்பட்டு வருகின்றன. அந்தந்தத் தலத்துக்குரிய தல புராணங்கள், சிறு சிறு பிரபந்தங்கள் ஆகிய நூல்களை அச்சிட்டு வழங்கிப் பரப்பிப் பாதுகாக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. மாவட்டவாரியாகக் கோயில் வரலாறுகள் எழுதி அச்சிடத் திட்டம் வகுக்கப்பட்டு, **"நெல்லை மாவட்டக் கோயில் வரலாறு"** என்னும் நூலும் வெளிவந்திருக்கிறது. ஏனைய மாவட்டக் கோயில் வரலாறுகளும் விரைவில் வெளிவர இருக்கின்றன. பல கோயில்களில் பொதுமக்களுக்குப் பயன் படும் பொருட்டு, நூல் நிலையங்களும் இலவச வாசகசாலைகளும் அமைக்கப்பட்டிருப்பது பாராட்டுவதற்குரிய செய்தியாகும்.

வழிபடும் பக்தர்களுக்கும் யாத்ரீகர்களுக்கும் பலப்பல வசதிகள் கோயில்களில் செய்யப்பட்டுள்ளன. **பழநி, திருச்செந்தூர்** முதலிய தலங்களில் பல லட்சம் ரூபாய் செலவில் நூற்றுக்கும் மேற்பட்ட அறைகளையுடைய விடுதிகள் கட்டப் பெற்றிருக்கின்றன. கோயில் இடங்களில் தூய்மையும் துப்புரவும் நிலைபெறச்செய்து, பக்தியுணர்வுச் சூழ்நிலைகள் நிலவுமாறு கண்காணிக்கப் பெறுகின்றது. இதனுல் கோயில்களுக்குச் சென்று வழிபடுவோர் தொகை நாளுக்கு நாள் பெருகி வருகின்றது. **திருச்செந்தூர், பழநி, திருத்தணி, கோடம்பாக்கம்** முதலிய ஒரு சில கோயில்களுக்குச் சென்று பார்த்தாலே, இவ்வுண்மையை யாவரும் இனிதுணர்ந்து கொள்ளலாம்.

கோயில் அருச்சகர்களுக்கும் குருக்கள்மார்களுக்கும், சிவாகமங்களிலும், பாஞ்சராத்திரம் வைகானசம் என்னும் வைஷ்ணவ ஆகமங்களிலும் **சென்னை, திருப்புகலூர், நாச்சியார் கோயில், மன்னுர்குடி** முதலிய இடங்களில் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப் பெற்றன. இறை பணியாளர்களுக்கும் **மதுரை, திருக்குற்றலம்** ஆகிய இடங்களில் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப் பெற்றிருக்கின்றன. இவற்றுல் கோயில் நடைமுறைகளும் உற்சவம் முதலிய

விசேடங்களும் சாஸ்திரோக்தமாக நடப்பதற்கு வாய்ப்பு மிகுதிப்பட்டிருக்கிறது.

மயிலாப்பூர், நாச்சியார் கோயில், சிக்கல், தருமபுரம், மதுரை, பழநி, திருச்செந்தூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் கோயில்களின் சார்பில் அநாதை இல்லங்கள் பல நடந்து வருகின்றன. சென்னை அரசாங்கக் கல்வித் துறையின் மூலம்,பள்ளிச் சிறுவர்களுக்குரிய பகலுணவுத் திட்டத்துக்குப் பல கோயில்கள் பேராதரவு புரிந்து வருதல் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. **திருநெல்வேலி, மதுரை** முதலிய இடங்களில் பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளும் கோயில்களால் நடத்தப்படுகிறது.

சீன நெருக்கடியின் போது, கோயில்கள் தேசீயப்பாதுகாப்பு நிதிக்கு ஏராளமான நன்கொடைகள் வழங்கியதுடன், மிகுதியான அளவில் தங்கப் பத்திரங்களும் வாங்கிப் பேருதவி புரிந்து இருக்கின்றன.

சிற்பக்கலை வளர்ச்சிக்காக **மாமல்லபுரம், சுவாமிமலை** ஆகியஇடங்களில் வசதி செய்யப்பட்டிருக்கின்றது. தமிழ் நாட்டுக்கே தனிச் சிறப்பாக உரிய நாதசுர இசைக்கலை வளர்ச்சி குறித்துப் **பழநி** தேவஸ்தானத்தின் ஆதரவில் **"நாதசுரப் பயிற்சி** நிலையம்" ஒன்று நடந்து வருகின்றது. **பழநியாண்டவர் கீழ்த் திசைக்கலைப் பண்பாட்டுக் கல்லூரி** ஒன்றும் 1960-61 ஆம் ஆண்டு முதல் தோன்றி, மூன்றாண்டுப் பி.ஏ.பட்டப் படிப்புக்காகச் சென்னைப் பல்கலைக் கழகத்தின் இணைப்புடன் இயங்கி வருகின்றது. சமய அறிவையும் உணர்வையும் வளர்ப்பதில் இது மிகச் சீரிய ஒரு நடவடிக்கையாகும்.

சமீபத்தில் தஞ்சாவூரில் **ஹரிகதா காலக்ஷேபப் பயிற்சிப் பள்ளி** ஒன்றும் தொடங்கப் பெற்றுள்ளது. நமது பழம் பெரும் இந்து மதத்தின் கோட்பாடுகளையும் தத்துவங்களையும், புராண இதிகாசக் கதைகளையும், மக்களிடையில் இசைநலத்துடன் சுவை அமையப் பரப்பிப் பக்தி உணர்வைப் பெருக்கி வளர்க்கும் துறையில், இப் பயிற்சிப்பள்ளி பெரிதும் பயன்படும் என்பது சொல்லாமலே அமையும்.

தமிழ் நாட்டுக்கே உரிய சித்த மருத்துவக் கலை வளர்ச்சியினைக் குறித்துத் தஞ்சை மாவட்டத்தில் **திருப்புகலூரிலும்**, திருநெல்வேலி மாவட்டத்தில் **பண்பொழியிலும்**, சித்த மருத்துவசாலைகள் தோன்றி இயங்கிப் பொது மக்களுக்குப் பெரிதும் பயன்பட்டு வருகின்றன.

சமய வளர்ச்சியும் விளக்கமும் கருதித் **"திருக்கோயில்"** என்னும் திங்கள் இதழும் 1958-ஆம் ஆண்டு அக்டோபர் மாத முதல் தொடங்கி நடைபெற்று வருகின்றது. சமயத் துறையில் புகழ் பெற்று விளங்கும் அறிஞர்கள் பலரின் கட்டுரைகள் அதன்கண் வெளிவருகின்றன.

பொதுமக்கள் கடமை :

ஒரு நாட்டின் செழிப்புக்கும் வளர்ச்சிக்கும் அதன்கண் விளங்கும் கோயில்கள் சிறப்புற விளங்குதல் இன்றியமையாதது.

முன்னவ னார்கோயிற் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்
கன்னங் களவுகள் மிகுந்திடும் காசினி
என்னரும் நந்தி எடுத்துரைத் தானே

என்பது **திருமூலர் திருமந்திரம்**. நம்தமிழ் நாட்டுத் திருக்கோயில்கள் செவ்விதின் விளங்கி வருவது, நம் நாட்டின் செழிப்புக்கும் வளர்ச்சிக்கும் பெருந்துணை புரியும் என்பதில் ஐயமில்லை. சமீபத்தில்தான் **திருவானைக்காவல்** ஜம்புகேசுவரர் கோயிலையும், **காஞ்சீபுரம்** வரதராஜப் பெருமாள் கோயிலையும் பழுது பார்த்துத் திருப்பணி செய்வதன் பொருட்டு, முறையே பத்துப் பத்துலட்ச ரூபாய் அளவில் திட்டம் வகுக்கப்பட்டுத் திருப்பணிக் குழுவும் நியமிக்கப்பட்டிருக்கின்றது. எனவே, தமிழ் நாட்டுப் பொதுமக்களும், நம் கோயில்களின் சிறப்பிலும் வளர்ச்சியிலும் கருத்தூன்றி நம் தேசத்தின் புராதனச் சொத்தும் சின்னமும் ஆக விளங்கும் கோயில்களின் சிறப்பைப் பெருக்கிப் போற்றி வளர்க்க முற்பட வேண்டுவது கடமை ஆகும். ✱



சண்டேசானுக்கிரக மூர்த்தம்,
கங்கைகொண்ட சோழபுரத்துச் சிற்பம்

சண்டேசானுக்கிரக மூர்த்தம்

வண்டு சேர்பொழில் சூழ்மங் கலக்குடி
விண்ட தாதையைத் தாளற வீசிய
சண்ட நாயக னுக்கருள் செய்தவன்
துண்ட மாமதி சூடிய சோதியே

—திருநாவுக்கரசர்

முன்னுரை :

சிவாலயங்களிற் பஞ்சமூர்த்திகள் புறப்பாடு அல்லது திருவீதி உலா நிகழும் போது, அவர்களுள் ஒருவராக விளங்குபவர் சண்டேசர் என்பது, யாவரும் அறிந்த தொன்று. சண்டேசர், சண்டீசர், சண்டேசுவரர், சண்டிகேசுவரர், சண்டேசுவர நாயனர் எனப் பல வகைகளில் இவருக்குப் பெயர்கள் வழங்கும்.

எல்லாச் சிவாலயங்களிலும் இவருக்குத் தனியே ஒரு சிறு கோயில் உண்டு. அஃது கருவறைக்குப் புறம்பே, அபிடேகத் தீர்த்தம் விழும் கோமுகியை அடுத்து அருகில் அமைக்கப்பட்டிருக்கும். கோயில்களுக்குச்சென்று நாம் செய்யும் சிவதரிசனமும் வழிபாடும், அவற்றின் இறுதியில் நாம் செய்தற் குரிய சண்டேசுரர் தரிசனத்துடனும் பிரார்த்தனையுடனுமே நிறைவு பெறுகின்றது.

சண்டேசுரரைத் தரிசனம் செய்து முடிக்காத போது, சிவதரிசனம் நிறைவு பெருமையோடு, அதன் பயனும் நமக்குச் சித்திப்பதில்லை என்பது பெரியோர்கள் துணிபு.

திருக்கோயிலுக்குச் சென்று சிவபிரானை வழிபடும் அன்பர்கள், கோயிலை முறையே வலம் வந்து, ஒவ்வொரு மூர்த்தியையும் வணங்கி முடித்துக் கொண்ட பிறகு, சண்டேசுரர் கோயிலை அடைதல் வேண்டும். கோயிலில் வழிபாட்டின் போதுபெற்ற பூமாலை பரிவட்டம் முதலிய * சிவநின்மாலியப் பொருள்களைச் சண்டேசுரர் சந்நிதியிற் சேர்த்து, சிவதரிசனப் பலனை அளித்தருளல் வேண்டும் என்று அவரைப் பிரார்த்தித்து, அங்குப் பெற்ற திருநீற்றை அணிந்து கொள்ளல் வேண்டும் என்பது விதி.

சண்டேசர் இடையருத சிவத்தியானத்தில் ஈடுபட்டிருப்பவர் ஆதலின், அவருக்கு நம் வருகையையும் வேண்டுகோளையும் தெரிவிக்கும் வகையில், ஓர் அறிகுறியாகவே, நாம் அவர்தம் திருமுன் சென்று, நம் கைகளை மெல்லெனத் தட்டுகின்ருேம்.

திருவானைக்காப் புராணம் :

சிவபூசையின் இறுதியில் நம்மாற் பூசிக்கப் பெற்று, சிவபிரானுல் ஏற்றுக் கொள்ளப்பட்ட அன்னம் (உணவு) பானீயம்(நீர்) முதலியனவும், தாம்பூலம் மாலை சந்தனமும் ஆகிய நிருமாலியங்களை ஏற்றுக் கொண்டு, நமக்குச் சிவபூசையின் பயனைக் கொடுக்கும் அதிகாரம் உடையவர் சண்டேசுவரரே ஆவர்! இவ்வுண்மையினைக் கச்சியப்ப முனிவர்,

---

* சிவபிரானுக்குச் சாத்திய மலர் மாலைகள் ஆடை அணிகலன்கள் முதலியனவும், நிவேதனம் செய்த பிரசாதங்கள் ஆகிய உணவு வகைகளும், சிவநின்மாலியங்கள் என வழங்கப் படும். சிவபிரானுல் ஏற்றுக் கொள்ளப்பட்டு நின்மலம் (அழுக்கின்மை,தூய்மை) அடைந்த பொருள்கள், சிவநின்மாலியங்கள் ஆகும்.

சிவநின்மாலியங்களைச் சண்டேசுரர்பாற் சேர்ப்பித்தல் வேண்டும் என்று பெரியவர்கள் கூறும் நுட்பம் அறியாமையால், ஒரு சில மக்கள் கோயில்களில் சண்டேச மூர்த்தியின் மீது தமது ஆடைகளின் நூலிழைகளை எடுத்துப் போடும் சிவாபராதச் செயல் புரிகின்றனர். அது பெருந் தவறு. சிவபிரானுக்கு அணிவித்து நின்மாலியமான ஆடைகளையும் மாலைகளையும் மட்டுமே, சண்டேசர்க்குச் சாத்துதல் வேண்டும்.

பொன்னங் கடுக்கை முடிவேய்ந்த
புனிதற் கமைக்கும் பொருளன்றி
மின்னும் கலன்ஆ டைகள்பிறவும்
வேறு தனக்கென் றமையாமே
மன்னும் தலைவன் பூசனையில்
மல்கும் பயனை அடியார்கள்
துன்னும் படிபூ சனைகொள்ளும்
தூயோன் அடித்தா மரைதொழுவாம்

எனவரும் திருவானைக்காப் புராணத் துதிப் பாடலிற் குறிப்பிட்டிருத்தல் கொண்டு உணரலாம். சண்டேசர் பூசை செய்யாத வழி, சிவ பூசை செய்தும் அதன் பயனை நாம் எய்துதல் இயலாது. அது,

"சண்டனை அர்ச் சித்தவரே
சாம்புவை அர்ச்சித்த பயன்
கொண்டிடுவர் மற்றையர்
கொள்ளார்"

எனவரும் சைவசமய நெறித் திருமொழியால் உணரப்படும். அதுபற்றியே சைவ சித்தாந்தத்தில் "சண்டேசுவரரை எவ்விடத்தும் எப்போதும் பூசிக்க" என்னும் நியமம் உள்ளது.

கல்வெட்டுச் செய்யுள் :

சிவாலயங்களில் வரவு செலவுக் கணக்குகளைச் சண்டேசுவரர் பெயரினாலேயே எழுதுவதுதான், பண்டைக் காலத்து மரபு முறையாக இருந்து வந்தது. இம் மரபுநெறிச் செய்தியினைப் பின்வரும் கல்வெட்டு வெண்பாப் பாடல் விளக்குதல் காணலாம்.

சண்டீச ரன்ஓலை சாகரஞ்சூழ் வையகத்தீர்
கண்டீச ரன்கருமம் ஆராய்க!—பண்டே
அறஞ்செய்தான் செய்தான் அறங்காத்தான்பாதம்
திறம்பாமைச் சென்னிமேல் வைத்து

"கடல்சூழ்ந்த உலகில் வாழும் மக்களே! நமக்கு முற்பட்டுப் பண்டைக் காலத்தில் அறத்தைச் செய்தவன், செய்வித்தவன், செய்த அறத்தைப் பாதுகாத்தவன் முதலியவர்களுடைய பாதங்களைப் பிறழ்வின்றி உங்கள் தலைமேற் கொண்டு போற்றி, இறைவனின் திருப்பணிகளை முறைப்படி ஆராய்ந்து செய்து வருவீர்களாக! இது சண்டேசுவரரின் ஆணையோலை (கட்டளை)" என்பது மேற் குறித்த கல்வெட்டுப் பாடலின் பொருள்.

இக் கல்வெட்டுப்பாடல், மதுராந்தகம் தாலுக்கா, பெரும்பேறு கிராமம் தான்தோன்றி ஈசுவரர் கோயிலின் முன்மண்டபத்துத் தெற்குச் சுவரிலும் (1); தஞ்சைமாவட்டம் தஞ்சாவூர் தாலுக்கா திருக்களாவுடைய மகாதேவர் கோயிலின் வடபுறச் சுவரிலும் (2); தென்னார்க்காடு மாவட்டம் விழுப்புரம் தாலுக்கா திருவாமாத்தூர் அபிராமேசுவரர் கோயிலின் முன் பிராகாரம் தென்புறச் சுவரிலும் (3); புதுக்கோட்டை திருமெய்யம் தாலுக்கா கள்ளம்பட்டி மதீசுவர் கோயிலின் முன்புள்ள ஒரு கல்லிலுமாகப் பல இடங்களிற் செதுக்கப் பெற்றுள்ளது.

அரனார் மகனார்

சண்டேசுவரர் சிவபிரானுக்கு மகன்மை முறைமையினராக ஆட்கொள்ளப் பெற்றவர் என்பதனை,

"வந்து மிகைசெய் தாதைதாள்
மழுவால் துணித்த மறைச்சிறுவர்
அந்த உடம்பு தன்னுடனே
அரனார் மகனார் ஆயினார்"

எனவரும் பெரியபுராணச்செய்யுள் விளக்கும். சிவபிரானுக்குப் பிள்ளையாகும் பெருமை பெற்றமை பற்றியே, மூத்த பிள்ளையார் (விநாயகர்), இளைய பிள்ளையார் (முருகன்), காழிப்பிள்ளையார் (சம்பந்தர்) என வழங்கும் வரிசை முறையில் வைத்து, சேய்ஞலூர்ப் பிள்ளையார் எனச் சண்டேசுவரர் வழங்கப் பெறுகின்றார்.

தொண்டர் நாயகம் :

சண்டேசுரரே சிவனடியார்கள் அனைவருக்கும் தலைமையுடையவர் ஆவர். தொண்

1. No. 484, S.I.I. Vol VII
2. No. 1041, ,, ,,
3. No. 75, ,, ,, VIII
4. Ins criptions of Pudukota state, 989

டர்களுக்கெல்லாம் தலைவராக விளங்கும் சிறப்புடைமை பற்றிச் சண்டேசுவரர்க்குத் 'தொண்டர் நாயகம்' என்னும் ஒரு பெயர் உண்டு

தாதையைத் தாளற வீசிய
சண்டிக்கும் அண்டத் தொடுமுடனே
பூதலத் தோரும் வணங்கப்
பொற்கோயிலும் போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும்
நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே

அங்ஙனம் அடியார்களுக் கெல்லாம் தலைவராகத் திகழ்தல் பற்றியே, அடியார்களின் சார்பாளர் (பிரதிநிதி) என்ற முறையில், இறைவனின் திருவீதியுலாவில் சண்டேசுவரரும் கலந்துகொண்டு எழுந்தருளிச் சிறப்பிக்கின்றார்.

சண்டேசர் வரலாறு :

சோழநாட்டில் மண்ணியாற்றின் தென் கரையில் சேய்ஞலூர் என்று ஒரு சிவத்தலம் உள்ளது. சேய் ஆகிய முருகன், சிவபிரானை வழிபட்ட நல்ல ஊர் ஆதலின், அதற்குச் சேய்ஞலூர் (சேய்+நல்+ஊர்) எனப் பெயர் அமைந்தது.

அஃது அந்தணர்கள் நிறைந்து வாழும் ஊர்! சோழ அரசர்கள் முடிசூடிக் கொள்ளும் ஐந்து (காவிரிப்பூம் பட்டினம், உறையூர், திருவாரூர், சேய்ஞலூர், கருவூர்) நகரங்களுள், ஒன்றாகத் திகழ்வது அது. அதன் கண் காசிப கோத்திரத்தில் எச்சதத்தன் என்ற மறையவன் ஒருவன் இருந்தான். "அருமை மணியும் அளித்ததுவே நஞ்சும் அளிக்கும் அரவுபோல், இருமை விளைக்கும் ஒருவடிவாகியவன் அவன்". அவனுடைய மனைவி பவித்திரை என்பவள். இவ்விருவர்க்கும் விசாரசருமர் என்னும் மைந்தர் ஒருவர் வந்து உதயஞ் செய்தார். "முந்தையறிவின் தொடர்ச்சியினால் முகைத்த மலரின் வாசம்போல்" ஐந்தாண்டு நிரம்பும் முன்னரே, அவர் சந்த மறைகளும் ஆகமங்களும் தகவுற உணர்ந்து தெளிந்தார்.

ஒரு நாள் அச் சிறிய பெருந்தகையார், தாம் பள்ளிக்குச் செல்லுங்கால், வழியில் ஓர் இடையன் பசுநிரைகளை அடித்துக் கொடுமை செய்வதனைக் கண்டார். உள்ளம் வருந்தினார். பசுக்களின் அருமை பெருமைகளை அவனுக்கு எடுத்து அறிவுறுத்தி, "யானே இனி இந்நிரை மேய்ப்பேன்" என்று கூறி, அப்பசு நிரைகளை மேய்த்துவரத் தலைப்பட்டார்.

பசுக்கள் நன்கு புல்மேய்ந்து, மடிபெருகி முலைசுரந்து பால்கறந்து வந்தன. சேய்ஞலூர் மறையவர்கள் அனைவரும் மகிழ்ந்தனர். சில நாட்கள் சென்றன. பசுக்களுக்கு விசார சருமர்பால் மிகவும் அன்பும் ஈடுபாடும் பெருகின. அவரைக்கண்டாலே, அவைகள் மிகவும் களிகொண்டு, அவர்தம் அருகு சார்ந்து, உருகி நின்றன. அன்பின் மிகுதியால் கனைத்துச் சுரந்து, கறவாமே பால்பெருகிப் பொழிந்து நின்றன. பசுக்கள் பால் பொழிவது கண்ட விசார சருமர்க்கு, அஃது இறைவனுக்குத் திருமஞ்சனம் செய்யப் பயன் படுமே என்னும் குறிப்புத் தோன்றியது. "முன்னை அர்ச்சனையின் அளவில் தொடர்ச்சியால்" மூளும் அன்பு பெருகி, மண்ணியாற்று மணலில் சிவலிங்கமும், சிவாலயமும், கோபுரமும், திருச்சுற்றாலயம் முதலியனவும்வகுத்து, விளையாட்டே போலச் சிவாகம முறைப்படி சிவபூசையில் ஈடுபடத் தொடங்கி விட்டார். சண்டேசர் ஆன்நிரை மேய்த்து, ஆத்தி மரத்தின்கீழ்ச் சிவலிங்கம் தாபித்துப் பூசை செய்த தலமே, திருவாப்பாடி எனஇன்றும் விளங்கிவருகின்றது

சிவபூசை செய்யுங்கால், இவர் திருமஞ்சனம் ஆட்டும் செயலின் இயல்புணராத சேய்ஞலூர் மறையவர்கள், இவர் பசும்பாலைக் கறந்து வீணே மண்ணிற் கவிழ்த்து வீண் ஆக்குகின்றனர் என எச்சதத்தன்பாற் சென்று குறை கூறினர்.

எச்சதத்தன் அது கேட்டுச் சினந்து வந்து, குரா மரத்தின் மீது ஏறி ஒளித்திருந்து, இவர் சிவ பூசை செய்யுங்கால் திருமஞ்சனக் குடப் பாலைக் காலால் இடறிச் சிந்தினான். அது கண்ணுற்ற விசார சருமர் அருகே கிடந்த ஒரு கோலை எடுத்து எறிந்தார். அக்கோலே அருளால் மழுவாக மாறி, அவனுடைய இருதாள்களையும் வெட்டி, அவனைக்கீழே விழும்படி செய்தது. விசார சருமர் பின்னரும் சிவவழிபாட்டிலேயே மனம் ஊன்றி நின்றார்.

அந்நிலையில் சிவபிரான் வெளிப்பட்டு, பத்தி முதிர்ந்த பாலகனார் ஆகிய விசார சருமர்க்குக் காட்சி கொடுத்தார். "நம் பொருட்பால் ஈன்ற தாதை விழ எறிந்தாய். அடுத்த தாதை இனியுனக்கு நாம்" என்று அருளிச் செய்தார். கருணையினால் அவரை அணைத்துத் தடவி உச்சி மோந்து மகிழ்ந்தார். சிவபிரானின் திருமலர்க் கைகளால் தீண்டப்பெற்றமையால், விசார சருமரின் மாயாமல யாக்கை, சிவமயமாகி ஒளிவடிவம் பெற்றது. அவர் திருவருளில் மூழ்கித் திளைத்தார்.

சிவபிரான் அவரைத் தம் தொண்டர்களுக்கெல்லாம் தலைவராக ஆக்கினார். "எமக்கு நிவேதனம் செய்த பொருள்களும், யாம் உடுத்த ஆடைகளும், சூடிய மாலை முதலிய அணிகலன்களும் ஆகிய அனைத்தும், இனி நினக்கே உரிமையுடையன. யாம் நினக்குச் சண்டீசன் என்னும் பதம் தந்தோம்" என்று கூறி, அதற்கு அடையாளமாகத் தமது சடை முடியினின்று கொன்றை மாலையினை எடுத்து விசார சருமர்க்குச் சூட்டித் திருவருள் புரிந்தார்.

அங்ஙனம் விசார சருமருக்குச் சிவபிரான் சண்டேசப் பதம் அளித்து அனுக்கிரகம் புரிந்த நிலையே சண்டேச அனுக்கிரக மூர்த்தம் எனப்படும்.

காவியமும் ஓவியமும்:

இம் மூர்த்தத்தின் இயல்பினை விளக்கும் அழகிய சிற்பங்கள் கங்கைகொண்ட சோழபுரம் கோயில், சிதம்பரம் நடராஜர் கோயில், காஞ்சிபுரம் கயிலாச நாதர் கோயில் முதலிய இடங்களிற் காணப்படுகின்றன. இவற்றுளெல்லாம் கங்கைகொண்ட சோழபுரம் கோயிற் சிற்பம், கண்கவர் கவினும் கவர்ச்சியும் மிக்குடையதாகத் திகழ்கின்றது.

காவியமும் ஓவியமும் தம்முள் மிகவும் தொடர்புடையன. 'கவிஞனும் ஓவியனும் தமக்குள் ஒருவருக் கொருவர் உள்ளுணர்ச்சிப் பெருக்கம் ஊட்டிக் கொள்ளுகின்றனர்' (Poets and painters inspire each other) என்று அறிஞர்கள் கூறுவதுண்டு. கவிஞர்களின் கவிதைக் கருத்துக்களுக்கு ஓவியர்கள் சித்திரம் தீட்டுதலும், ஓவியர்கள் தீட்டிய சித்திரங்களை வியந்து கவிஞர்கள் கவிதை இயற்றுதலும் இயல்பேயாகும். மேலைநாட்டு இலக்கியங்களில் மைக்கேல் ஏஞ்சலோ (Michael Angelo), ரஃபேல் (Raphale) என்னும் புகழ் மிகுந்த ஓவியர்களின் வினைவைக் காணலாம்.

அம் முறையில் கங்கை கொண்ட சோழபுரம் கோயிற் சிற்பத்தினைச் சேக்கிழார் சுவாமிகள் பலகாற் கண்டு மகிழ்ந்து வியந்திருத்தல் கூடும். அதன் பயனாகவே,

அண்டர் பிரானும் தொண்டர்தமக்
கதிப னாக்கி அனைத்தும் நாம்
உண்ட கலமும் உடுப்பனவும்
சூடு வனவும் உனக்காகச்
சண்டீ சனுமாம் பதம் தந்தோம்
என்றங் கவர்பொற் றடமுடிக்குத்
துண்ட மதிசேர் சடைக்கொன்றை
மாலை வாங்கிச் சூட்டினர்

என்னும் பெரிய புராணச் செய்யுளைச் சேக்கிழார் அருளிச் செய்தனராதல் கூடும்.

முடிவுரை

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய முதலாம் இராஜராஜ சோழனின் (கி. பி. 985-1014) புதல்வன் ஆகிய முதலாம் இராஜேந்திர சோழன் (கி. பி. 1012-1014), தன் வடநாட்டுப் போர்களின் வெற்றிக்கு அறிகுறியாகப் புதிதாக அமைத்த தலைநகரமே 'கங்கை கொண்ட சோழபுரம்' ஆகும். இராஜேந்திர சோழனுக்குப் பின்,

முதலாம் இராஜாதிராஜன் (கி. பி. 1044-1052)
இரண்டாம் இராஜாதிராஜன் (கி.பி. 1052-1063)
முதலாம் வீரராஜேந்திரன் (கி. பி. 1063-1069)
அதிராஜேந்திரன் (கி. பி. 1069-1070)
முதலாம் குலோத்துங்கன் (கி. பி. 1070-1120)
விக்கிரம சோழன் (கி. பி. 1118-1135)

என்னும் அரசர்கள் வரிசை முறையே ஆட்சி நடத்தினர். அதன் பின்னர், பட்டத்திற்கு வந்து முடிசூடிக் கொண்டு ஆட்சி செலுத்திய அரசனே இரண்டாம் குலோத்துங்க சோழன். அவன் காலத்தில்தான் (கி. பி. 1133—1150), சேக்கிழார் சுவாமிகள் அமைச்சராக விளங்கியிருந்தார் என்பது வரலாறு.

ஆதலின் சேக்கிழார் சுவாமிகள் கங்கை கொண்ட சோழ புரத்திற்குப் பற்பல முறைகள் சென்று தங்கியிருந்திருப்பார் என்றும்; அங்குள்ள கங்கை கொண்ட சோழேச்சுரர் கோயிலுக்குச் சென்று பலகால் வழிபட்டிருப்பார் என்றும்; அப்போதெல்லாம் அக்கோயிலில் அமைக்கப் பெற்றுத் திகழும் அழகின் மிகுந்த சண்டேசானுக்கிரக மூர்த்தச் சிற்பம் அவர்தம் கண்ணையும் கருத்தையும் கவர, அதனை அவர் கண்டு வியந்து பெரிதும் மகிழ்ந்திருப்பார் என்றும், நாம் எண்ணி இன்புறலாம். —ஆசிரியர்.

அயந்திகழ் நறுங்கொன்றைத் தெரியலான்

திரு. கே. எம். வேங்கடராமையா, M.A.,B.O.L., திருப்பனந்தாள்

தலைப்பு :—

கலித்தொகை என்ற சங்கத் தொகை நூலில் நெய்தற்கலியில் இறுதிப் பாடலின் முதல்வரியே, மேலே கொடுத்த தலைப்பாகும். இந்நெய்தற் கலியைப் பாடியவர், கலித்தொகையைக் கோத்தவராகிய நல்லந்துவனார் என்பவராவர். இவர் மதுரையாசிரியர் நல்லந்துவனார் எனவும் வழங்கப் பெறுவர். இவரது பாடல்களினின்று, இவரது சமயவறிவு புலப்படும். இந் நெய்தற்கலி இறுதிப்பாடலினின்று அறியப் பெறுவனவற்றை இங்குக்காணலாம்:

பாட்டு நுதலிய பொருள்

ஒருதலைவன், 'இளவேனிற் பருவத்தில் திரும்பி வருவேன்' என்று தலைவி யிடம் கூறிப் பொருள் ஈட்டும் வினையை மேற்கொண்டு சென்றான். தலைவியும் ஆற்றியிருந்தாள். அவ் விளவேனிற் பருவமும் வந்தது; தலைவன் வரவில்லை; தலைவி பிரிவாற்றாமல் வருந்துவாள் ஆயினள். தலைவியை நோக்கித் தோழி கூறுகின்றாள் :—

ஞாயிறு எங்கும் சுடுகிறது; மூங்கில்கள் உலர்கின்றன; காய்ந்த மூங்கில்கள் உராய்ந்தமையால் தீப்பற்றுகிறது; தீ வானம்வரை ஓங்கி எரிகிறது. விலங்குகள் எல்லாம் இங்கும் அங்குமாகத் திரிகின்றன; அதனால் பலவழிகள் காணப்படுகின்றன; இடை இடையே மலைகளின் குறுக்கீடு — இத்தகைய அஞ்சத்தக்க வழிகளையுடையது சுரம் — இச் சுரவழியில் தலைவர் சென்றிருக்கிறார்.

தலைவன் எதற்காகப் பிரிந்து சென்றான் ? பொருள் ஈட்டுவதற்காகத்தானே பிரிந்தார்

அவர் சென்றவழியில் மரங்கள் சிவந்து கருகியிருக்கின்றன; கற்களும் காய்ந்து சுடுகின்றன. அவ்வழியில் செல்வது என்றாலே யாருக்கும் அச்சத்தைத்தரும். ஆனால் தலைவன் இவற்றைப் பொருட் படுத்தாமல் சென்றார் அல்லவா ? எதற்காக ? விழுப்பொருள் ஈட்டுதற்கல்லவா ?

இங்ஙனம் தலைவர் ஒண்பொருள் ஈட்டுதற்குச் சென்றிருக்க, உன் மேனி நிறமோ பசக்கிறது; அணிகலன்களால் அழகு செய்யப்படினும், நீ அழகிழந்து காணப்படுகிறாய்; உன் கூந்தலில் தலைக்கோலங்கள் செய்யப் படினும், நீ அழகின்றித் தோன்றுகிறாய்; காரணம், பிரிவாற்றாமையே,

இவ்வாறு நீ பிரிவாற்றாது இருத்தலைத் தலைவர் அறிவார். அவர் உன்னைக் கைவிட்டுப் பொருளையே நினைத்து இருப்பாரா? இருக்கவே மாட்டார்.

ஆகையால், மடமொழியே! ஆதிரையான் சூடும் சண்பகமலர் காலம் தவறாது மலர்வது போலத் தாம் கூறிய பருவம் தவறாது தலைவன் வருவார்! இங்ஙனம் கூறித் தலைவியைத் தோழி ஆற்றுவித்தாள்.

உவமைகள்

தலைவன் செல்கின்றவழியில் மூங்கில் தீப் பற்ற, அத்தீ வானம்வரை ஓங்கி எரிகிறது என்று தோழி கூறினாள் அல்லவா! இதைக் கூறவந்த ஆசிரியர், 'கொன்றைத் தெரியலான் திரிபுரத்தை எய்தபோது தோன்றிய நெருப்பு விசும்புற ஓங்கி எரிந்தது போல, மூங்கில்கள் தீப்பற்றி எரிந்தன' என்றார்.

தலைவன் பிரிந்தது பொருள் தேடுதற் பொருட்டு அல்லவா! 'அப்பொருள் இறைவனை ஒத்தது' என்று கூறுகிறார் ஆசிரியர் நல்லந்துவனார். இறைவனை ஒத்தது பொருள் என்று கூறுகிறவர், அவ்விறைவனைப் பிறங்கு நீர்

சடைக்கரந்தான், உருவவேற்றூர்தியான், புதுத் திங்கட் கண்ணியான் என்ற சொற்றொடர்களால் குறித்துள்ளார்.

இறைவனை ஒத்த பொருள்

பொருள் அழிவது; இதுவே யாவரும் கூறுவது. ஆனால் பொருள் அத்தகையது அல்ல. அது ஒருவரிடத்திலேயே நிலைத்திராது; பலரிடத்திலும் செல்லும்—எனினும் பொருளுக்கோ அழிவில்லை. ஆகவே 'பொருள் ஒன்றாலும் தனக்குக் கேடு இன்றி இருத்தலின்' பொருள் இறைவனை ஒத்ததாயிற்று. ஒன்றாலும் தனக்குக் கேடின்றி இருக்கும் இறைவனையே இப் பாடலில், அயந்திகழ் நறுங் கொன்றைத் தெரியலான், இயங்கெயிலெய்தான், பிறங்கு நீர் சடைக்கரந்தான், உருவ வேற்றூர்தியான், புதுத் திங்கட்கண்ணியான், ஆதிரையான், என்ற சிறப்புச் சொற்றொடர்களால் நல்லந்துவனார் குறித்துள்ளார். இச் சொற்றொடர்கள் யாவும் சிவபெருமானைக் குறிப்பனவேயாம்.

அயந்திகழ் நறுங்கொன்றைத் தெரியலான்

'நீர்நிலைக்கருகே விளங்குகிற மாலை போன்ற கொன்றை மாலையையுடையவன்' என்பது இவ்வரியின் பொருள்.

சிவபெருமான் கொன்றையைக் கண்ணியாகவும், தாராகவும் மாலையாகவும் சூடுபவர் என்பது, 'கார்விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்த் தாரன் மாலையன் மலைந்த கண்ணியன்' என்ற அகநானூறு கடவுள் வாழ்த்துச் செய்யுளால் அறியலாம். 'கண்ணி கார்நறுங் கொன்றை காமர் வண்ணமார்பிற் தாருங் கொன்றை' என்பது புறநானூறு முதற் செய்யுள். 'கொன்றைத்தார் சுவல் புரள' என்பது கலித்தொகைக் கடவுள் வாழ்த்து.

இயங்கெயில் எய்தல்

திரிபுரம் எரித்தவர் சிவபெருமான். இதனைக் கலித்தொகையில், 'முக்கண்ணான் மூவெயிலும் உடன்றக்கால் முகம்போல ஒண்கதிர் தெறுதலின்' என்று பாலைக்கலியில் முதற் செய்யுளில் கூறியுள்ளார். புறம் 55-ம் ஆம் பாடலுள் மருதன் இளநாகனாரும்,

"ஓங்குமலைப் பெருவில் பாம்புஞாண் கொளீஇ
ஒருகணை கொண்டு மூவெயில் உடற்றிப்
பெருவிற லமரர்க்கு வென்றி தந்த
கறை மிடற் றண்ணல் காமர் சென்னிப்
பிறைநுதல் விளங்கும் ஒருகண் போல
வேந்துமேம் பட்ட பூந்தார் மாற"

என்று முப்புரம் எரித்தமையைக் குறித்திருக்கிறார். இதனுள் மலையை வில்லாகக் கொண்டமையும், பாம்பை நாணாகக் கொண்டமையும் ஆசிரியர் குறித்தார். அன்றியும் திரிபுரம் எரித்த பரமனைக் கறைமிடற்றண்ணல் என்றும், அவருடைய நுதலில் ஒரு கண் விளங்கும் என்றும், குறித்தமை குறிக்கொண்டு அறிதற்பாலன. மருதன் இளநாகனார் மூவெயில் என்றதை நல்லந்துவனார் இயங்கெயில் என்று கூறியதும் நோக்கற்பாலது.

பிறங்குநீர் சடைக்கரந்தான்.

சிவபெருமான் தன்சடாபாரத்தில் கங்கையைச் சூடியிருக்கிறார். இதனைத் 'தேறுநீர் சடைக்கரந்து' என்று கலியும், 'நீரறவறியாக் கரகத்துத் தாழ்சடை' என்று புறமும் புகலும்.

உருவவேற்றூர்தியான்

சிவபெருமானுக்கு ஊர்தி இடபம், 'ஊர்தி வால்வெள்ளேறே' என்பர் பாரதம் பாடிய பெருந்தேவனார் (புறம்-1.)

புதுத்திங்கட் கண்ணியான்

திங்களைச் சிவபெருமான் கண்ணியாகச் சூடியுள்ளார். 'பிறைநுதற் பொலிந்த சென்னி' என்று ஔவையார் கூறுவர் (புறம், 9 1). 'பிறைநுதல் வண்ணம் ஆகின்று' என்பர் பாரதம் பாடிய பெருந்தேவனார் (புறம்—1.)

ஆதிரையான்

'ஆதிரை நாள் உகந்தானும் ஆரூர் அமர்ந்த அம்மானே' என்பர் அப்பர். இதனால் ஆதிரை நாள் சிவபெருமானுக்குச் சிறந்த நாள் என்பது போதரும். 'ஆதியன் ஆதிரையன்' என்பதும் சம்பந்தர்—சுந்தரர் வாக்கு.

திருநாவுக்கரசர் அருளிய தேவாரம்

தொண்டைமண்டலாதீனம் குருமகா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் அவர்கள், காஞ்சிபுரம்.

சென்ற இதழில், ஒரு திருத்தாண்டகத்தின் ஒரு சொல்லின் உண்மையைக் குறித்து எழுதியது அறிஞர் பலர்க்கு விருந்தாயிருக்கலாம். இவ்வாதீன நாவலர் சைவத் திருவாளர் திரு க. வச்சிரவேலு முதலியார் அவர்கள் நேற்றிரவு இம்மடாலயத்தில் நல்லோர் பல்லோர் முன்னர் அத்திருத்தத்தின் பொருத்தத்தை நன்கு வெளியிட்டு, பிழைபட்ட பாடத்தால் உண்டாய சீர்க் குறைவையும் குறித்துச் சொல்லி மகிழ்வித்து மகிழ்ந்தார்கள். மேலும் சில, அவர்களிடம், தேவாரப் பதிப்புகளில் உள்ள பிழைகளைக் சொன்னோம். அவர்கள் அவை பிழை என்றே கொண்டு, திருமுறைகளிலும் மெய்கண்ட நூல்களிலும் செய்யற்பாலதொரு கடன்மையை வற்புறுத்திப் பேசினார்கள். அக்கடன்மைக்குத் துணையாகலாம் என்று இக்கட்டுரையிலும் தேவாரத்தில் கண்ட சிற்சிலவற்றை எழுதலானோம். 'தேவாரம்' என்னும் பெயர் 'தேவாராதநம்' என்றதன் மரூஉப் பெயர். இது மலையாள வழக்கில் இன்றும் உளது. இப்பெயர் திருநாவுக்கரசர் அருளிய திருமுறைக்கே உரிய பெயராயிருந்தது. காலப்போக்கில், மூவர் அருளியவற்றிற்கும் பொதுவாகிவிட்டது. காரணம்:—கால அடைவில் தேவாராதநம் நிகழ்பொழுதில் மூவர் அருளியனவும் ஓதப்பெறுவதேயாகும்.

திருஞானசம்பந்தர் அருளியவற்றைத் 'திருக்கடைக் காப்பு' என்றும், சுந்தரமூர்த்தி நாயனார் அருளியவற்றைத் 'திருப்பாட்டு' என்றும் முன்னோர் சொன்ன உண்மையை உணர்ந்தோர்க்கு, அப்பர் அருளியவற்றை வேறு பெயரால் குறித்திருத்தல் வேண்டும் என்பது விளங்கும், முன்னையவர் அருளியவை, முதன் முதலில், தேவாராதந காலத்தில் ஓதத் தொடங்கி நிகழ்ந்தமையால் அவை மாத்திரம் அப் பெயர் பெற்றன. (நிகழ்தல்-பிரசித்தியடைதல்) இன்றும் தேவாராதனம் கழிஞ்சுதோ என்பர் மலையாளத்து வைதிகாசார முடையவர். பூஜை செய்தாயிற்றோ என்பது அதன் கருத்து.

தேவாரத்தில் (நாலாந் திருமுறையில்) திருக்கழுமலம்' என்னுப் (சீகாழிக்குரிய பன்

'ஆதிரையான் ஆதிரையான் என்றென்
றயர் வுறுமால்
ஊர்திரைநீர் வேலி உலகு'

என்பது முத்தொள்ளாயிரம் கடவுள் வாழ்த்துப் பாடல். எனவே 'ஆதிரையான்' என்பது சிவபெருமானையே குறித்தல் காணலாம்.

சிவசிந்தனை

மேலே நெய்தற்கலி இறுதிப் பாடலிற் கண்ட சிறப்புச் சொற்றொடர்கள் எல்லாம் சிவபெருமானைக் குறிப்பன என்பது வெள்ளிடைமலை. இங்ஙனம் அமயம் வாய்ப்புழி எல்லாம், சங்கச் சான்றோர் உவமையில் பாடும் பொழுதும், சிவபரம் பொருளைச் சிந்தித்துப் பாடல்களில் அமைத்துப் பாடினார்கள். இதனாற் சங்கச் சான்றோர்களின் இறையுணர்ச்சியும் சிவசிந்தனையும் நன்கு விளங்குகின்றது. எனவே அன்னோர் போல நம்மனோரும் சிவசிந்தனையுடையோராய்,

"பால்புரை பிறைநுதற் பொலிந்த
சென்னி
நீல மணிமிடற் றொருவன் போல
மன்னுக!" வாழ்க!!

❋

னிரு பெயருள்) ஒன்றனுக்குரிய திருப்பதிகத்திலே, ஏழாவது திருப்பாடல் இது :—

"முற்றிக் கிடந்துமுந் நீரின் மிதந்துடன் [மொய்த்தமரர்
சுற்றிக் கிடந்து தொழப்படுகின்றது சூழரவம்
தெற்றிக்கிடந்து வேங்கோன்றளந்தூன்றி [வெண்டிங்கள் சூடும்
கற்றைச் சடைமுடியார்க்கிடம் ஆய கழுமலமே"

இதன் மூன்றாவதடியில், தெற்றிக்கிடந்து என்றதற்கும் வெண்டிங்கள் என்றதற்கும் இடையில் உள்ள தொடர், எம் மனோர்க்குப் பொருள் விளங்காதவாறுளது. இதைக் குறித்து, தருமையாதீனத்திலே இருந்த காலத்தில், எம்மால் எழுதப் பெற்றும், சீலத்திரு கயிலைக் குருமணி அவர்களால் உலகிற்கு வழங்கப் பெற்றும் நிலவும் நாலாந்திருமுறைக் குறிப்புரை யில் எழுதியிருப்பதையும் நோக்குதல் நன்றாகும். இதிலும் அதன் உண்மையை உணர்த்துவது, 'திருக்கோயில், வழிபாடு புரிவாருள், தமிழ்நலம் உணர்வார்க்குச் சாலக் களிப்பளிக்கும்.

"திருவாரூர்ச் செப்பேட்டின்படி யெழுதியதாய்க் கயிலாய பரம்பரை தருமபுர ஆதீனத்திலிருந்த பிரதிக்கிணங்க வித்வான். காஞ்சீபுரம் சபாபதி முதலியார்" ஆராய்ச்சி செய்து தந்த பதிப்பில், 'வெங்கோன்றளந்தூன்றி'என்றுளது. இஃது அட்சய யாண்டு புரட்டாசித் திங்களில் வெளியானது என்று குறிக்கப்பட்ட பதிப்பு.

திருஞானசம்பந்த மூர்த்திசுவாமிகளும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் அருளிய திருமுறைகள், மேற்படி சபாபதி முதலியாரால், திருவாவடுதுறையாதீனத்துப் பிரதிக்கிணங்க ஆராய்ந்ததாக அவ்வெளியீடு தெரிவிக்கின்றது.

சமாஜப் பதிப்பில் உள்ளவாறு எம் நினைப்பில் இல்லை. அப்பதிப்பு இப்போது எம்பால் இல்லை. மயிலை கிழார் இளமுருகனார் 1953இல் வெளியிட்ட பதிப்பு, எம் அன்பிற்குரிய பெருநிலக்கிழார் திருவாளர், கு. ஐயா சுப்பிரமணிய முதலியார் அவர்களால் சில திங்களின் முன் தரப்பட்டது. அதிலும், 'வெங்கோன்றளந்தூன்றி' என்றே இருக்கக் காணலாம். இதில் ஈரெழுத்தும் திரிவிக்கிரமாவதாரம் கொண்டன. வேறு சில பதிப்பிலும் இவ்வாறுள்ளன.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடாலயத்தின் பன்னிருதிருமுறைப் பதிப்பு நிதி வெளியீட்டிலும் இவ்வாறே இருப்பினும், அதில் ஒரு திருத்தமும் காணப்படுகின்றது. 'தூன்றி' என்பது 'துன்றி' என நெடில், குறிலாகி, உண்மைப்பாடத்தை உய்த்துணரத்துணை புரிவதாயிற்று. ஆயினும் 'வெங்கோன்றளம்' என்பதைஉணர எங்கோன்றளம் ஆகிய திருக்கச்சியேகம்பத்தை வழிபடல் இன்றியமையாதது.

அறிவித்தால் அறியும் இயல்புடைய உயிர்கட்கு, அவன் திருவருள்தானே உணர்த்த வல்லது. அத்திருவருளைத் துணைக்கொண்டு ஆராய்ந்தால் இதன் உண்மை புலனாகாது போமோ ?

திருக்கழுமலத்துப் பெருமானார் கற்றைச் சடைமுடியில், சூழரவம் தெற்றிக்கிடக்கின்றது. வெண்டிங்கள் சூடப்பட்டுளது. இவ்விரண்டும் தெளிவாகியவை. இடையில் உள்ளதும் தெளிவாதற்குரியதே. 'வெண்டிங்கள்' என்ற பண்புத் தொகைப் பெயர்ச் சொல்லிற்கு முரண்டொடையாகச் 'செங்கொன்றை' என்னும் பண்புத் தொகைப் பெயர் அப்பர் திருவுள்ளத்தில் தோன்றிச் செங்கொன்றை வெண்டிங்கள் என முரணடை கொடுத்தருளினார். 'நீரேறு செஞ்சடைமேல் நிலா வெண்டிங்கள் நீங்காமை வைத்துகந்த நீதியானே' என (6-84-10 6-99-5; அருளிய திருத்தாண்டகத்தில் அமைந்த முரண்டொடையை ஈண்டு நோக்குக. 'செஞ்சடை வெண்மதி' (6-4-53) என்றதும் அறிக. 'வெங்கோன்றளம்' என்றிருப்பதால், (ளம்' என்றதை நோக்கிக்) கூவிளம் கூதளம் எனக் கருதலாம். 'கோன்ற' என்றதை நோக்கின், கொன்றை எனக் கருதுவதே ஆராய்ச்சியறிவுடைமைக்குத்தக்கதாகும்.

'வெண்மதி பைங்கொன்றை மாலையுங் கண்ணியும் ஆவன (4-17-8 எனவும் அப்பர் திருவாக்கில் வந்திருப்பதால், பைங்கொன்றை என்றோ செங்கொன்றை என்றோ ஈண்டுக் கொள்ளலாம். ஆயினும் 'பொற்றூது மலர்க் கொன்றை சூடினான். 'பொன்திகழ் கொன்றைமாலை' 'பொன்மணியம் பூங்கொன்றை மாலை' 'பொன்னங் கொன்றை' 'பொன்னலத்த நறுங்கொன்றைச் சடையினான்' 'பொன்னிதழ்க் கமழ்தார்' 'பொன்னிலங்கு கொன்றையந்தார்மாலை' என்று நாவரசர் பாவலங்கலில் வருதலாலும், 'செம்பொன்' என்னும் வழக்காலும் 'செங்கொன்றை' எனத்

தடையில்லை. தங்கத்தை ஒத்தகொன்றையை மட்டும் 'பைங்கொன்றை' என்பது மரபு. 'செம்பொன்' என்பது பொன்னையும் 'பைம்பொன்' என்பது தங்கத்தையும் உணர்த்தும் தமிழ் வழக்குண்மையை அறிஞர் நன்கறிவர்.

'செங்கொன்றை' யோ 'பைங்கொன்றை' யோ யாதானுமாகுக. இத் திருவிருத்தத்தில் கொன்றையும் துன்றி என்பது தக்கதாதல் புலவர்க்குப் புலப்படும்.

ஐந்தாவது திருமுறையில், தொண்ணூற்றேழாவது திருப்பதிகத்தில், இருபத்தொன்பதாவது திருக்குறுந் தொகைப்பாடலாக ஒன்று இருக்கிறது. அதைத் திருமந்திரத்திலும் காணலாகின்றது. இரண்டிற்கும் வேறுபாடு உண்டோ எனின், சிறிது உண்டு.

திருமுறையில் உள்ளவாறு இது :—

" தன்னிற் றன்னை யறியுந் தலை மகன்
தன்னிற் றன்னை யறியிற் றலைப்படும்
தன்னிற் றன்னை யறிவில னாயிடில்
தன்னிற் றன்னையும் சார்தற் கரியனே."

திருமந்திரத்தில் உள்ளவாறு இது :—

" தன்னினில் தன்னை யறியுந் தலைமகன்
தன்னினில் தன்னை யறியத் தலைப்படும்
தன்னினில் தன்னைச் சார்கிலன் ஆகில்
தன்னினில் தன்னையும் சார்தற் கரியவே."

இவ்விரண்டனுள்ளும் தவறு உண்டு. இப்பாடலின் உண்மையுருவம் சிறிது வேறுபடும். இலக்கணமும், கருத்துக்கு ஏற்ற சொல்லமைப்பும், பொருள் நோக்கிற்கு ஏற்ற தொடரமைப்பும் திருமந்திரத்திலும் தேவாரத்திலும் குற்றம் உற்றுள்ளன.

திருமந்திரத்தில் அரியனே என்பது அரியவே என்றதே தவறு. தேவாரத்தில், 'அறிவிலன்' என்றதும் 'தன்னில்' என்றதும் திருமந்திரத்திற் காணப்படும் பாடத்தின் வேறாகும். திருமந்திரத்தில் வெண்டளை பிழையாவாறு பாடல்கள் அமைந்துள்ளன. இவ்வுண்மையை உணராமல் பாடபேதங்களை மட்டும் நோக்கி நூலைக் கெடுத்தனர் சிலர். அவ்வுண்மைத் திறத்தைத் தனிக்கட்டுரையில் வெளியிடுவோம். திருமுறைகளுள் திருமந்திரமாலை (10) யும் பிரபந்தக் கட்டளை (11) யும் நல்ல வெளியீடாக வரும் நற்காலத்தைச் சைவத் தமிழ் மக்கள் எதிர்நோக்கியிருப்பது பெரியதொரு கடனாகும்.

'அறியத் தலைப்படும்' அறியிற்றலைப்படும்' என்ற பாடத்தில், தலைப்படல் ஒன்றே ஈண்டு நினைவிற் கொள்ளற்பாலது. தலைப்பாடும் சார்வும் ஒரு பொருளாதல் பிற்கால வழக்கு. தொல்காப்பியர் காலத்திலும் அதற்கு அணித்தாய காலத்திலும் அப்படி இல்லை. அத்தலைப்படற் பொருட்டாய சார்பு மூன்றுவதடியில் இருத்தல் தக்கதே. அத்தகுதியில், 'சார்கில னாகில்' 'சார்கிலனாகிடில்' என்று இருத்தல் வேண்டும்; வெண்டளைக் கேடு பற்றிய குற்றம் கொள்ளாதவகையில் அது பொருந்தும். திருமந்திரப் பாடமெல்லாம் வெண்டளை பிழையாதவை. அச்சிடுவித்தோர் முதலியோர் அதை அறியார். 'சார்கிலன் ஆகிடில் சார்தற்கரியனே' என்பதே பொருத்தமாகும்.

இப்பாடல் தேவாரத்தில் இருத்தல் பொருந்தாது. தேவாரத்தில் உயிரும் மெய்யுமாந் தமிழெழுத்து முப்பதும் ஆய்தமும் முதலாக நின்ற திருக்குறுந்தொகைகளே (அத்திருப்பதிகத்தில்) இருத்தல் வேண்டும். வ,ற, ன என்னும் மூன்றெழுத்துக்கும் உரிய பாடல்கள் எங்கேயோ ஒளித்துக்கொண்டிருத்கின்றன. 'நகர வெல்கொடி' எனத் தொடங்கும் திருக்குறுந் தொகையில், 'ஙகரவெல்கொடி' என்றிருத்தல் வேண்டும். 'இலங்கை மன்னனை' என முதலும் திருப்பாடல் 'இயக்கர்கின்னரர்' என்னும் திருப்பாடலுக்குப் பின் இருத்தற்குரியது. னகரத்திற் குரிய திருப்பாடல் இருந்த இடம் திருமந்திரப் பாடலின் போலிக்கு உறைவிடம் ஆயிற்று. ஆகவே, னகரத்தை இரண்டாவதெழுத்தாக உடைய திருப்பாடல் இருத்தற்குரிய 'இடத்தை'ந் தனதாகக் கொள்ளும் 'வலத்தை எப்படியோ பெற்று, 'தன்னினில்' எனத் தொடங்கும் திருமந்திரப்பாடல் தேவாரப் பாடலாய்விட்டது. அத்திருப்பதிகத்தை நோக்கி வணங்கி முதற்றிருப் பாட்டுக்குப் பின்னர், 'அகரம் முதலிய பன்னீருயிரும்' ஆய்தமும் தகர முதல் பதினெட்டுடம்பும், முறையே முதலாக நிற்கப் பாடியருளிய அப்பர் சுவாமிகளது தமிழ்ப்பற்றின் திறந்தைப் போற்றிவருதல் உண்மைச் சைவர்க்கு உற்ற கடனாகும். அக்கும் எனத் தொடங்கும்திருப்பாடல் அ·.கேனத்திற்கு உரியது. அதன் பின்னுள்ளவை 'ககரம் முதலிய மெய்' பதினெட்டிற்கும் உரியன. அவற்றுள், முற்குறித்த மூன்றெழுத்தும் முதலாக நின்ற திருப்பாடல்களை நாடித் தேடிப் பாடி வரும் நலம் என்று வாய்க்குமோ? எந் நூலிலிருந்து கிடைக்குமோ? ★

வெள்ளையர் பாராட்டிய கோயில்

திரு. C. M. இராமச்சந்திரன் செட்டியார், B.A., B.L., கோவை.

செந்தமிழ் பாண்டி நாட்டுத் தலைநகராகிய மதுரையப்பதி மிகப் பண்டைய வரலாற்றைப் படைத்த தொன்ருகும். அந்நகர்க் கோயிலும் மிகப் பண்டைய வரலாற்றைக் கொண்டதே. மீனுட்சியம்மை திருக் கோயில் என்ருல் நமது நாட்டுக் குடிமக்கள் எல்லாராலும் உள்ளத் தெழுந்த அன்போடு போற்றப்படுவதாகும். என்ருலும் அக்கோயிலில் கிடைக்கும் வரலாற்றுச் சான்றுகள் குறைவானவையே. மிகப் பழமையானவையும் அல்ல. ஏனெனில் வடநாட்டிலிருந்து வந்த முசுலிம் படையெடுப்புக்களில் பண்டைய மண்டபங்கள் பல அவற்றில் இருந்த அரிய சான்றுகளோடு அழிக்கப்பட்டன. சில சின்னங்களின் பீடங்கள் மட்டும் நின்றன. தற்போதுள்ள கட்டிடங்கள் பெரும்பாலும் நாயக்க மன்னர்களின் பேரன்பினுல் தோன்றியவை. அவ்வமிசமும் 1736-ல் அழிந்ததற்குக் கர்னுடக நவாப்புக்களே காரணர்கள். சந்தா சாயிபு என்ற பேராசைக் கொடுங்கோலன் நாயக்க வமிசத்துக் கடைசி அரசியைச் சிறையிடவே அவள் இறந்தாள். கோயில் சொத்துக்களை அழித்ததுமன்றி நிலங்களையும் பறி முதல்செய்து கொண்டான். கோயில் மூர்த்திகளும் மானு மதுரையில் சேதுபதியால் பாதுகாக்கப்பட்டன. மராட்டிய தலைவன் முராரிராவ் சந்தாசாயிபைத் தோற்கடித்து மூர்த்திகளை மீட்டி வந்து கோயிலில் சேர்ப்பித்துச் சொத்துக்களை கோயிலுக்கு மீட்டி வைத்தான்.

1759-ல் மதுரையும் அதனுடன் கோயிலும் யூசப்கான் என்ற அதிகாரி வசம் செல்லவே கோயில் ஒருவாறு கவனிக்கப்பட்டது. ஆனுல் 1750 ஹைதர் என்ற முசுலிம் தலைவன் கருநாடகத்தில் புகுந்து கொள்ளை அடித்தபோது மதுரை கோயில் மிகவும் துன்புறுத்தப்பட்டது. கருநாடக நவாப்புகள் பலவீன மடைந்தார்கள் 1801ல் அந்த நவாப்பு மதுரை ஆட்சியை ஆங்கிலருக்குத் தந்துவிட்டான். மதுரைக் கோயிலும் அதன் சொத்துக்களும் ஆங்கிலர் வசம் வந்து விட்டன. அப்போது ஆட்சி புரிந்தது கிழக்கிந்தியக் கம்பெனி என்ற வர்த்தக சபையார். அவர்கள் கலெக்டர் என்ற அதிகாரியை நியமித்து அவர்கள் மூலமாகக் கோயில்களையும் மேற்பார்வை செய்தார்கள். அவ்வாறு மதுரைக் கோயிலை ஆட்சிபுரிந்த முதல் வரிசைக் கலெக்டர்கள்—

1. தாமஸ் போயர் ஹூர்டிஸ்-1796-1802 Thamas Bowyer Hurdis-
2. ஜார்ஜ பேரிஷ்-George Parish 1803
3. ரௌஸ் பீட்டர் Rous Peter 1816
4. ஹென்ரி விவியாஷ்-Henry Viveash 1828

12. லாவிங்க்ஸ்-Lavings 1861

இவர்கள் 1842 முதல் 1860 வரையில் கலெக்டர்கள் நேரில் ஆட்சி புரியாமல் தருமகர்த்தர்கள் மூலம் பரிபாலித்தார்கள். நேரில் ஆட்சி செய்த கலெக்டர்களில் ஹூர்டியும் ரௌஸ் பீட்டரும் கோயிலுக்கு நல்ல முறையில் அன்புப்பணி புரிந்தார்கள்.

ஆங்கிலர் ஆட்சி எடுத்துக்கொண்டதும் முதன் முதலில் நியமிக்கப்பட்ட கலெக்டர் ஹூர்டிசு (Hurdis) என்றவர் மீனுட்சி அம்மன் கோயிலுக்குச் சேர்ந்த சொத்துக்களைக் கணக்கெடுத்து ஒரு அறிக்கை வெளியிட்டார். அவருடைய மதிப்பின்படி கோயில் சொத்துக்களின் ஆண்டு வருமானம் ரூ 50292. அந்த அறிக்கையின்படி அர்ச்சகர் முதலிய சிப்பந்திகள் தம் இட்டப்படி கொள்ளையடித்து வந்தார்கள் என்றும் சொத்துக்களை பாராதீனம் செய்து வருமானங்களைத் திருடிக்கொண்டு பிழைத்தார்கள் என்றும் கூறியுள்ளார். ஆண்டு வருமானம் 50292 ரூபாயில் 12000 சக்கிரங்கள் மட்டும்

கோயில் பூசை முதலிய அவசியமான செலவு களுக்குக் கொடுத்துவிட்டு மீதியை சர்க்காரி லேயே வைத்துக்கொண்டு ஒருவரும் திருடா மல் பாதுகாக்க வேண்டியது அவசியம் என் றும் எழுதி வைத்தார். அந்த அறிக்கையினால் கோயில் சொத்துக்கள் திருட்டுப் போகாமல் பாதுகாக்கப்பட்டன. செலவு செய்வதிலும் கண்டிப்பான மேற்பார்வை ஏற்பட்டது. இந்த வகையில் கோயில் பரிபாலனம் செய்வதற்குத் தக்கவராக ஹார்டிஸ் இருந்தார் நின்றுபோன பூசை, திருவிழா முதலியவைகள் நன்கு நடை பெற்றன.

இனி மூன்றாவது கலெக்டர் ஆக வந்து வேலை பார்த்தவர் ரௌஸ்பீட்டர் (Rous Peter) என்பவர் (1812—1828). இவர் பதினாறு ஆண்டுகள் அதிகாரியாக இருந்து நல்லமுறை யில் கோயில் பரிபாலனம் செய்தார். மீனாட்சி யம்மன் கோயிலுக்கும் கள்ளழகர் கோயிலுக் கும் நிரம்ப உதவிகள் செய்திருக்கிறார். பழைய காலத்துப் பாண்டிய மன்னர்களைப் போல கோயில் பரிபாலனம் செய்ததினால் பொது மக் கள் இவரை "பீட்டர் பாண்டியன்" என்று மதிப்போடு கூறியழைத்தார்கள். அம்மன் மீது வைத்திருந்த பேரன்பின் காரணமாக விலையுயர்ந்த செகப்புக் கற்கள் பொதிந்து வைத்த இரட்டைத் திருவடிகளைக் கோயிலுக் குச் சமர்ப்பித்தார். மேலும், ஒருமுறை அவர் வேட்டைக்குச் சென்றபோது கள்ள யானை ஒன்று அவரை எதிர்த்துவர அதனைத் தன் துப்பாக்கியால் சுட்டாராம். ஆனால் அது குறிதவறிவிட்டது. அது கண்ட யானை அவரை மோத வந்தது. அவரோ மீனாட்சி யம்மையைத் துதி செய்து தன்னைக் காக்கும் படி பிரார்த்தித்தார். பிரார்த்திக்கொண்டே இரண்டாம் முறையாக அந்த யானையைச் சுட் டார். குண்டு யானையின் நெற்றியில்பட்டு யானை நிலத்தில் விழுந்தது. பீட்டர் உயிர் தப் பினார். இது வெறும் கட்டுக்கதையல்ல. அக் காலத்திலேயே அச்சில் வந்திருக்கிறது.

மற்றொரு அற்புதமும் நடந்ததாம். ஒரு நாள் கலெக்டர் பீட்டர் தன் நீதி மன்றத்தில் ஒரு விசாரணை நடத்தி அதில் தீர்ப்பு எழுதிக் கொண்டிருந்தாராம். அப்போது ஐந்து வயது கொண்ட ஒரு அழகிய பெண் எதிரே தோன்றி அவரைச் சைகை காட்டி அழைத்ததாம். பெண்ணின் திவ்விய வனப்பைக்கண்டு அதிச யம் அடைந்து பீடத்திலிருந்து எழுந்து மெய்ம் மறந்து அவள் பின்னே சென்றாராம், மேல் மாடி விட்டுக் கீழே இறங்கி நிலத்திற்கு வரவே அவ்வழகிய பெண் மறைந்துவிட்டனளாம். கலெக்டரோ ஆச்சரியப்பட்டு நிற்கையில் அந்த மாடிக் கட்டிடம் திடீரென்று நொறுங்கி விழுந்ததாம். தன் கண்ணெதிரில் கண்ட அற்புதத்தை எண்ணி வியந்து இது இறைவி யின் கருணை என்று கூறி, தன்னைத் தப்புவித்த செய்தியை நினைந்து நினைந்து நன்றியை செலுத்தும் வகையில் கெம்புக்கல் பொதிந்த திருவடி இழைப்பித்து கோயிலுக்குச் சமர்ப்பித் தாராம். இவ்வற்புதத்தைக் கூறிப் பொதுமக் கள் இந்நாளிலும் பாராட்டிப் புகழ்கிறார்கள்.

மதுரைக் கோயில் 31-7-1801-லே நவாப்பு கையிலிருந்து ஆங்கிலர் கைக்கு வந்தது. அப் போது ஆட்சிக்கு வந்த ஹார்டிசு கணக்குப் பார்த்து ஆண்டு ஒன்றுக்கு 12000 சக்கிரம் கோயிலுக்குக் கொடுத்துவிட்டு மானியக் கிரா மங்களை சர்க்காருக்குச் சேர்த்துவிட்டார். மறு படி 14-4-1849ல் கோயிலுக்குச் சேர்ந்த 58 கிராமங்களில் 22 கிராமங்களை கோயிலுக்கே திருப்பிக் கொடுத்துவிடும்படி பிரேரேபித்தார். ஆனால் அதன்படி ஒன்றும் அரசியலார் செய்ய வில்லை. 12-8-1857ல் கலெக்டர் கிளார்க்கு (Clarke) என்பவர் கோயிலுக்குச் சேர்ந்த எல் லாக் கிராமங்களையும் கோயிலுக்கே கொடுத்து விடும்படி எழுதினார். அதுவும் நடைபெற வில்லை. அப்போது கணக்கெடுத்ததில் (1859) செலவு போக மீதி வரும்படி 13,22,269 ஆக நின்றது. அத்தொகையோடு கிராமங்களை எல் லாம் கோயிலுக்கே கொடுத்துவிடுதல் நல்லது என்றார். பிறகு டாக்டர் ஆலென் (Allen) என்பவர் கணக்கிட்டுக் கோயிலின் மீதித் தொகை 120000 பவுனில் 80000 பவுனை கல் விக்குச் செலவழித்து 40000 பவுனை மற்றத் தருமங்களுக்குச் செலவழிக்கலாம் என்று அறிக் கையில் எழுதியுள்ளார். ஆனால் அந்தப்படி அரசிலார் எதுவும் செய்யவில்லை. 28-1-1802 ல் உத்தரவிட்ட தஸ்தீக் தொகை 15769-1-3. தவிர வேறு ஒரு தம்பிடியும் அரசாங்கம் கோயி லுக்கு தரவேயில்லை. 58 கிராமங்களும் அரசி யலாரே வைத்துக் கொண்டுள்ளனர்.

இதுவரை சொன்ன விவரங்களின்படி மதுரைத் திருக்கோயில் அடைந்த குறைவுக

ளுக்கு அக்கால அரசியலாரே பொறுப்பு என்று அறியலாம். மதுரையில் அதிகாரம் செலுத்தின கலெக்டர்கள் பொறுப்பாளிகள் அல்லர் எனவும் காணலாம். அவர்களில் ஹார்டிசு, ரௌஸ் பீட்டர், கிளார்க்கு என்ற கலெக்டர்கள் கோயிலுக்குச் சேர்ந்த கிராமங்களை கோயிலுக்கே கொடுத்துவிடும்படி ஆலோசனை கூறியும் பலன் இல்லாமல் போய்விட்டது மேலும் கல்வி முதலிய பொது நலங்களுக்கு செலவழிக்கச் சொன்ன ஆலோசனையும் வீணாயிற்று. வெள்ளையர்களான கலெக்டர்கள் கோயில் பரிபாலனத்தை மிக அன்போடு செய்தார்கள் என்றும் அறியயிாம்.

1841-ல் கோயில் பரிபாலனத்தை விட்டு விடும்படி பிரிட்டிஷ் கிறிஸ்து அரசரங்கம் சென்னை அரசியலாருக்கு உத்தரவு இட்டது. முன் இருந்த பொறுப்பையும் கடமைகளையும் சற்றும் கவனியாமல் சென்னை அரசியலரர் தரும கர்த்தர்களை நியமித்து அவர்களிடம் கோயில்களை ஒப்புவித்துவிட்டார்கள். இதனால் மதுரை முதலிய கோயில்களுக்கு வரவேண்டிய சொத்துக்கள் வரமுடியாமல் போய்விட்டன. திடீரென்று அதிகாரம் மாறினதினால் கோயில்கள் அடைந்த இன்னல்களும் அராஜரீகமும் கணக்கில்லை. சிறிது காலம் நிர்வாகம் பாழடைந்திருந்தது.

கலெக்டர் பிளாக் போர்ன் (Blackburne) காலத்தில் மதுரைக் கோட்டை மதில்கள் அழிக்கப்பட்டன. கோயில் நிர்வாக மாறுதலும் அப்போதே ஏற்பட்டது. இவை இரண்டும் 1841ல் ஒருமிக்க நடைபெற்றன. அப்போது மக்கள் அடைந்த பீதிக்கு அளவில்லை. 1863 ல் கோயில் நிர்வாகத்தைப் பற்றிய புதுச்சட்டம் ஏற்பட்ட பிறகே கோயில் நிர்வாகம் சற்று ஸ்திரம் அநடந்தது.

இடையில் கலெக்டர்கள் ஆட்சியில் மதுரையில் ஒரு நன்மை ஏற்பட்டது. மதுரைக் கோயிலின் வெளி மதிலுக்குச் சேர்ந்தாற்போல் வெளியார்கள் கோயில் இடங்களை ஆக்கிரமித்துக் கடைகள் கட்டி அனுபவித்து வந்தார்கள். முன்னிருந்த நந்தவனங்கள் நாசமாயின. ஒரு வெள்ளையர் அக்கடைகளை இடித்துவிட்டு மீண்டும் நந்தவனம் ஆக்கினார். தென்னை முதலிய வருமான மரங்களை நட்டுத் தூய்மைப் படுத்தினார். கோயில் வெளித்தோற்றம் அழகு அடைந்தது. ஆனால் காலம் செல்லச் செல்ல பாதுகாப்பு இல்லாததினால் நந்தவனம் மீண்டு அழியத் தொடங்கிற்று. வெளியார் அசுத்தம் செய்தும் ஆக்கிரமித்தும் சீர்கெடுத்து வருகிறார்கள். வெள்ளையர்கள் செய்துவந்த நன்மைகளைப் பிற்காலத்தார் கவனிக்கவில்லை. அக்கவனிப்பு மீண்டும் ஏற்பட வேண்டாமா? ★

வைகுண்ட ஏகாதசி திருவிழா

நடைபெற்ற இடங்கள் :

ஸ்ரீ நீலமேகப் பெருமாள் தேவஸ்தானம்	குளித்தலை
ஸ்ரீ அலமேலு மங்கைத் தாயார் சமேத ஸ்ரீ பிரசன்ன வெங்கடேஸ்வர சுவாமி தேவஸ்தானம்	ஆத்தூர்
ஸ்ரீ அபயப் பிரதான ரெங்கநாத சுவாமி தேவஸ்தானம்	கரூர்
ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் தேவஸ்தானம்	பவானி

திருப்பாய்த்துறை துலாவிஷு உற்சவம்

18-10-63 அன்று திருப்பாத்துறையில் துலா விஷு விமரிசையாக நடை பெற்றது. அதி காலையில் சுவாமி அம்பாள் வெள்ளி ரிஷப வாகனத்தில் எழுந்தருளி அகண்ட காவிரியில் தீர்த்தவாரி நடைபெற்றது. 15000 மக்கள் கூடிஸ்நானம் செய்து வழி பட்டார்கள் நலனுக்கு எல்லாவித ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன இரவில் அம்பாள் ரிஷபாருடராய் வீதிஉலா நடைபெற்றது.

சிவப்பிரகாசரும் திருவண்ணாமலையும்

முன்னுரை :

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும் பெருமைக்கும் அறிவியல் அறிஞர்கள் (Scientists) காரணர்களாக விளங்குதல் போலவே, கவிஞர்களும் (Poets), புலவர்களும் திகழ்கின்றனர். அறிவியல் அறிஞர்கள் நாட்டின் புற வாழ்க்கையினை மட்டுமே வளப்படுத்தித் துணை புரிகின்றனர். கவிஞர்களோ அதனினும் சிறப்பாக, நாட்டு மக்களின் அக வாழ்க்கையைத் திருத்திச் செம்மைப் படுத்திச் சிறந்தோங்கச் செய்து, வையத்து வாழ்வாங்கு வாழும் வண்ணம் வழி செய்கின்றனர்.

* கவிதையும் இலக்கியங்களும் இல்லையேல் விஞ்ஞானம் ஒரு போதும் நிறைவு பெறுதல் இல்லை. ‡ விஞ்ஞானிகள் உலகுக்குச் செய்யும் நன்மைகளுக்கு, மெய்ஞ்ஞானிகள் ஆகிய கவிஞர்களால் விளையும் நலங்கள் ஒரு சிறிதும் குறைந்தன அல்ல. கொலம்பஸ் இல்லாமற் போயிருப்பினும், அமெரிக்காக் கண்டம் வேறு ஒருவரால் கண்டு பிடிக்கப் பெற்றிருக்கும். வாஸ்கோடகாமா, நன்னம்பிக்கை முனையைச் சுற்றிவந்து, இந்தியாவுக்கு ஒரு புதிய வழியைத் தோற்றுவித்திருக்கா விட்டாலும், வேறு யாரேனும் ஒருவர் அதனைச் செய்திருத்தல் கூடும். ஆனால் காளிதாசர் இல்லாமல் அபிக்ஞான சாகுந்தலமும், ஷேக்ஸ்பியர் இல்லாமல் ஹாம்லெட்டும் ஆகிய நாடக இலக்கியங்கள் தோன்றியிருத்தல் இயலாது. †

ஆராய்ச்சி நிலையங்கள் பல அமைத்து, நாம் பல விஞ்ஞானிகளை உண்டாக்கிக் கொள்ள முடியும். ஆனால் கவிஞர்களை, நாம் ஆராய்ச்சி நிலையங்கள் அமைப்பதன் மூலம் தோற்றுவிக்க முடியாது. இறைவனின் அருட்கொடையினால்தான், ஒரு நாட்டிற் சிறந்த கவிஞர்கள் தோன்றுகின்றார்கள்.

சிவப்பிரகாசர் :

நம் தமிழ் நாட்டில், அண்மைக் காலத்தில், ஒரு சில நூற்றாண்டு எல்லைக்குள்

---

* " Without poetry, our science will appear incomplete . " —**Matthew Arnold,** Essays in Criticism.

‡ 'The exertions of **Locke, Hume, Gibbon, Voltaire, Rousseau,** *and their* disciples, in favour of oppressed and deluded humanity, are entitled to the gratitude of mankind... ...It exceeds all imagination to conceive what would have been the moral and intellectual condition of the world if neither **Dante, Petrarch, Boccacio, Chaucer, Shakespeare, Calderon, Lord Bacon,** *nor* **Milton** *had ever existed* "

—P. B. Shelley, A Defence of Poetry

† " If **Columbus** had not lived, Ameriea would still have been discovered. If **Vasco da Gama** had not rounded the Cape and opened a sea-route to India, some one else would have done it.

If **Kalidasa** had not lived, there would have been no **Abhijnana Sakuntalam.** Without **Shakespeare**, there would have been no **Hamlet**...

There are institutes for scientific research but we cannot have institutes for training poets and prophets. For science is a co-operative enterprise, the work of many minds, while art is the work of solitary genius..."

Dr. S. Radhakrishnan, Moral Values in Literature.

தோன்றி வாழ்ந்திருந்த சிறந்த பெருங் கவிஞர் பலருள், சிவப்பிரகாசர் ஒருவர். சிவப்பிரகாசர், குமரகுருபரர், சிவஞான முனிவர் என்னும் முப்பெருங் கவிஞர்களும், சமீப காலத்தில் சைவத் தமிழ் வானில் இணையற்று விளங்கிய மூன்று பேரொளிச் சுடர்கள் ஆவர்.

சிவப்பிரகாச சுவாமிகள் ஏறத்தாழ 300 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்திருந்தவர். அவருடைய சமாதி புதுவைக்கு அருகிலுள்ள நல்லாற்றூர் என்னும் இடத்தில் அமைந்திருக்கின்றது. அவர், பொம்மைய பாளையம் சிவ ஞான பாலைய தேசிக சுவாமிகள் அவர்களை ஞானாசிரியராகக் கொண்டவர். தம் ஞானாசிரியரின் மீது அவர், நெஞ்சுவிடுதூது, கலம்பகம் பிள்ளைத்தமிழ் முதலிய பிரபந்தங்களைப் பாடியிருக்கின்றார். 'வைராக்கிய சதகம்' 'கொலை மறுத்தல்' 'அவிரோதவுந்தியார்' என்னும் நூல்களை இயற்றியருளிய பேரூர்ச் சாந்தலிங்க சுவாமிகள் இவர்தம் தங்கையின் கணவர் ஆவர். இவர்க்கு வேலையர், கருணைப் பிரகாசர் என்னும் இரு தம்பிகளும் இருந்தனர். அவர்களும் புலமை நலம் மிக்கவர்கள். இவருடன் சேர்ந்து, அவர்கள் சீகாளத்திப் புராணம் பாடியிருக்கின்றனர்.

சிவப்பிரகாசர் பாடிய நூல்களுள் பிரபுலிங்கலீலை மிகவும் புகழ்பெற்றதொன்று. இவர் இயற்றிய திருச்செந்தில் நிரோட்டக யமக அந்தாதி, பழமலை அந்தாதி, திருவெங்கைக் கோவை, திருவெங்கைக் கலம்பகம் முதலியன தமிழறிஞர்களால் பெரிதும் வியந்து போற்றப் படுவன. நால்வர் நான்மணிமாலை, நன்னெறி முதலிய நூல்கள் இளஞ்சிறுவர்களாலும் பயிலப் பெறும் சுவை மிகுந்த அரிய நூல்கள் ஆகும்.

செந்தமிழ்ப் புலமை :

சிவப்பிரகாசர் செந்தமிழ்ப் புலமையும் சிவ நேயமும் நிரம்பிச் சிறந்து திகழ்ந்தவர். பண்டைத் தமிழிலக்கியங்களை யெல்லாம் திருந்தப் பயின்று, தெளிந்த புலமை நலம் வாய்ந்தவர். பழம்பெருந் தமிழிலக்கியங்களை யெல்லாம் அழுந்தி யுணர்ந்து கற்றுச் செழுந் தமிழ்ப் புலமை கைவந்த அவர், தாம் பயின்று சுவைத்து மகிழ்ந்த சில நூல்களின் சிறப்பினைத் திருவெங்கைக் கோவை என்னும் அகப் பொருள் நூற் கவிதையொன்றில் அழகுறக் குறிப்பிட்டுள்ளார்.

மடலேறியேனும் வந்து, நும் தலைவியை யான் மணந்துகொள்வேன் எனத் தலைவன் தோழியிடம் கூறுகின்றான். அதற்குத் தோழி, ''மடலேறுவோர் தாம் விரும்பும் தலைவியின் உருவை ஓவியமாக வரைந்து கொண்டன்றோ, மடலேறுவது வழக்கம்? எம்முடைய தலைவி ஓவியத்து எழுதவொண்ணா உருவழகு உடையவள் ஆயிற்றே! அவள் உருவை நீர் எங்ஙனம் எழுத வல்லீர்? அவள் தன் நூல் போன்ற இடையில் அணிந்துள்ள மணிமேகலையின் நுட்பம், நும்மால் அறிய முடியுமோ? அவளுடைய மார்பில் விளங்கும் சிந்தாமணி, திருக்கோவை ஆகிய அணிகலன்களை, ஒருவாறு மிகவும் முயன்று நீர் வரைந்து கொண்டாலும் அவள் தன் வாயாற் பேசும் இனிய உரைத் திறனை எவ்வாறு நீர் எழுதிக் கொள்ளுதல் இயலும்?'' என எதிர் வினவுகின்றாள்.

மந்தா கினியணி வேணிப்பிரான்
   வெங்கை மன்னவநீ
கொந்தார் குழல் மணிமேகலை
   நூல்நுட்பம் கொள்வதெங்ஙன்?
சிந்தா மணியும் திருக்கோவையும்
   எழுதிக் கொளினும்
நந்தா உரையை எழுதல்
   எவ்வாறு நவின்றருளே

—திருவெங்கைக் கோவை

என்னும் செய்யுளில், சிவப்பிரகாசர் தாம் பயின்று சுவைத்த பண்டை இலக்கியங்கள் ஆகிய மணிமேகலை, சிந்தாமணி, திருக்கோவையார் என்னும் சிறந்த நூல்களையும், அவற்றின் அரிய உரைநயங்களையும் பாராட்டிக் குறிப்பிட்டிருத்தல் காணலாம்.

சிவத்தலங்களில் ஈடுபாடு :

சிவப்பிரகாசர் தேவாரப் பாடல்பெற்ற சிவத் தலங்களில் மிகவும் ஈடுபாடு கொண்டவர். அதனால் அவற்றின் பெயர்களை அமைத்துக் கூட,அவர் சுவையான கருத்துக்களை வெளியிடுதல் காணலாம். திருச்சோற்றுத்துறை, திருநெய்த்தானம் என்ற இரண்டு பாடல் பெற்ற தலங்களின் பெயர்களைக் குறித்து, அவர் பின் வரும் கருத்தமைத்துப் பாடுகின்றார் :

"புலவர்களே! திருவெங்கை விருத்த கிரிநாத ஈசுவரர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகிய புலவருக்கு ஆற்றிலிட்ட பொருளைக் குளத்தில் வரவழைத்துக் கொடுத்தருளினார். மேலும் அவர், சோற்றுத் துறையும், நெய்த் தானமும் தமக்கு உரிமையாக உடையவர். நீங்கள் அவரைத் துதித்தால், உங்களுக்கு நிரம்பச் சோறு அட்டி, நெய்பெய்து, உணவு அளித்து, அவர் உங்கள் பசியைப் போக்கி அருள் புரிவார்.

கீற்றுப் பிறையை அணிந்ததிரு
வெங்கை விருத்த கிரிநாதன்
ஆற்றுப் பொருளைக் குளத்தில் ஒரு
புலவர்க் கழைத்தன் றருளினோன்!
சோற்றுத் துறையும் திருநெய்த்தானமும்
ஈங்கு உடையான்! சுழலாமல்
தோற்று பசிநோய் தொலைப்பன்! அவன்
தனையே துதியீர்! புலவீரே

—திருவெங்கைக்கலம்பகம்

சோணசைல மாலை:

இத்தகைய சிவபக்தியுடைய வித்தகர் ஆகிய சிவப்பிரகாசர்க்குத் திருவண்ணாமலையின்பால், தனிப் பெருஞ் சிறப்பாக ஈடுபாடு அமைந்திருந்தது. அதனால் அவர் திருவண்ணாமலையில் சில காலம் தங்கியிருந்து, அண்ணாமலையண்ணலை வழிபட்டு இன்புற்றார். அப்போது அவர் சுவைமிக்க சோண சைலமாலை என்னும் நூலை இயற்றியருளினார். அதன்கண் அவர் திருவண்ணாமலையின் சிறப்புக்களைப் பல வகையாகச் சுவை மிகப் புனைந்துரைத்துப் பாடியுள்ளார்.

சோணசைல மாலையின் முதலிரண்டு அடிகள், இறைவன்பால் அவர் தம் குறைகளை விண்ணப்பம் செய்து கொள்ளும் முறையில் அமைந்திருக்கும். பின்னை இரண்டு அடிகள் திருவண்ணாமலையின் சிறப்புக்களை விளக்கும் கற்பனை நலங்கள் வாய்ந்திருக்கும். திருஞான சம்பந்தர் திருவையாறு திருவீழிமிழலை முதலிய தலங்களுக்குச் சென்று பாடியருளிய "புலனைந்தும் பொறிகலங்கி" "ஏரிசையும் வடவாலின் கீழ்". முதலிய திருப்பதிகங்களையெல்லாம் பலகால் அன்புடன் பயின்றோதி மகிழ்ந்தவர் சிவப்பிரகாசர். ஆதலின் அவ்வமைப்பு முறையினை, எழுசீர் விருத்தத்தில், இந்நூலில் அமைத்துக் கொண்டருளினார்.

திருவண்ணாமலையின் சிறப்புகள்:

சிவபிரான் திருவண்ணாமலையில் மலை வடிவம் கொண்டு திகழ்தலைக் குறித்துப் பின்வருமாறு அவர் பாடுகின்றார்:—"மனத்திற்கும் எட்டாத நுண்ணியன் என்று மறையாகமங்கள் எல்லாம் கூறும் குறையறும்படி, உலகுயிர்களெல்லாம் தம் கண்களால் கண்டு மகிழும் வண்ணம், மிகவும் பெரிய மலையுருவில் - அதிஸ்தூல வடிவில்-இறைவன் இங்கு எழுந்தருளி விளங்குகின்றான்" (7)

"காலம் தவறாமல், உரிய நேரம் உணர்ந்து கோயிலுக்குச் சென்று, முறைப்படி மக்கள் நம்மைத் தரிசித்து உய்தல் அரிது. ஆதலின் அவரவர்கள் தாம் தாம் இருந்த இடத்தில் இருந்தே நம்மைக் கண்டு வணங்கி உய்தி எய்துக! என்றே இறைவன் இங்கு மிகப் பெரிய மலை வடிவுடன் திகழ்கின்றான்." (11)

"உயிர்கள் உணர்த்த உணரும் தன்மையன. தாமே ஒன்றை யுணர்ந்து கொள்ள வல்லன அல்ல. யாம் காட்டி உணர்த்தினால் தான் உயிர்கள் ஒன்றைக் காண இயலும். இவ்வுண்மை, யாம் இத்துணைப் பெரிய மலை வடிவமாகத் தோன்றியும், முன்பு இருவர் எம்மை உணர்ந்து கொள்ள இயலாமையால் தெளியப்படும் என்று, உலகுக்கு அறிவுறுத்தவே இறைவன் மலைவடிவில் ஓங்கி யுயர்ந்து எழுந்து விளங்குகின்றான்" (22)

"ஒவ்வோர் ஊரிலும் ஒரு கோயில் இருக்கும். அக் கோயிற் கருவறையில் சிவலிங்கம் விளங்கும். அதுபோன்று, இவ்வண்டமே ஓர் ஊர் எனக் கொளின், அண்டத்தின் சுவர் மதிலாகவும், அண்ட வெளிப் பரப்பு கோயிற் பரப்பாகவும், திருவண்ணாமலைத் தலம் கோயிற் கருவறையாகவும், மலை அக்கோயிலின் கருவறையிலுள்ள சிவலிங்கம் ஆகவும் திகழ்கின்றது" (16)

"சிறந்த மலைகளில் சுனைகள் இருக்கும். அவற்றில் குவளை முதலிய மலர்கள் பூக்கும்.

அவற்றை மலை யரமகளிர், வான் அரமகளிர் முதலிய தேவகணத்தார் பறித்து அணிந்து மகிழ்வது உண்டு. ஆனால் திருவண்ணாமலை மலையிலுள்ள சுனைகளிற் பூக்கும் மலர்களை, வானவர்கள் எவரும் சூடுதற்கு நினையார். ஏனெனில், அம்மலை பிற மலைகளைப் போல்வது அன்று. இறைவனே மலைவடிவம் கொண்டு விளங்குகின்றான். ஆதலின், அம்மலைச் சுனைகளிற் பூக்கும் மலர்களை, இறைவனின் திருமேனியிற் சாத்தப் பெற்ற நிருமாலியப் பொருள்களுக்கு உரிமையுடைய சண்டேசுவரர் ஒருவரே, மகிழ்ந்து ஏற்று அணிந்து கொள்ளும் தகுதியுடையவர் ஆவார்'' (20)

''பிற மலைகள் எல்லாம் உடல் நோய் தீர்க்கும் மருந்திற்குப் பயன்படும் சில மூலிகைகளை மட்டுமே பெற்றிருக்கும். ஆனால் திருவண்ணாமலையோ, தன்னை உட்கொள்பவர் (தியானிப்பவர்)களின் எல்லா நோய்களுக்கும் மூலகாரணமான பிறவி நோயையே தீர்த்து விடும் சிறந்த மருந்தாக விளங்கும்'' (65)

''மற்ற மலைகள் யாவும் தம்மீது ஏறினவர்களுக்கு உலகைக் காட்டி மயக்கும். திருவண்ணாமலையோ, உலகை வெறுத்துத் தன் பால் அடைந்தவர்க்குத் தன்னையே - சிவபரம் பொருளையே - காட்டி உய்விக்கும்'' (93)

''ஏனைய மலைகள் வீடு கட்டுபவர்களுக்கு மரங்களைத் தரும். திருவண்ணாமலையோ, தன்னை நினைத்தவர்களுக்கு வீட்டையே - மோட்சத்தையே - கொடுத்து வாழ்வளிக்கும்'' (99)

இத்தகைய பற்பல சிறப்புடைமையினாலன்றோ எத்தனை தலங்களுக்குச் சென்றாலும், அத் தலங்களுக்குரிய பதிகங்களிலெல்லாம் ஒன்பதாம் பாடலில், திருவண்ணாமலையின் சிறப்பினை மறவாமற் குறிப்பிட்டுப் புகழ்ந்தோதிப் பரவுகின்றார் திருஞான சம்பந்தர், எனப் பாடி மகிழ்கின்றார் சிவப்பிரகாசர்!

பூம்பொழிற் புகலிக்கு இறைவன்நா ளிலம்சேர்
புண்ணியத் தலங்களின் அடைந்து
தாம்புனை பதிகந் தொறும்புகழ் சோண
சைலனே கைலைநா யகனே.

—சோணசைலமாலை, 58

இலக்கணத்திற் கற்பனை :

செந்தமிழ்ப் புலமை நலம் செறிந்த சிவப்பிரகாசர், இலக்கணம் (Grammar) தருக்கம் (Logic) என்னும் இருகலைகளிலும் துறை போயவர். இவ்விரண்டினையும் திருவள்ளுவர் ''இரண்டு கண்கள்'' எனப் போற்றிப் புகன்றுள்ளார். ஆதலின் இவற்றின் சிறப்பு இனையதென நாம் எண்ணி யுணரலாம்.

திருவண்ணாமலையின் சிறப்பைப் பாடுதலில் சிவப்பிரகாசர் தம்முடைய இலக்கணப் புலமையையும், தருக்க நூற் புலமையையும் பயன்படுத்துகின்றார் :— இறைவன் கருணையுடையவன். மலைபோன்ற பெருமை யுடையவன். அதனால் அவனைக் ''கருணைமலை'' எனச் சான்றோர்கள் போற்றுவர். ''மன்னிய திருவருள் மலையே போற்றி'' என்று மணிவாசகர் போற்றுதல் காணலாம். இறைவனுக்குரிய தசாங்கங்கள் என்பனவற்றில், அவனுக்குரிய மலையாக விளங்குவது ''கருணை'' என்னும் பண்பாகக் கொள்ளலாம். அதனால் இறைவனைக் குறிக்கும் ''கருணைமலை'' என்னும் தொடர், 'கருணையாகிய மலையையுடையவன்' என்றோ, 'மலைபோலும் கருணையுடையவன்' என்றோ, அன்மொழித்தொகையாக வைத்துப் பொருள் கொள்ளப்படும். ஆனால் இறைவனே திருவண்ணாமலையில் மலைவடிவம் கொண்டு விளங்குதலின், அத்தொடர் ''கருணையையுடைய மலை'' என இரண்டாம் வேற்றுமைத் தொகையாகப் பொருள் கொள்ளக் கிடக்கின்றது, எனப் பாடுகின்றார் சிவப்பிரகாசர்!

மொழிதரு கருணை மலைஎனும் பெயர் அன்
மொழி ஒரீஇ, வேற்றுமைத் தொகையைத்
தழுவுற நின்று வளர்ந்திடும் சோண
சைலனே கைலைநா யகனே

—சோணசைல மாலை, 58

தருக்கநூற் கற்பனை :

தருக்க நூல்களில் அனுமானப் பிரமாணம் பற்றி விளக்குங்கால், பிரதிக்ஞை (Proposition) ஏது (Reason), திருஷ்டாந்தம் (Example), உப்நயம் (Application), நிகமனம் (Conclusion) என்னும் ஐந்து உறுப்புக்களும் (Syllogism) பொருந்த, உடன்பாடு (Affirmation), எதிர்

மறை (Negation) என்னும் இருவகைகளிலும் அமைத்து, அனுமான வாக்கியங்கள் கூறப் படும். தருக்க நூல்களிற் கீழ்வரும் வாக்கியம் யாண்டும் பொதுவாகப் பயின்றுவரும்.

"இம்மலே நெருப்புடையது;
புகையுடைமையால் ;

யாதுயாது புகையுடையது
அதுவது நெருப்புடையது, அடுக்களே போல;

யாதுயாது புகையில்லது
அதுவது நெருப்பில்லது, குளம் போல ;

இம்மலேயிற் புகையுள்ளது;
ஆதலின் இம்மலே நெருப்புடையது"

இத் தருக்கநூற் கூற்றை நமக்கு நினே வுறுத்தித் திருவண்ணுமலேயின் சிறப்பினே உணர்த்துகின்ருர் சிவப்பிரகாசர். மலேகளில் மேகங்கள் கவிந்து தவழ்தல் இயல்பு. திரு வண்ணுமலேயிலும் மேகங்கள் அங்ஙனம் மலே மேற் படர்ந்து தவழ்கின்றன. கறுத்த மேகங் கள் தவழ்வது புகை சூழ்ந்ததுபோலக் காணப் படுகின்றது. புகையிருந்தால் நெருப்பு இருக் கும் அன்ருே? சிவபிரான் திருவண்ணுமலே யில் நெருப்பு வடிவமாக-ஜோதி ஸ்வரூபனுக- ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதி யாகத்தானே விளங்குகிருன்! மேகங்கள் புகை போலப் படர்ந்து தவழ்வதனுலேயே, இறைவ னின் நெருப்புருவம் திருவண்ணுமலேயில் மலே வடிவமாக அமைந்து விளங்குகின்றது, என் னும் உண்மை புலனுக வில்லேயா? எனப் பாடு கின்ருர் சிவப்பிரகாசர்.

மழைமுகில் வந்து தவழ்ந்துவிண் படரும்
மலிதரு புகையென எழுந்து
தழலுரு வுண்மை விளக்குறும் சோண
சைலனே கைலேநா யகனே
—சோணசைல மாலே, 60

கார்த்திகைத் தீபம் :

இங்ஙனமெல்லாம் திருவண்ணுமலேயின் சிறப்பினேப் போற்றிப் பாடும் சிவப்பிரகாசர், கார்த்திகைத் தீபச் சிறப்புப் பற்றிப் பாடாமல் இருப்பாரா? "பிறவிக் கடலேக் கடந்து, முத்தி யாகிய கரையிற் சேர விரும்புபவர், வழி தெரியாமையால் ஏற்படும் திகைப்பு நீங்கித் தமது தவவொழுக்கம் ஆகிய கப்பலே மேற் கொண்டு செலுத்தி உய்யும் பொருட்டு, ஒரு கலங்கரை விளக்கைப் போல உயர்ந்து எரிந்து ஒளி தந்து விளங்குவது, திருவண்ணுமலேக் கார்த்திகைத் தீபம்."

பிறவி-கடல்
முத்தி-கரை
உலகியல் } திசை தெரியாத
மயக்கம் } திகைப்பு
தவஒழுக்கம்-கப்பல்
திருவண்ணுமலே-தீபத்தம்பம்
கார்த்திகைத் தீபம்-கலங்கரை விளக்கு

துவக்கற அறிந்து பிறக்கும் ஆ ரூரும்
துயர்ந்திடா தடைந்துகாண் மன்றும்
உவப்புடன் நிலேத்து மரிக்கும் ஓர் பதியும்
ஒக்குமோ நினேக்கும் நின் நகரை?
பவக்கடல் கடந்து முத்தியங் கரையிற்
படர்பவர் திகைப்பற நோக்கித்
தவக்கலம் நடத்த உயர்ந்தெழும் சோண
சைலனே கைலேநா யகனே

மடலவிழ் மரைமாட் டெகின்என அருகு
மதியுறக் கார்த்திகை விளக்குத்
தடமுடி யிலங்க வளர்ந்தெழும் சோண
சைலனே கைலேநா யகனே

கார்த்திகை விளக்கு மணிமுடி சுமந்து
கண்டவர் அகத்திருள் அனேத்தும்
சாய்த்துநின் றெழுந்து விளங்குறுஞ் சோண
சைலனே கைலேநா யகனே

முடிவுரை :

இத்தகைய பல சிறப்புக்களேயுடைய திருக்கார்த்திகைத் தீப விழாவினே, நாம் அனே வரும் அன்புடன் தரிசித்து, அண்ணுமலே யண்ணலின் திருவருளேப் பெற்று உய்ய முற் படுவோமாக!

(திருவண்ணுமலேக் கார்த்திகைத் தீப விழா வில், 26-11-63 அன்று, 'சத்திவிலாசம் சமயப் பேரவை'யில் நிகழ்த்திய சொற்பொழிவினேத் தழுவி எழுதியது.

—ஆசிரியர்)

சிவமந்திரங்கள்

திரு. ம. வெ. மு. நாகராஜக் குருக்கள், சிறுலைநயூர், லால்குடி.

" நாதவிந்து கலாதீ நமோநம
வேதமந்த்ர சொருபா நமோ நம"

என்று அருணகிரிநாதர் இறைவனை வழுத்து கின்றார் திருப்புகழால். நாதம் விந்து கலைகள் இவைகளினின்று வேதங்களும் மந்திரங்களும், மொழிகளும் வெளிவந்துள்ளன என்பது சைவ நூற்கருத்து. நாம் பேசும் சொற்களும் படிக்கும் நூல்களும் ஒலி மயமானவை. ஒலிகள் சொற்கள் அல்லது வாசகங்களாகின்றன. அச்சொற்களால் அறியப்படும் பொருள் வாச்சியங்களாகின்றன. ஒலிகளாலாகிய தெளிவான பேச்சுக்களை வாயினாலும், எழுதும் எழுத்துக்களாலும் வெளியிட்டுத் தம் அறிவாற்றலை வெளிப்பரப்பும் தகுதியும் பெருமையும் வாய்ந்த உயிர்ப் பிறவி மனிதனேயாம். "எவர்கள் வாயினால் வார்த்தைகளைப் பேசுகின்றார்களோ அவர்கள் மனிதர்கள் என்று சொல்லப் படுகின்றார்கள்" என்று சுப்ரபேதாகமம் சொல்லுகிறது. உலகில் மக்கள் சொல்லைக்கொண்டு பொருளையறிவதும்—பொருளை அறிவதற்குச் சொற்களை உபயோகிப்பதும், இவ்வாறாகச் சொல்லுக்கும் பொருளுக்கும் பேதாபேதமான ஓர் தொடர்பு இருப்பதை யுணர்கின்றோம். ஒலிகளாகிய சொற்களையே சொல்லிச்சொல்லி அச்சொல்லே பொருளாகி, பலதரப்பட்ட மனநிலையுள்ள மக்களின் ஆற்றலைத் தூண்டிப் பற்பல காரியங்களை நிகழ்த்துவது போல—உலகிலுள்ள சேதன அசேதனப் பொருள்களுக்குள் அடங்கியுள்ள ஆதாரசக்தியை—சராசரங்கள் இயங்குவதற்குக் காரணமான எல்லாம்வல்ல இறைவனை - ஆன்மசிற் சக்தியால் அறிந்த மாந்தர், சிவசக்தியின் ஆணைவழி உயிர்ப் பிறவிகளையும், அறிவற்ற ஸ்தாவரங்களையும் தொழிற்படுத்தும் சக்தி வாய்ந்த மிகப் பழைமையான ஒலிக் குறிப்புகளே "மந்திரங்கள்" என்பதாகும்.

மனத்தின் தொழில் சிந்தனையே. உயர்ந்த பொருள்களை அடிக்கடி சிந்தனை செய்ய வேண்டும். இதனால் அறிவு விரிவடையும். மக்களின் அறிவு மனத்தினின்றும் வெளிப்படுகின்றது. மனத்தோடு ஒன்றிய ஞானம் சவிகற்பஞானம்-நிர்விகல்பஞானம் என இருவகைப்படும். ஒரு பொருளின் பெயர் - அதன் நிறம் - அமைப்பு - தன்மை - உபயோகம் முதலிய வற்றைத் தனித் தனியே சிந்தித்து அறிவது சவிகற்ப ஞானம். பொதுவாகப் பொருளைமட்டும் விகற்பமில்லாமல் அறிவது நிர்விகற்ப ஞானம்.

சிவனடியை அடைவிக்கும் சிவஞானத்தை உட்பொருளாகக் கொண்ட சுருக்கமான ஒலிச் சொற்களே "சிவமந்திரங்கள்" ஆகும். எல்லாவற்றையும் அறிவதற்கு வேண்டிய சிந்தனை — வாழ்க்கைக் கடலிலிருந்து காப்பதாகிய செயல், இவ் விரண்டும் கூடியதே "மந்திரம்" என்ற கருத்தைக் காமிகாகமம் தெரிவிக்கின்றது. அது வருமாறு :—

"மனனம் ஸர்வவேதித்வம் திராணம் சம்சார சாகராத்|
மனனத் திராணசம்யோகாத் மந்திரமித்யபி தீயதே||

இதன் பொருள் :—மனனம் என்பது சிந்தனை எல்லாவற்றையும் அறிவதையும், திராணம் என்ற காத்தல் சம்சாரசாகரத்திலிருந்து மீளுவதையும் குறிக்கின்றன. மனனம்—திராணம் என்ற இரண்டும் சேருவதால் "மந்திரம்" என்று வழங்கப்படுகின்றது.

எல்லாச் சொல்லும் பொருளுடையன. மந்திரச் சொற்கள் தெய்வங்களைக் குறிக்கோளாகக் கொண்டவை. "சிவனொடொக்கும் தெய்வம் தேடினும் இல்லை" என்பது திருமந்திரம். சிவபெருமானைக் குறிப்பாக உணர்த்துவதே சிவமந்திரங்களாம். திருவைந்தெழுத்து (பஞ்சாக்ஷரம்) சிவமந்திரங்களில் உயிர் போன்றது. சிவாகமங்கள் "சிவமூலமந்திரம்" என அதை விரித்துரைக்கும். நடராஜப் பெருமானின் திருவுருவம் பஞ்சாக்ஷரத் திருமேனியாக விளங்குகின்றது. உடுக்கையைத் தாங்கிய கரம் சி என்ற எழுத்தையும், பிரஸாரிதகரம்

என்ற வீசியகை வா என்ற எழுத்தையும், அபய ஹஸ்தம் ய என்றதையும், கையேந்திய தீ ந என்ற எழுத்தையும், ம என்பது முயலகனையும் குறிப்பதாக உண்மைவிளக்கம் என்ற சித்தாந்த சாத்திரம் பாடுகின்றது. அப்பாடல் வருமாறு:—

"சேர்க்கும் துடிசிகரம் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம்—பார்க்கில்
இறைக்கு அங்கிநகரம் அடிக்கீழ் முயலகனர்
தங்கும் மகரமது தான்."

வாயிலிருந்து தோன்றும் சொற்கள் மனத்தில் உருவகமான பின்னரே வெளிவரும். தம்தூய உள்ளங்களைச் சிவபெருமானுக்குரிய கோயில் களாக அமைத்துக் கொண்டவர்களே சைவ சமயாச்சாரியர்கள். இந்நால்வர் மனத்திற் ரேன்றிய மனனம் என்ற சிந்தனையும், சிவ நெறியைப் பாதுகாப்பதாகிய செயலும் சிவ மயமாக விளங்கின. நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தரும், நாவுக் கரசரும், சுந்தரரும் தேவாரப் பதிகங்களைப் பாடத்தொடங்கும் போதே தம்மனம் சிவபெரு மானுக்குரியது என்பதை எடுத்துக்காட்டுகின் றனர். "உள்ளம் கவர் கள்வன்" என்றார் சம்பந்தர். "நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன், நினையாதொரு போதும் இருந் தறியேன்" என முறையிடுகின்றார் அப்பர். நம்பி ஆரூரர் அருள்மொழியோ "மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை" என்றது. சிவபுராணத்தில் "இமைப்பொழுதும் நீங்காதான் தாள்வாழ்க!"என்றுவாழ்த்துகின்றார் மணிவாசகர். இவ்வாறு சிந்தையும் சிந்தனை யும் சிவமயமாகிய ஆசாரியர்கள் திருவாக் கினின்றும் வெளிவந்த சிவவாசகங்கள் யாரும் செய்ய இயலாத செயற்கரிய செயல்களைச் செய்தன. இவற்றையும் சிவமந்திரங்களாகக் கருதலாமன்றோ!

சிவ மந்திரங்கள் சிவஞானத்தை உட் பொருளாகக் கொண்டவை.

"உய்யவல்லார்க்குயிர் சிவஞானமே
உய்யவல்லார்க்குயிர் சிவதெய்வமே
உய்யவல்லார்கட் கொடுக்கம் பிரணவம்
உய்யவல்லார் அறிவுள் ளறிவாமே."

என்ற திருமந்திரம், சிவஞானம், சிவ தெய்வம், பிரணவம், (ஓம்) இவற்றை உய்யும் வகையாக அருளுகின்றது. இன்னும் சிவஞானத்தின் அவசியத்தை நன்மக்கட்கு அறிவுறுத்தவந்த திருமூலரடிகள் சற்றுக் கடுமையான சொற் களாலேயே கூறுகின்றார்:

"கற்றுஞ் சிவஞான மில்லாக் கலதிகள்
சுற்றமும் வீடார் துரிசறார் மூடர்கள்
மற்றும் பலதிசை காணார் மதியிலோர்
கற்றன்பில் நிற்போர் கணக்கறிந் தார்களே"

படித்தால் மட்டும் போதுமா? சிவஞானம் பெற்று அன்புடையவ ராகவும் இருத்தல் வேண்டும் என்றருளினர்.

சிவஞானம் அவபோதரூபம்—சப்தரூபம் என இருவகைப்படும். பிறருக்குப் போதிக்க முடியாமல் இருக்கும் "பேரறிவு" நிலையே அவ போதரூபமாகும். இதைச் சிவபரஞ்சுடரின் ஞானசக்தியாகவும் கருதலாம். இந்த அவ போதரூபமான ஞான நிலையை உயிர்கட்கு நேரிடையாக இறைவன் உணர்த்தாமல்மறைந் துள்ள பொருள்களைக் கொண்ட மந்திர ஒலி களாகச் சுத்தமாயை என்ற குடிலையினின்றும் தோற்றினர்.

"சுத்தமாம் விந்துத்தன்னில்
தோன்றிய வாதலானுஞ்
சத்திகள் ப்ரேரித்துப்பின்
தானதிட்டித்துக் கொண்டே
அத்திறற் புத்தி முத்தி
யளித்தலால்அரனுக் கென்றே
வைத்தவாமந்திரங்கள்
வடிவென மறைகளெல்லாம்"

என்ற சிவஞான சித்தியார்ப் பாடலும், சுத்த மாயையாகிய விந்துவில் சிவபெருமான் சக்தி யைச் செலுத்தியபின்பு சிவசக்தியே அதை இடமாகக் கொண்டு தோன்றிய தனாலும், உயிர்ப் பிறவிகளுக்கு போகம்—வீடு பேறுகளை யளிப்பதனாலும் சிவபெருமானுக்கு "மந்தி ரங்கள் வடிவமாக வைக்கப் பட்டுள்ளன" என்றுணர்த்துகின்றது.

பரசிவன் ஒளியைப் பரப்பும் சூரியன். சத்திகள் சிவசூரியனின் ஒளிக்கிரணங்கள். அறி வுக்கண்ணுடைய மாயையை ஓர் பெரும் பந்து வடிவமாகக் கற்பனை செய்வோமாக! உருண்டை வடிவமான மாயா இருளை நோக்கிச் சிவசக்தி கிரணங்கள் பதியும் போது மாயாகோளத்தின்

மேற்பகுதி ஒளிமயமாகவும், கீழ்ப்பகுதி ஒளிகுன்றி இருள் மிகுந்தும் காணப்படும். சிவசக்திகிரணங்களால் ஒளிவரும் மாயையின் மேற்பகுதி 1. சுத்தமாயை 2. குடிலை 3. விந்து 4. மஹாமாயை முதலிய பெயர்களால் குறிப்பிடப் படுகின்றது. மந்திரங்கள் இக்குடிலையிலிருந்து வெளிவந்ததனாலேயே "மந்திர யோனிமஹாமாயா—மந்திரங்களின் பிறப்பிடம் மஹாமாயை" என்று சாஸ்திரங்கள் பேசுகின்றன. மந்திரங்கள் எவ்வாறு தோன்றி விரிவடைகின்றன என்பது பற்றி வடமொழி ஆகமங்களில் மட்டு மல்லாமல் தமிழாகமமாகிய திருமந்திரத்தும் கூறப் பட்டுள்ளது.

"உள்ள அருணோதயத்தெழும் ஓசைதான்
தெள்ளும் பரநாதத்தின் செயலென்பதால்
வள்ளல் பரவிந்து வைகரியாதிவாக்
குள்ளன ஐங்கலைக் கொன்றும் உதயமே"

திருமந்திரம் 1994.

சிவசக்தி உதயமானவுடன் சுத்தமாயையில் தோன்றும் முதல் தத்துவம் நாதம் என்பதாம். இரண்டு காதுகளையும் இரண்டு விரல்களால் அழுந்த மூடிக்கொண்டால் ஓர் வித ஓசை நமக்கு மட்டும் கேட்கும். இம் மாதிரி (பரவிந்துவாகிய) குடிலையிலிருந்து ஓர் த்வனி (ஒலி) உலகத்தோற்றகாலத்தில் உண்டாம். இதுதான் அபரநாதம் என்பது. இதிலிருந்து சங்கல்பரூபமான விந்து (எண்ணு வதற்கேற்ற குறிப்பு) வெளிப்படும். இது அபர விந்து. இந்த அபர விந்து வினின்றும் சொல்லோசைகளும் எழுத்து வடிவங்களும் விரிவடைந்துள்ளன. பரநாதமாகிய சிவத்தின் செயலான 1. சாந்தியதீதகலை 2. சாந்திகலை 3. வித்யாகலை 4. பிரதிஷ்டாகலை 5. நிவிர்த்திகலை என்ற ஐங்கலைக்கும், பரவிந்துவிலிருந்து சிவசக்தியின் க்ஷோபத்தால் எழும்பும் ஒலிகளான 1. அதிசூக்ஷ்மை 2. சூக்ஷ்மை 3. பச்யந்தீ 4. மத்திமை 5. வைகரீ என்ற வாக்குகள் ஐந்தும் பரவுகின்றன.

மக்கள் வழங்கும் எழுத்தொலிகள் வைகரீ வாக்கு எனப்படும். 1. இருதயம் 2. கழுத்து, நாசினடி, பல், மூக்கு, உதடுகள், அண்ணம், தலை ஆகிய உடலுறுப்புகள் சொற்கள்பிறக்குமிடங்களாகும். இவ்விடங்களில் காற்றைத் தடுக்கும் போது எழுத்தாகத் திரண்டு, காற்று மேற் கிளம்பும் போது வெளிப்பட்டுப் பிறர் காது கேட்க உச்சரிக்கப்பட்டுப் பற்பல பொருள்களைக் குறிக்கும் சொற்களாக உலகில் வழங்கப்படுகின்றன. இவ்வாறு வைகரீ வாக்காக வெளிப்படும் மொழிகளில் அ முதல் க்ஷ முடியவுள்ள ஐம்பத்தொரு எழுத்துக்களைத் திருமூலரடிகள் "அந்தமும் இன்றியே ஐம்பத்தொன்றாயதே" எனக் குறிப்பிடுகின்றார். மேலுள்ள திருமந்திரத்தில் ஐம்பது எழுத்தில் அடங்கிய க்+ஷ=க்ஷ என்று கூடும் எழுத்தைக் கணக்கிடாமல் திருமூலர்,

"ஐம்பதெழுத்தே அனைத்து வேதங்களும்
ஐம்பதெழுத்தே அனைத்தாகமங்களும்
ஐம்ப தெழுத்தேயு மாவததறிந்தபின்
ஐம்பதெழுத்தும் போய் அஞ்செழுத்தாமே.

என்று அருளிச் செய்தனர். இங்கு எடுத்துக் காட்டிய ஐம்பத்தொரு எழுத்துக்களையும் 'மாத்ருகாமந்திரம்' எனவும் 'மாலாமந்திரம்' என்றும் ஞான நூல்கள் நுவல்கின்றன. வடமொழியில் உச்சரிக்கப்படும் எல்லா மந்திரங்களுக்கும் அன்னையாக ஆதாரமாக இருப்பது இந்த ஐம்பத்தொரு எழுத்துக்களே. இதைத்தழுவியே சிவாலய வழிபாட்டிற்கு மிகச்சிறந்த மந்திரமாக பஞ்சபிர்மஷடங்கமந்திரம் என்ற பதினொரு சம்ஹிதாமந்திரங்களைச் சிவாகமங்கள் சிறப்பித்துக் கூறு கின்றன. பீஜமந்திரங்களை முன்னும் சப்த கோடி மஹாமந்திரங்களை முடிவிலும் சேர்த்தே சம்ஹிதாமந்திரங்களை உச்சரிக்கவேண்டும். இவ்வுயரிய சிவமந்திரங்களை நினைவிற்கொண்டே சைவத்திருமுறைகளை வகுத்ததாகத் திருமுறைகண்ட புராணம் பேசுகின்றது. அப்பாடல் வருமாறு:—

"மந்திரங்கள் எழுகோடி ஆதலினால் மன்னுமவர்
இந்தவகை திருமுறைகளேழாக எடுத்தமைத்துப்
பந்தமுறு மந்திரங்கள் பதினொன்று மாதலினால்
அந்தமுறை நான்கினோடுமுறை பதினொன்றாக்
கினார்."

சிவமூர்த் தங்களுக்கு அபிஷேகம் செய்யும் போது வேத மந்திரங்களாகிய 1. ஸ்ரீ ருத்திரம் 2. சமகம் 3. புருஷசூக்தம் 4. பவமான மந்திரம் 5. ஸ்ரீ சூக்தம் 6. பஞ்சசாந்தி 7. கலாசூக்தம் 8. ஹிரண்யவர்ண என்ற அனுவாகம் 9. ருத்திரசூக்தம் 10. கிருதசூக்தம் இவற்றை ஜபித்துக்கொண்டு மெல்ல மெல்ல அபிஷேகம் செய்யவேண்டும். சிவாகமங்களில் மந்திராவதாரப்படலம் என்றொரு பகுதியுள்ளது. குருமுகமாக மந்திரங்களை உச்சரிக்கவேண்டிய முறைகளையும் அதன் பயனையும் அறிந்துகொண்டு சிவ வழிபாடு செய்வதே சிறப்புடையது. ★

தொண்டைநாட்டுத் திருப்பதியநுபவம்

மகாவித்துவான். P. B. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சிபுரம்.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

வேளுக்கை யாளரியின் அநுபவம்

அது கேட்ட இரணியன் குருவை நோக்கி என் மகன் சொன்னவற்றைச் சொல்லாய் என்றான். அதற்குக் குரு தலைமேல் அஞ்சலி செய்து கொண்டு "நாதனே! காதுக்கு நாராசம் போன்ற அச்சொல்லை நான் உனக்குச் சொன்னால் நரகத்தை யடைவேன், நாவும் வெந்து போம்" என்றான். அது கேட்ட இரணியன் 'எனது புதல்வனை வெகு சீக்கிரமாக இங்கு அழைத்து வாருங்கள்' என்று ஏவலாளர்க்குக் கட்டளையிட அவர்கள் ஓடிச்சென்று ப்ரஹ்லாதனிடம் தந்தையின் கட்டளையைத் தெரிவிக்க, உடனே அவன் தாதையிடம் வந்து வணங்கி நின்றான். அன்னவனை இரணியன் மார்பாரப் புல்கி அருகே உட்கார வைத்துக் குழந்தாய்! உனது குரு வெறுக்கும்படி நீ ஏதோ தவறாகச் சொன்னாயாமே, அச்சொல் யாது? சொல்லு என்ன, (பிரகலாதன்) "ப்ரணவஸ்வரூபியாய் உலகுக் கெல்லாம் ஒப்பற்ற தனி நாயகனான கடவுளின் திருநாமமே யான் கூறியது. உபதேசமாகக் கேட்டுணர்தற்கும் சிந்தனை செய்தற்கும் பிறவித் துன்பக்கடலைக் கடத்தற்கும் மிக உரியதான இத்திருநாமத்திற் காட்டிலும் சிறந்தது வேறொன்று மில்லையே; குரு வெறுக்கத் தக்கதொன்றும் யான் சொல்லவில்லையே". (இரணியன்) குழந்தாய்! நீ சொன்ன அச்சொல்லை விளக்கமாகக் கூறுவாயாக என்றான். (பிரகலாதன்) அறம் பொருளின்பங்களுள் விரும்பிய பலன்களை யெல்லாம் கொடுப்பதும் மோட்சத்தை யளிப்பதுமான எம்பிரான் திருநாமமே நான் சொன்னது; அதற்குத் நான் திருவஷ்டாக்ஷர மஹாமந்திரமென்று பெயர். இத் திருமந்திரத்திற் காட்டிலும் சிறந்தது வேறில்லை. உனது உயிர்க்கும் எனது உயிர்க்கும் மற்றுமெல்லாவுயிர்கட்கும் இத் திருமந்திரமே எல்லா நன்மைகளையும் விளக்க வல்லது என்று நன்றாக ஆலோசித்தே இதனை நான் சொன்னேன் என்று வெகு கம்பீரமாகச் சொல்லி முடித்தான்.

இங்ஙனஞ் சொல்லக்கேட்ட இரணியன், "அடாபயலே! நான் பிறந்த நாள் தொடங்கி இன்றளவும், நீ குறித்த பெயரைச் சொன்ன வாயையும் சிந்தித்த நெஞ்சையும் என்னுடைய ஆணை சுடுமென்பது மூவுலகிலும் ப்ரஸித்தம்; அப்படி யிருக்க இந்தப் பெயரை உனக்குச் சொன்னவர் ஆர்? நீ இதனை யாருடனே கற்றுக் கொண்டாய்? மும் மூர்த்திகளும் மற்றைத் தேவர்களும் முனிவர்களும் எப்பொழுதும் சிந்திப்பது என் கழலினையே, துதிப்பது என் பெயரே; ஆதலின் அவர்களெல்லோரும் உனக்கு இந்தப் புதிய பெயரைக் கூறுவதற்கு அஞ்சுவர்களே; பிள்ளாய்! இதனை நீ வேறு யாரிடத்து உணர்ந்தாய்? என்னோடு போர் செய்யும் பொருட்டுப் பலதரம் எதிர்த்து வந்து என்முன் நிற்கமாட்டாமல் கருடனது வேகத்தால் தப்பி யோடிச் சென்று மறைந்து பாற்கடலிலே புகுந் தொளித்துக் கொண்டு இன்னமும் வெளிவராமல் உறங்குபவனாகிய விஷ்ணுவின் பெயரை உனக்கு எல்லா நன்மைகளையும் விளைவிப்பதாகக் கூறினவர் யாரோ? நம் குலத்தில் தோன்றிய எண்ணிறந்த பல பெரியோர்கள் அந்த விஷ்ணுவினால் அழிந்தவர்களாயிருக்க இதனை நீ அறிந்து வைத்தும் அவன் பெயரைச் சொல்லத் துணிந்த துர்புத்தி

என்னே? தன் இனத்திற்குப் பகையாகிய கருடனது பெயரைப் பாம்பு பக்தியோடு கூறுவதுமுண்டோ? வலிமையிற் சிறந்த எனது உடன் பிறந்தவனான ஹிரண்யாக்ஷனை ஒரு பன்றியின் வடிவமாய்த் தோன்றிக் கொன்றவனது பெயரைப் பகர்வதற்காகவோ உன்னை நான் பிள்ளையாகப் பெற்றது. மீண்டும் இத்தன்மையனவான பயனற்ற வார்த்தைகளைச் சொல்லாதே; குருவின்கட்டளையே காக்கத்தக்கதென்று துணிந்து இனி அவரது கட்டளையின்படி கல்வி பயில்வாயாக; போ" என்று மிகுந்த கோபக் குறியுடன் சொல்லி முடித்தனன்.

இவ்வளவுஞ் சொல்லக்கேட்ட ப்ரஹ்லாதன் மீண்டும் தந்தையை நோக்கி "அப்பா!, பிரமன் முதலிய உயிர்களெல்லாம் அப்பெருமானது திருநாபிக் கமலத்தின் ஒருபகுதியிலே தங்கும். சிந்தைக்கும் கோசரமல்லனான அத்திருமால் காண்பவர்களினுடைய கண்களினுள்ளும் மறைந்துள்ளான்; மாஞானியர்களின் மனத்தில் நிறைந்திருப்பான்; பஞ்ச பூதங்களிலும் அந்தர்யாமியாய் மறைந்துள்ளான். ஸகலப் பிராணிகளினுடையவும் மனமொழி மெய்களிற் பொருந்தியுள்ளான்: அவனது நிலைமையை ஆலோசிக்குமிடத்து, ஓர் அக்ஷரமாகிய ஓமென்னும் பிரணவத்தில் மறைந்துள்ளான். ஸகல வேதங்களிலும் விரிந்துள்ளான் என்னத் தகும். காமம் வெகுளி முதலிய தீய குணங்களைத் தன்னடியர்க்குத் தீர்த்தருள்கின்ற அத் திருமாலினது திருநாமங்களின் மகிமையும் அவனது படைப்பமைப்புக் கெடுப்புத் தொழில்களின் திறமும் எவராலேனும் சொல்லித் தலைக்கட்டற் பாலனவோ? இங்ஙனம் ஒப்பற்ற பெருமைவாய்ந்த ஸ்ரீ மந்நாராயணனை இகழ்வதனால் அந்தோ! நீ பெற்றிருக்கின்ற செல்வங்களையும் ஆயுளையு மிழக்கின்றனையே யென்று நானிரங்கி அப்பெருமானது திருநாமத்தைத் துதித்து அவனை வாழ்த்தினேன்; என்ன பிழை செய்தேன்? சொல்லிக்காண்" என்று கூறி முடித்தான்.

இவை கேட்டலும் இரணியனுக்குண்டான கோபம் வர்ணிக்க இயலாததாயிருந்தது. எல்லாவுலகங்களும் அஞ்சும்படி யெழுந்த அக் கோபத்தின் உக்கிரத்தால் ஸூர்யன் முதலிய சோதிகளும் மேலுலகமும் சுழலலாயின; பூமியினிடங்கள் அசையலாயின; ரத்தத்தைச் சொரிந்த அவனது கண்களினின்று புகைகள் மேலெழுந்தன; இங்ஙனம் கோபத்தின் எல்லையிலே நின்ற அவன் தனது பரிஜனங்களை நோக்கி 'இப்பாவிப்பயலுக்கு இதனைக்காட்டிலும் என்னோடு விளங்கும்பகைமை வேறொன்றுமுள்ளதோ? வஞ்சனையாக என் குடலிலே ஊறியிருந்து இப்படிப்பட்ட பகைவடிவமொன்று உண்டாயிற்று; இவனது எண்ணத்தை இன்னமும் அறிய வேண்டுவதில்லை; எனது தொன்று தொட்ட பகைவனான திருமாலுக்கு அன்புமிக்க தொண்டன் யானென்று கூசாது கூறுகின்ற இவனைக் கொன்றிடுங்கள் எனக் கட்டளையிட்டனன். உடனே யமகிங்கரர்கள் போன்ற அசுரர் பலர் பிரகலாதனைப் பிடித்துக் கொண்டார்கள். கோபாக்கினி சொலிக்கின்ற அஞ்சாத நோக்கையுடையவர்களான அவ்வசுரர்கள் ஒருயானைக் குட்டியைப் பல சிங்கக் கூட்டங்கள் வந்து சூழ்ந்து கொண்டாற்போல அப்பிரகலாதனைச் சூழ்ந்து கொண்டு, அரண்மனை வாயிலின் பெருவெளியிலே அவனைக் கொண்டு போய்ச்சேர்த்து ஆயிரக்கணக்கான மழுக்களையும் கூரிய வாட்படைகளையும் உயர வெடுத்து அவன் மீது வீசினார்கள்; உயிருடனே இவனுடலைத் தின்று விடுவோமென்று சொல்லிக் கொண்டு இடிபோல் பயங்கரமாக அதட்டினார்கள். அவர்கள் வீசியெறிந்த மழுக்களும் வாட்களும் பரமபக்தனான அவனையாதொன்றும் செய்யமாட்டாவாயின; தாக்கவும் குத்தவும் பிளக்கவும் அவர்களெறிந்த ஆயுதங்களெல்லாம் அவனுடலிற் பட்டவளவில் முறிந்து நுண்ணிய துகள்களாயொழிந்து அவனுடம்பு முழுவதிலும் தினவு சொறிதல் போன்றதன்மையையும் செய்யாவாயின; அங்ஙனமாக அவன் எம்பெருமான் இணைத்தாமரையடிகளை மேன்மேலுஞ் சிந்தை செய்து கொண்டும் அவனது திருநாமத்தையும் உயர உச்சரித்துக் கொண்டும் விளங்கினன். பின்பு அவ்வசுரர்கள் இரணியனிடஞ்சென்று "வலியோனே! எங்களிடமிருந்த சிறந்த பெரிய ஆயுதங்களெல்லாம் பொடியாகி விட்டன; அவற்றால் உன் பிள்ளையினுடம்புக்குச் சிறிது தீங்கு முண்டாக வில்லை! இனி நாங்கள் செய்ய வேண்டிய செயல் யாதோ? கட்டளையிட வேணும்" என்று கூற, அது கேட்ட இரணியன் "அப் பயல் மாய மனத்தனானதலால் அம் மாயையின் வலிமை கொண்டு ஆயுதங்களைக் கட்டிவிட்டான் போலும்; இருக்கட்டும். விரைவாக நெருப்பை மூட்டி நிறைத்து அதில்

அவனைத் தள்ளுங்கள்" என்றுரைத்தான்; அங்ஙனமே அவ்வசுரர்கள் நெருப்பை மூட்டுந் தொழிலிலே முயன்று நின்றார்கள். ஒரு பெருங் குழியிலே விறகுகளை மலைபோல உயரமாக அடுக்கி, குடங்குடமாக எண்ணெயையும் வெண்ணெயையும் நெய்யையும் சொரிய, நெருப்பு வானத்தளவு மெழுந்து சொலிக்க அதில் பிரகலாதனை யெடுத்துப் போட்டார்கள். அப்போது அவன் ஹரிநாமஸங்கீர்த்தனமே செய்து கொண்டிருந்ததனால் அந்த நெருப்புக் குளிர நின்றது.

உடனே அசுரர்கள் இரணியனிடம் ஓடிச் சென்று "மகாப்பிரபுவே! உன் மைந்தனை, சுழன்றெரிகின்ற நெருப்புமிக்க பெருங்குழியிற் போகட்ட பொழுதும் அந்த நெருப்பு அவனை எரிக்கவில்லை; இனிமற்றும் நாங்கள் செய்யத் தக்கது யாது?" என்ன, இரணியன் கோபாக்கினி பொங்கி எழுகின்ற கண்ணினனாய் "என் கட்டளைக்கு இணங்கி நடவாத அக்னிதேவனையும் கட்டிக் கொடிய சிறையில் வைத்திடுங்கள்; எனது கள்வக்குமரனைப் பிடுங்கித் தின்னுமாறு அஷ்டமகாநாகங்களையும் அவன் மேல் ஏவுங்கள்" என்றனன். அவ்விரணியன் நினைத்த மாத்திரத்தில் அனந்தன் முதலான அஷ்டமகாநாகங்கள் அங்கு வந்து சேர்ந்து ப்ரஹ்லாதன் மேற்பாய்ந்து தம் விஷப்பற்கள் அழுந்த ஊன்றிக் கடிக்கவும் ஸ்ரீ சேஷசயனனான ஸ்ரீமந் நாராயணனிடத்துப் பரம பக்தியே வடிவெடுத்த அச்சிறுவன் சிறிதும் வருந்திற்றிலன். பாம்புகளுக்கு வைரியாகிய கருடனும் நடுக்கமடையும்படி அந்த அஷ்டமகாநாகங்கள் பிரகலாதனைக் கடித்துப் பிடுங்கியபொழுது அவற்றின் பற்கள் வலிமையொழிந்து ஒடிந்து உதிர்ந்தன; கடிப்பதற்காக அவை பற்களை ஊன்றவைத்தபொழுது அவற்றின் துளைகளிலிருந்தெல்லாம் விஷம் பாயாமல் அமுதத் துளிகளே ஊறி யொழுகின.

இன்னும் என்ன செய்தும் பிரகலாதன் இறவாததைக் கண்டு இரணியன் இந்தப்பயல் அசுரர்கட்கு உரிய தொரு மாயையினால் இறவாதிருக்கைக்கு உரிய உபாயத்தை இயல்விலே உடையான் போலும்; இருக்கட்டும் இனி இவனுயிரை யானே கவர்வேன்' என்று சொல்லிச் சீறிச் சிவந்து உறுமிக் கொண்டு சிறுவனருகில் வந்தனன். வந்த தந்தையை மைந்தன் வணங்கி 'எந்தாய்! எனது நிலைபெற்றவுயிரை நீ கவர்ந்து கொள்ள நினைத்தாயெனினும் இவ்வுயிர் உனது வசத்திலுள்ளதன்றே: ஸகல லோகங்களையும் ஒருங்கு படைத்தருளியவரான ஸ்ரீமந் நாராயண மூர்த்தியே கொள்ளும்படியுள்ளதன்றோ இவ்வுயிர்; ஏதுக்கு வீண் பிரயாஸம்? என்றனன். அது கேட்டுக் கடுங் கோபமடைந்த இரணியன், பயலே! நீ சொல்லுகிற நாராயணனென்பவன் உண்மையிலுளனாயின் எங்குளன்? சொல்லு என, அதற்குப் பிரகலாதன்

"உர்வ்யாமஸ்தி உதகேஷு சாஸ்தி
உடுபதாவஸ்தி அஸ்திசோஷ்ணத்யுதௌ
வஹ்நௌதிக்ஷு விதிக்ஷு
வாயுநபஸோஸ் திர்யக்ஷு அதிர்யக்ஷு ச,
அப்ஸ்யந்தர் பஹிரஸ்தி ஸத்யஸதி
வா ஸாரேஷு அஸாரேஷுவா
ஸாவத்ராஸ்தி ஸதாஸ்தி கிம்
பஹுகிரா த்வய்யஸ்தி மய்யஸ்தி ச"

என்றான்.

இங்ஙனம் அற்புதமாகப் பிரகலாதன் பிரதிஜ்ஞை பண்ணிக்கூறினது கேட்ட இரணியன் பரிஹாஸக் கருத்துடன் சிரித்துக் கோபித்து எதிரிலுள்ள ஒரு தூணிலே கன வேகமாகத் தன் கையாலறைந்தான். அங்ஙனம் அறைந்தவளவிலே அதனுள்ளே சிவந்த கண்களுடைய நரசிங்க மூர்த்தி தனது ஆரவாரத்தால் திக்குகளைக் கிழித்து அண்ட கோளத்தைப் பீறிக்கொண்டு சிரித்தது. திருமால் அங்ஙனம் சிங்கவடிவத்தோடு தூணினுள்ளே சிரித்தவுடனே பிரகலாதன் பெருமகிழ்ச்சி கொண்டு கூத்தாடினன்; ஆனந்தக் கண்ணீர்விட்டு அழுதனன்; கீதம்பாடி ஆரவாரித்தனன்; தலைமேல் கைகூப்பினன்; கீழே விழுந்து வணங்கினன்; துள்ளித்துள்ளிக் குதித்தனன்; இனைய பலவுஞ் செய்தனன்.

இரணியனோ வென்னில் அச்சிரிப்பைக் கேட்டு 'யாரடா நீ? இப்பயல் சொன்ன திருமாலோ நீ? நீ முன்பு எனக்கு அஞ்சிப்புக்கு ஒளித்துக் கொண்டிருந்த கடலில் இடம் போதாதென்று இத்தூணைத்தேடி இதனுள்ளும் ஒளித்தாயோ அடா? என்னோடு நீ போர் செய்யவல்லையாகில் வெளிப்புறப்படடா' என்று கூசாது இகழ்ந்து கூற, உடனே அந்தத்

தூணும் பிளவுபட்டது; அவ்விடத்தினின்று சிங்க மூர்த்தியும் வெளித்தோன்றிற்று; அத்திரு வுருவம் எட்டுத்திசைகளையும் அளாவி வளர்ந் தது; அண்டரண்டபகிரண்டங்களையும் அளா விற்று;

அச் சிங்கவடிவத்தின் பிடரியில் எழுந்து வளைந்து தொங்குகின்ற நீண்ட மயிர்த்தொகுதி யானது பிரளய காலாக்னியின் ஜ்வாலைகளை வென்றிட்டது. அச்சிங்க மூர்த்தியின் உள் நின்று வெளிப்படுகிற சுவாசக்காற்றனது ஊழிக்காலத்துப் பிரசண்டமாருதத்தை வென்றிட்டது.

அக்கோடரியுருவன், இரணியனும் பிரக லாதனும் தவிர மற்ற அசுரர்களை யெல்லாம் வெகு விரைவிலே கொன்று நின்றனன்; இந் நிலைமையில் இரணியன் வாளும் கேடகமு மேந்திப் பேராரவாரஞ்செய்து உதட்டை மடித் துக்கொண்டு சீறிச் சிவந்து அச்சிங்க மூர்த்தி யோடு போர் செய்யுமாறு எதிரிற் சலியாது நின்றனன். அங்ஙனம் நின்றபடியைப் பிரக லாதன் நோக்கி, "எனது அருமைத்தந்தையே! இந்த நரசிங்க மூர்த்தியின் நிலைமையைப் பார்த்தும் நீ உன் உள்ளத்தில் சிறிதும் நல்லறிவு கொண்டனையில்லை போலும்; இப்பொழுதா கிலும் எனது திருமாலை வணங்கமாட்டாயோ? வணங்கின வளவிலேயே அப்பெருமான் உனது குற்றங்களை யெல்லாம் பொறுத்தருள் வான்" என்று இத முரைத்தனன். அது கேட்ட இரணியன் "அடா பயலே! ஒரு நொடிப்பொழுதில் இச் சிங்கத்தின் தோள்களை யும் தாள்களையும் வெட்டித்தள்ளி உன்னையும் துண்டித்து, அங்ஙனம் வெற்றி தந்த எனது வாட்படையை யான் வணங்குவதேயல்லாமல் பிறரை வணங்குவதென்பது முண்டோ?" என்று சொல்லி நகைத்து அந்நரசிங்க மூர்த் தியை எதிர்த்ததற்கும் நெருங்கினன். அப் போது அத்திருமால் அவனைப் படாதபாடுகள் படுத்தி மடியிடை வைத்துக் கைந்நகங்களை அவனது மார்பில் ஊன்றியவளவிலே இரத்த வெள்ளம் அபரிமிதமாகப் பெருகிற்று. அசுரர் கோமான் தொலைந்தொழிந்தனனென்று, இதுவரையில் அவனுக்கு அஞ்சியோடி யொளித்திருந்த தேவர்கள் முதலியோர் அச்ச மின்றி அங்கு வந்து நெருங்கி நின்று தேறித் துதித்துவணங்க, சிங்கப்பிரான் சீற்றந் தணிந்து தன்கையில் அபய முத்திரையைக் காட்டியருள, அப்போதும் பயம் தெளியாத தேவர்கள் பெரிய பிராட்டியாரை அச் சிங்கப் பிரானருகில் செல்லும்படி பிரார்த்தித்து அனுப்ப, தன்னருகில் வந்த அத்திருமகளை அருளோடு நோக்கிச் சினந்தணிந்த சிங்கப் பிரான் பிரகலாதனைப் பேரன்போடு கடாக்ஷித் தருளி வரமளித்து, தேவர்களை நோக்கிப் பிரக லாதனுக்கு முடிசூட்ட நியமித்து மறைந்தனன். தேவர்களும் அக்கட்டளையின்படியே முடி சூட்ட, பிரகலாதன் அரசர்கட்கு மரசனய் மூவுலகங்களையும் தன்வசத்திற் கொண்டு இனிது வாழ்ந்து வந்தனன்......

இவ்வவதாரத்தைப் பற்றிய பல பல மருமங்கள்

"பரமபக்தியே வடிவெடுத்தவன் பிரக லாதன்" என்று உலகமெல்லாம் புகழா நிற்க, இப்பரமபக்தன் மீது பழிமொழிகள் கூறுவாரும் சிலருளர். (அதாவது) உபநிஷத்துக்களில் "மாத்ருதேவோ பவ, பித்ருதேவோ பவ, ஆச் சார்ய தேவோபவ" என்று காணப்படுகிற விதிக்கு மாருக பிரஹ்லாதன் ஆச்சார்ய த்ரோஹியாயும் பித்ருத்ரோஹியாயும் பேர் பெற்று விட்டான்; ஆசார்யனன அசுரகுருவின் கட்டளையை மீறினதுமல்லாமல் குருவின் விஞ்சின சீடனய் அவனுக்குத்தான் உபதேசம் செய்யப் புறப்பட்டது மிகவும் அதிகப்பிஸங்கச் செயல். இதுவன்றியும் தந்தையான இரணி யனுக்கு மிகவும் த்ரோஹியாய் அவனைக் கொலையுண்ணும்படி செய்து வைத்த பெரும் பாதகமும் இவன் பாலுள்ளது. ஆகவே "மத்பக்தோபி ந வைஷ்ணவ:" என்ற பகவத் வாக்கியத்தின்படி இவன் அவைஷ்ணவனே யாவன் என்பது சிலர் கூறும் பழிமொழியாம். இதற்குச் சமாதானம் கேண்மின். இது சாஸ்த்ர தத்துவ மறிந்தவர்கள் கூறும் கூற்றன்று. நெறி தவறிப்பேசும் குருவையும் தந்தையையும் ஆத ரிக்க வேணுமென்பது நூற் கொள்கையன்று. ஸ்ரீராமாயணத்தில் அயோத்தியாகாண்டத்தில், குலகுருவான வஸிஷ்டமுனிவர் இராம னிடத்தில் படுகிற பாடும், தந்தையாகிய தசரத சக்ரவர்த்தி இலக்குமணனிடத்தில் படுகிற பாடும் உலகப் பிரசித்தமானவை. அவற்றைச் சிறிது விவரிக்கிறேம் கேண்மின்.

ஸ்ரீ தேவி பூதேவி சமேத

ஸ்ரீ சென்னகேசவப் பெருமாள், சென்னை

அன்பின் என்பு

வித்துவான் திரு. சி. அருணைவடிவேலு முதலியார், தருமபுரம்.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

அந்நிலை அவனுக்கு வாய்க்கப் பெருமையால் அவன் அம்மையாரை வேருகக் கருதி அவருடன் வாழ்வதற்கு அஞ்சி, அவரைவிட்டு நீங்கவே நினைத்தான்.

கணவன் பிரிவு :

நாட்கள் பல சென்றன. பரமதத்தன் 'மரக்கலத்தின்மேல் கடல் கடந்து சென்று வாணிபம்செய்து பெரும்பொருள் ஈட்ட நினைக்கின்றேன்' என்று சொல்லி மரக்கலம் கட்டுவித்து, தக்க பல துணைவர்களுடன் நல்லதொரு நாளில் கடல் தெய்வத்திற்கு வழிபாடுசெய்து, கலத்தில் ஏறிக் கடல்மேற் சென்ருன். சென்று அயல்நாடுகள் பலவற்றை அடைந்து வாணிபம் செய்து மிக்க பொருளுடன் மீண்டான். மீண்டவன் காரைக்காலிற்கு வாராது, பாண்டிய நாட்டில் ஒரு நகரத்தை அடைந்து அங்குத் தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டு வாணிபம் செய்யத் தொடங்கினுன். தனக்கு மணம் ஆயினமை முதலிய வரலாறுகளுள் ஒன்றையும் அங்கு வெளிப்படுத்தாமல், அந்நகரிலே உள்ள ஒருவணிகன் மகளை மணந்து வாழ்ந்தான். அவனது மணவாழ்க்கையின் பயனுகப் பெண் மகவு ஒன்று பிறந்தது. அதற்கு, தன் முன்னை மனைவியைத் தன் குல தெய்வமாக நினைத்து, 'புனிதவதி' என்றே பெயர் இட்டான்.

தொண்டைநாட்டுத் திருப்பதியநுபவம் ... ...

இராமனைக் காட்டில் நின்று மீட்டுக் கொண்டு போவற்காக ஸ்ரீ பரதாழ்வானுடன் சித்திர கூடத்திற்கு வந்து சேர்ந்த வஸிஷ்ட முனிவர் "ஸோஹம்தே பிதுராசார்ய:" என்று தொடங்கித் தாம் குலகுருவென்பதை விளக்கிக் கொண்டு தம் பேச்சை ஆதரித்தேயாகவேணுமென்று ஸம்பிரமித்தது என்னுயிற்று ? "குரோரபி அவலிப்தஸ்ய கார்யாகார்ய மஜாநத:, உத்பதம் ப்ரதிபந்நஸ்ய ஸத்யஸ்த்யாகோ விதீயதே." என்று ஸகலசாஸ்த்ர ஸித்தாந்த ஸர்வஸ்வமொன்று வெளிவரும்படி யாயிற்று. யுக்தமானதைச் சொல்லுபவன் ஆச்சார்யனேயொழிய அயுக்தமான வற்றைச் சொல்லுமவனும் ஆச்சார்யனுவனே? தந்தையின் திறமும் இத்தகைத் தேயாம். அதையும் அடுத்தபடியாக நிரூபிக்கிருேம்.

ஸுமந்திரர் கங்கைக் கரையினின்றும் தேரைத் திருப்பிக் கொண்டு புறப்படும்போது திருத்தந்தையாரிடம் என்ன விஞ்ஞாபிப்பதென்று லக்ஷ்மணனைக் கேட்க, அதற்கு அவன் "அஹம் தாவந்மஹாராஜே பித்ருத்துவம் நோபலக்ஷயே" என்ருன். சக்கரவர்த்தியை நான் பிதாவாகமதிக்கின்றிலேன் என்பது இதன் பொருள். பித்ருபக்தனுயிருந்த லக்ஷ்மணன் இப்படி ஏன் சொல்ல வேண்டிற்று ? தந்தை ஒழுங்கான முறையில் நடந்து கொள்ளாமை பற்றியே யன்றோ. ஆக இவ்விரண்டு த்ருஷ்டாந்தங்களினுலும் ஆசாரியனுடைய திரஸ்காரமும் பிதாவின் திரஸ்காரமும் ப்ராப்தமாம்போது அவை பழிப்பற்றவையென்று தெரிந்து கொண்டோம். "இதிஹாஸபுராணப்யாம் வேதம் ஸமுபப்ரும்ஹயேத்" என்கிற சாமாந்ய வசனத்திற்கும் மேலாக "வேதோபப்ரும்ஹணார்த்தாய தாவக்ராஹயத ப்ரபு" என்கிற விசேஷவசனமுமுண்டாகையாலே வேதோபப்ரும்ஹணார்த்தமாகவே ப்ரவ்ருத்தமான ஸ்ரீ ராமாயணம் 'பித்ருதேவோ பவ— ஆசார்ய தேவோ பவ' என்கிற ச்ருதிவாக்யங்களிரண்டையும் உபப்ரும்ஹித்திருப்பதாகக் காண்பவர்கள் ப்ரஹ்லாதாழ்வானைப் பற்றி ஆசார்ய த்ரோஹியென்றும் பித்ருத்ரோஹியென்றும் வாய்திறக்க வழியில்லையென்றுணரக் கடவர்கள். (தொடரும்)

கணவன் உள்ள இடத்தை அடைதல் :

இவன் இவ்வாறு இருக்க, காரைக் காலில் உள்ளவர்கள், 'பரம தத்தன் சென்று நெடுநாள் ஆகியும் மீண்டு வாராதது என்னை' என நினைந்து, அதுபற்றி ஆராயத் தொடங்கினர். அப்பொழுது பரம தத்தனைப் பற்றிய செய்திகள் யாவும் அவர்கட்குத் தெரியவந்தன. புனிதவதியார்தம் தந்தையாரும் முன்னரே இவ்வுலக வாழ்வை நீத்தார். அவர்தம் குடிக்கு ஒரு மகளாராகிய புனிதவதியாருக்கு மகப்பேறும் இல்லை. அதனால், அவரது தனிமை நிலைக்கு இரங்கிய அவர்தம் சுற்றத்தார், அவரைப் பரம தத்தன் இருக்கும் இடத்தில் கொண்டு போய் அவனிடம் சேர்ப்பது என்று முடிவு செய்து, அவரைச் சிவிகை ஒன்றில் வைத்து ஆடவரும் பெண்டிருமாக உடன் சென்று பாண்டிய நாட்டில் பரம தத்தன் இருக்கும் ஊரை அடைந்து, அவனுக்குத் தாங்கள் வந்துள்ள செய்தியைச் சொல்லி விடுத்தனர்.

கணவன் வணங்கல் :

கேட்ட பரமதத்தன் அச்சங்கொண்டு தன்மனைவி முதலியோருக்கு முன் நிகழ்ச்சிகளைத் தெரிவித்து, புனிதவதியார் ஒரு தெய்வம் என்பதையும் கூறித் தன் இரண்டாம் மனைவியையும் அவள் வயிற்றிற் பிறந்த பெண் மகவையும் அழைத்துக் கொண்டு வந்து புனிதவதியாரைக் கண்டான். கண்டு, இளம்பெண்மான் போல நிற்கின்ற அவரது திருவடிகளில் மனைவி மகவுடன் வீழ்ந்து வணங்கி, 'அடியேன் உமது திருவருளால் நல்வாழ்வு வாழ்கின்றேன்; இவ்விளங் குழவிக்கும் உமது பெயரையே இட்டிருக்கின்றேன்' என்றான். அவனது செய்கையைக் கண்ட புனிதவதியார் அச்சத்தோடு விலகிச் சுற்றத்தார் நடுவிற் சென்று நின்றார். பரம தத்தன் செய்த செயலுக்கு அச் சுற்றத்தார்கள் வெட்கம் அடைந்தனர்.

பரம தத்தன் விளக்கம் :

பின்பு அவர்கள் பரம தத்தனை நோக்கி, 'உன் மனைவியாகிய இவளை நீ வணங்கியது என்ன?' என வினவ, பரம தத்தன், 'இவர் மக்கட் பிறப்பினரல்லர்; உலகிற்கு நன்மை செய்ய வந்துள்ள ஒரு தெய்வம். இம் மறைபொருளை யான் அறிந்துதான் இவரை விட்டு நீங்கி வேறொருத்தியை மணந்துகொண்டு வாழ்கின்றேன். அவள் வயிற்றிற் பிறந்த இப் பெண்ணுக்கும் இவரது பெயரையே இட்டிருக்கின்றேன்; அதனால்தான் வணங்கினேன்' என்று சொல்லி,முன்னை நிகழ்ச்சிகளை யெல்லாம் விளங்கக்கூறி, 'என்னைப் போலவே நீங்களும் இவரை வணங்க வேண்டும்' என்றான்.

பேய்வடிவம் பெறுதல் :

பரம தத்தன் கூறியவற்றைக் கேட்ட சுற்றத்தார்கள் ஒன்றும் தோன்றாது திகைத்து நின்றார்கள். புனிதவதியார் தமது உலகியல் வாழ்க்கை அதனோடு முடிந்ததை உணர்ந்து, தம்இறைவராகிய சிவபெருமானை ஒன்றிய உணர்வினால் ஊன்றி யுணர்ந்து, 'பெருமானே, இவன் எண்ணம் யாதுஎன்பதனை இதுவரையில் அறியாதிருந்தமையால், இவன் பொருட்டு அழகோடு கூடிய இவ்வுடம்பைச் சுமந்திருந்தேன்; இனி இவன் எண்ணம் என்னைத் துறப்பதாயிற்று; ஆகவே, இவனுக்காகச் சுமக்கப்பட்ட இத் தசைப் பிண்டம் வீழ்ந்தொழிய, திருக்கைலையில் உன் திருவடிகளுக்குத் தொண்டு செய்கின்ற பேய்களின் வடிவத்தை அடியேனுக்கு அளித்தருள வேண்டும்' என்று வேண்டினார்.

அங்ஙனம் வேண்டிய பொழுதே தமக்கு இறைவன் செய்த திருவருள் வலிமையால், தம் உடம்பிலிருந்த இறைச்சி, தோல், உதிரம் எல்லாவற்றையும் உதறி, வெறும் எலும்பே வடிவமாகிப் பேயுருவம் பெற்று நின்றார். அவரது அருஞ்செயலைக் கண்ட தேவர்களும், சிவகணங்களும் அதிசயித்து ஆரவாரித்தனர். சுற்றத்தார்களும் பரம தத்தனைப் போலவே அச்சங் கொண்டவர்களாய்,அவரை வணங்கி விட்டுச் சென்றார்கள்.

பாமாலை பாடுதல் :

புனிதவதியார், இறைவன் தமக்குச்

செய்த அற்புதத் திருவருளை நினைந்து, 'எம்பெருமானது திருவடிகளை நேரே கண்டு வணங்கும் நல்ல சிவகணங்களுள் ஒன்றாய் இருக்கும் பேற்றினை நான் பெற்றேன்' என்று மகிழ்ந்து, '**அற்புதத் திருவந்தாதி**' என்னும் சொன்மாலை பாடிப் போற்றினார். பின்பு மற்றொருவகை அந்தாதியாகிய '**இரட்டை மணிமாலை**' என்னும் பாமாலையையும் பாடி மகிழ்ந்தார். அவர் 'நற்கணத்தில் ஒன்றானேன்' என்று மகிழ்ந்து கூறிய திருப்பாடல்,

**"பெறினும் பிறிதியாதும் வேண்டேம் நமக்கீது
உறினும் உறுதொழியு மேனும்—சிறிதுணர்த்தி
மற்றொருகண் நெற்றிமேல் வைத்தான்றன் பேயாய
நற்கணத்தில் ஒன்றாய நாம்"**

என்பது. 'இப் பேய் வடிவம் நமக்கு நன்மை பயப்பதாயினும் ஆக; அன்றி நன்மை பயவாதாயினும் ஆக; எம்பெருமானை அணுகி நிற்கும் பேய்களுள் ஒன்றாகப் பெற்ற நாம், இனிப்பிறிதொருபேறு, தானே கிடைப்பதாயினும், — அதனைக் கொள்ளோம்' என்ற அவரது அன்பின் பெருமையை இத் திருவெண்பாவில் நாம் காண்கின்றோம். திருமகளினும் மேலான அழகுவாய்ந்த உடம்பைத் துறந்துபெற்ற என்பு வடிவத்தையே எல்லாப் பேற்றினும் மேலாக நினைந்து மகிழ்ந்த அவரது பேரன்பின் நிலை எவராலேனும் அளவிடப்படுவதோ? அதனால், அவ்வென்பு வடிவத்தினைப் பெற்று மகிழ்ந்த அவரை, '**அன்பின் என்பு**' என்றே கூறுதல் பொருத்தமே யன்றோ.

அன்பும் இன்பும் :

தொடக்கத்திற் கூறியபடி, 'அன்பு' என்பதனோடு, 'என்பு' என்பதனை இணைத்துக் கூறுதலேயன்றி, 'இன்பு' என்பதனையும், ஆன்றோர் இணைத்துக் கூறுவர்; என்னை யெனில், அன்பினால் பெறுவது இன்பமே யாகலின்,

**"அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு"**
என்னும் திருக்குறளிலும்,

**"ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
இன்பமே என்னுடை அன்பே"**
என்னும் திருவாசகத்திலும்,

**"இன்பின் இனிதென்றல் இன்றுண்டேல் இன்றுண்டாம்
அன்பின் நிலையே அது"**

என்னும் திருவருட் பயனிலும் அதனைக் காண்கின்றோம். அன்பையும் இன்பையும் இணைத்துக் கூறும் பாடல்கள் திருமந்திரத்திற்பல உள. அவ்வாறே அன்பினால் என்புருவாகிய புனிதவதியார் அதனாலே, இன்புருவும் ஆயினமை அறியற்பாலது.

திருக்கயிலை சேர்தல் :

அன்பின் என்பாகி நின்று அந்தாதியும் இரட்டைமணி மாலையும்பாடிமகிழ்ந்த புனிதவதியாருக்குப் பின்னர்த் திருக்கைலைக்குச் சென்று சிவபிரானை வணங்குதல் வேண்டும் என்னும் அவா உண்டாக வடக்கு நோக்கி மனத்தினும் அதிவேகமாக நடந்தார்; அவ்வாறு நடந்து செல்லுதற்கு அவர் கொண்ட பேய் வடிவம் பெரிதும் துணையாய் இருந்தது. அவ்வாறு அவர் அதிவேகமாகச் செல்லும் பொழுது வழியில் அவரது வடிவத்தைக் கண்டவர்கள் அச்சங் கொண்டு அப்பால் அகன்று ஓடினார்கள். அவ்வாறு ஓடுகின்றவர்கள் அவரது பேய் வடிவத்தின் நிலையைப் பற்றிப் பலவாறு பேசினர். அப் பேச்சுக்களைக்கேட்ட பேயார், 'எனக்குச் சிவபெருமானார் திருவருள் புரிய இருக்கின்றார் எனின், மற்றையோர் என்னைப் பற்றி என்ன சொல்லின் என்' என்று நினைத்து வடநாடுகள் பலவற்றையும் கடந்து கயிலாய மலையை அடைந்தார். பின்பு அம் மலையில் கால்வைத்து ஏறுதல் கூடாது என்று தலையினால் ஏறிச் சென்றார்.

அருளழைப்பும் அன்பழைப்பும் :

அவர் தலையினால் ஏறிச் சென்ற காட்சி உமையம்மையாரது கண்ணிற் பட்டது. அவர் அதிசயித்து, சிவபிரானை நோக்கி, 'என்னே ஓர் அதிசயம்; என்பு

வடிவம் ஒன்று தலையினால் நடந்து நம் கைலை மலையில் ஏறி வருகின்றதே; இதன் அன்புதான் என்னே!' என்றார். இறைவர், 'இவ்வாறு வருகின்ற இவள், நம்மையே எப்பொழுதும் விரும்பி அன்பு செய்கின்ற அம்மை' என்று சொல்லி அவ்வம்மை அருகில் வந்தபொழுது, **'அம்மையே (வா)'** என்ற ஒரு சொல்லை, உயிர்களெல்லாம் தமது திருவருளின் திறத்தை உணர்ந்து உய்யுமாறு அருளிச் செய்தார். ஒருவரையும்; 'அம்மையே (தாயே)' என்று அழைத்தறியாத பெருமான் தம்மை அம்மையே என்று அழைத்த பேரருளை அறிந்து அம்மையார், **'அப்பா (வந்தேன்)'** என்று சொல்லி ஆரா அன்புடன் அவரது திருவடிகளில் வீழ்ந்து வணங்கி எழுந்து நின்றார்.

வரம் பெறுதல் :

இறைவன் 'இப்பொழுது நீ நம்மிடத்தில் வேண்டுவது யாது?' என்று கேட்க, அம்மையார், 'பெருமானே, அழிவற்ற இன்பத்திற்குக் காரணமான உனது திருவடி அன்பு எனக்கு என்றும் மாறாது இருத்தல் வேண்டும். அவ்வன்பினால் பிறவாத நிலை எய்தி, உனது திருவடி இன்பத்தினை அடியேன் நுகர்தல் வேண்டும். பிறவாநிலை கைகூடாது மீண்டும் பிறப்பு உண்டாகுமாயின், அப்பிறப்பில் உன்னை மறவாதிருக்கின்ற நிலை வேண்டும்; நான் வேண்டுவது இன்னும் ஒன்று உளது; அஃது யாது எனின், நீ நடனம் ஆடும்பொழுது இசை பாடிக் கொண்டு உனது எடுத்த திருவடியின்கீழ் இருத்தல் வேண்டும்' என்று வேண்டினார்.

திருவடிப் பேறு :

வேண்டுவார் வேண்டுவதே ஈயும் பெருமானாகிய இறைவன், அவ்வாறே அவர் வேண்டியபடி இன்ப அன்பினால் எடுத்த திருவடியின் கீழ் இருந்து இசை பாடி இன்புற்றிருக்கும் நிலையை அருளுகின்றவனாய், 'அம்மையே நீ திருவாலங்காட்டிற்குச் சென்று அங்கு நமது நடனத்தைக் கண்டு ஆனந்த வெள்ளத்தில் அழுந்தி நம் அடியின் கீழ் இருந்து பாடிக் கொண்டு இருக்க' என்று அருளிச் செய்தான். அம்மையார் அங்ஙனமே திருக்கைலையினின்றும் நீங்கித் திருவாலங்காட்டு எல்லையை அணுகித் தலையினாலே நடந்து திருக்கோயிலை அடைந்து, பெருமானுடைய திருக்கூத்தைக் கண்டு பேரானந்தம் உற்று, **"கொங்கைதிரங்கி"** என்னும் இசைத்தமிழ்த் திருப்பதிகத்தைப் பாடி வணங்கி, எடுத்த திருவடியின் கீழ் இருந்தார். பின்னும், அவனது திருக்கூத்தை வியந்து, "எட்டி யிலவம்" என்னும் மற்றோர் இசைத் தமிழ்த் திருப்பதிகத்தையும் அருளிச்செய்தார்.

தாயிலியாகிய சிவபெருமானால் 'அம்மையே' என அழைக்கப் பெற்றமையால், அவரை அனைவரும், 'அம்மை' என்பதன்றி, முன்னைப் பெயராகிய 'புனிதவதியார்' எனக் கூறுதல் இல்லை. ஆளுடைய நம்பிகள், இவரது வரலாறெல்லாம் ஒருசொல்லில் அமைய, **"பேயார்"** என்று குறித் தருளினார். காரைக்காலில் தோன்றி வாழ்ந்தமைபற்றி, **'காரைக்காலம்மையார்'** என்றல் வழக்கு.

இங்ஙனம் அன்பின் என்பாகிய அம்மையார் அவ்வன்பினால் ஆண்டவனது அடிநிழலில் என்றும் இன்பின் வண்ணமாய் எழுந்தருளி இருக்கின்றார். அவரது அன்பின் பெருக்கமும், ஆண்டவனது அருளின் வண்ணமும் அவரது அற்புதத் திருவந்தாதி முதலிய இயல் இசைப் பாமாலைகளில் பொங்கித் ததும்புகின்றன; அவற்றை ஓது முகத்தால் அவரது அன்பின் பெருக்கத்தை நாம் அடைவோமாக. ❋

கண்ணுயிருப்பவன் கண்ணன்

திரு. வித்வான். V. K. ஸ்ரீநிவாஸாசார்யார், ஸ்ரீவில்லிபுத்தூர்.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

ஆகையினால் அதற்குச்சேர வ்யாக்யானம் செய்யும்போது, கண்ணன் என்றால் சுலபன் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். அது ஏதோ ஒரு சமயம்தான் போலிருக்கிறது "சுலப னில்லை" என்று பொருளுணர்த்தி நிற்கின்ற தாக வ்யாக்யானத்தில் கூறப்பட்டிருக்கிறது.

'இன்னுயிர்ச் சேவல்' என்ற திருவாய்மொழி யில் பிரிவாற்றாமையினால் ஆழ்வார் கலங்கிப் பேசியிருப்பது போல மற்ற இடங்களில் இப்ப டிப் பேசவில்லை.

அதில் ஒரு பாசுரம் :

"கூக்குரல் கேட்டும் நங்கண்ணன் மாயன் வெளிப் படான்
யாக்கையும் ஆவியும் அந்தரம் நின்றுழலுமே"

என்பது. இப்பாசுரத்தில் வரும் கண்ணனுக்கு வ்யாக்யானம் செய்யும் போது சுலபனில்லை என்று கூறி அதற்கு ஓர் உதாரணமும் காட்டி யிருக்கிறார்கள். ஓர் ஊரில் ஒரு ஆலமரம் இருந் தது. உண்மையில் அங்கு பேய் பிசாசு ஒன்று மில்லை. ஆனால் ஒருவன் வேணும் என்று "இந்த மரத்தில் பேய் இருக்கிறது. நான் ப்ரத்யக்ஷமாய்ப் பார்த்தேன்" என்று ஒரு கதையைத் திரித்து விடுகிறான். இது சிறிது சிறிதாகப் பரவ அவ்வூர் மக்கள் யாருமே அம் மரத்து அருகில் போவதை நிறுத்திக் கொண்டு விட்டார்கள், அம்மரத்தில் பேய் பிசாசு ஒன்றும் இல்லை என்று உண்மையைச் சொன்னாலும் நம்புவார் யாருமில்லை என்ற இக் கதையைக் காட்டி இதுபோலக் கண்ணன் என்றால் சுலபன் என்று எவனோ கட்டி விட்டுவிட்டான். நான் சொன்னாலும் யாரும் நம்பமாட்டார்கள். இவன் சுலபனேயில்லை. இவனிடம் கண்ணோட்டமே கிடையாது என்ற கருத்தோடு கண்ணன் என்று ஆழ்வார் அருளிச் செய்திருப்பதாக "வடயக்ஷப்ரஸத்தி போலே கிடீர் பவ்யன் என்னுமிது" என்று இங்கு கண்ணன் சொற்கு வ்யாக்யானம் செய்திருக்கிறார்கள்.

கண்ணன் என்கிற நாமம் மிகத் துன்பம் செய்யக் கூடியது என்பதை மிக அழகாக அனு பவிக்கும்படி மேலும் ஒரு பாசுரம் : அப் பாசு ரத்தின் கருத்தை அனுபவித்துப் பிறகு பாசு ரத்தை நோக்குவோம்.

ஆழ்வாராகிற தலைமகள்; உசாத்துணைக் காகச் சில குயில்களைப் பெற்று, அவற்றிற்குக் காலை வேளையில் நல்ல தயிர் சேர்ந்த அன்னத் தையும், அடுத்த வேளைக்குப் பால் சோற்றை யும் ஊட்டி இடைவேளைகளில் ஆராவமுதமான பகவன் நாமங்களையும் கற்பித்து வளர்த்து வந்தாள். தலைவன் கண்ணன் தன்னைப் பிரிந்து எல்லையில்லா இன்னலுக்கு ஆளாக்கின நிலை. இந்தத் தருணம் பார்த்து அந்தக் குயில் களும் கண்ணா கண்ணா என்று கண்ணன் நாமத்தை உரைக்க ஆரம்பித்தன. அந்த நாமம் இவள் செவியில் பட்டதும் தீப் பாய்ந் தது போலிருந்தது.

உடனே இக்குயில்களின் சமீபம் சென்று என்னுடைய உயிர்க்கு நீங்கள் சொல்லுகிறது யமனாயிருக்கிறது. தயவு செய்து அதைச் சொல்லாதீர்கள். என்னால் வளர்க்கப்பட்ட உங்கள் காலிலே விழுந்து சரணாகதி பண்ணிக் கேட்கிறேன் என்றாள். அவை மீண்டும் மீண் டும் கண்ணா! கண்ணா! என்றே கூவத் தொடங் கின. அப்பொழுது இவளுக்கு மேலும் மேலும் துக்கமும் சினமும் அதிகரித்தது. சினந்தே பேசத் தொடங்கினாள்.

நீங்கள் எந்த நாமத்தைச் சொல்லுவதில் மிக்க உகப்புடையவர்களாக இருக்கிறீர்களோ, அந்த நாமத்தை வாயால் சொல்லவும் எனக்கு

வெறுப்பாக இருக்கிறது. என்னுயிரை அது போக்கிவிடும். அவ்வளவு கொடிய தென்று அறிந்திருந்தும் வேணும் என்று என் உயிரைப் பிளப்பதற்காகவே நீங்கள் சொல்கிறீர்கள். தீராமாற்றுல் நெஞ்சைப் புண்படுத்தும் எமனுன அந்தக் கண்ணனுடைய நாமத்தையே குழறிக் குழறி என்னைக் கொல்லத் துணிந்தீர்கள். உயிர் தாங்கும்படியான ஒரு ராமநாமத்தை நீங்கள் சொன்னீர்களில்லையே. இவ்வளவு தூரம் நான் உங்களுக்கு அன்பாகப் பால்சோறு தயிர்சோறு இதற்கும் மேல் பகவானுடைய இனிய திருநாமங்கள் இத்தனையும் ஊட்டி உங்களைக் காப்பாற்ற, நீங்கள் என்னை நன்ருக ரக்ஷிக்கிறீர்களே! என்னையே கொலை செய்கிறீர்கள். இரக்கம் தொலைந்த இதயமுடையவராக இருக்கிறீர்கள்! நான் வேளா வேளைக்குச் சோறு போட்டது போல நீங்களும் காலந்தவருது இவ்விடத்திலே வந்து என் உயிரைப்போக்கும் திருநாமத்தைச் சொல்லுகிறீர்கள். நன்ருக இருக்கிறது. உங்களுடைய கருணை. சின்னப்பிள்ளைத் தனமாகப் பேசுகிறீர்கள். உங்களுக்கு எங்கே அறிவு இருக்கிறது. அதனுல்தான் இப்படி நடந்து கொள்ளுகிறீர்கள். என்றிப்படி கண்ணன் நாமத்தை எவ்வளவு கொடுமையாகப் பேசலாமோ அப்படிப் பேசியிருக்கிருர் ஆழ்வார்.

"உயிர்க்கு அது காலன் என்று உம்மை நான் இரந்தேற்குநீர்
குயிற்பைதல்காள்! கண்ணன் நாமமே குழறிக் கொன்றீர்
தயிர்ப் பழஞ்சோற்ருேடு பாலடிசிலும் தந்து சொல்
பயிற்றிய நல்வளமுட்டினீர் பண்புடையீரே!

என்பது அப்பாசுரமாகும். இவ்வாறே கண்ணனுடைய கொடுமை யெல்லாம் வெளிப்படும்படியாக "துயரமே செய்யுங் கண்ணு!" ன்றும் ஆழ்வார் அழைத்திருக்கிருர்.

நிற்க, கண்ணனுடைய தீம்புகளைப் பேச வேண்டுமென்ருல் ஆழ்வார்களின் தம் செயலை விஞ்சி நிற்கும் தன்மையளான ஆண்டாளைப் பேசவேணுமே யொழிய இவளைப் போல வேறு யாருக்கும் பேச முடியாது. அத்தகைய ஆண்டாள், கண்ணன் என்ருல் கொடியவன் என்று பொருள்படும்படி பல பாசுரங்கள் அருளிச் செய்திருக்கிருள். அவற்றுள் "கண்ணன் என்னும் கருந்தெய்வம்" என்பதும் ஒரு பாசுரம். இ பாசுரத்தில் கண்ணன் சொல்லுக்கு விளக்கமாகவே "கருந்தெய்வம்" என்று கடுமையாகப் பேசியிருப்பது யாவருக்கும் புலனுகுமன்றே.

மேலும், கரியமேனியன் என்ற பொருள் கொண்ட கண்ணன் சொல்லைத் திருவுள்ளத்தில் கொண்டு, "புறம்போல் உள்ளும் கரியானை" அதாவது திருமேனி மட்டும் கருமை நிறமாய் இருப்பதுபற்றிக் கண்ணன் என்று சொல்லவில்லை, திருமேனிபோல் உள்ளமும் அருளற்றுக் கடுமையாயிருத்தலால் கண்ணன் என்று சொல்லப்படுகிருன் என்று, கண்ணனின் கொடுமையைப் பேசி யிருக்கிருள் ஆண்டாள். மற்ருெரு பாசுரத்தில் கூறும்பொழுது, "கீதையில், என்னைச் சரணுகதி பண்ணு நான் காப்பாற்றுகிறேன் அஞ்சாதே" என்று சொன்ன அக்கண்ணன், இப்பொழுது என் விஷயத்தில் ஒன்றும் செய்யவில்லையே. அவன் சொல்வதெல்லாம் பொய். ஏலாப் பொய்கள் உரைப்பவன். நான் துன்புறும் இச்சமயம், "நீ அஞ்சாதே" என்று சொல்ல மாட்டாத அவன் ஒரு மனிதனு? என்று மிகவும் நொந்து, 'அஞ்சேல் என்னுன் அவனொருவன்' என்றும் "நந்த கோபன்" மகனென்றும் "கொடிய கடிய திருமால்" என்றும், "கொள்ளை கொள்ளிக் குறும்பன்" என்றும் "அல்லல் விளைத்த பெருமானென்றும்" "பட்டி மேய்ந்தோர் காரேறு" என்றும், "ஆயர் பாடி கவர்ந்துண்ணும் குணுங்கு நாறிக்குட்டேறு" என்றும் "தருமமறியாக் குறும்பன்" என்றும், பலவாறு கண்ணனுடைய தீம்புகளைப் பேசியிருக்கிருள். மேலும், அவனுடைய கண்ணற்ற செயலை, பெற்றதாய் சிறையில் விலங்கிடப் பட்டிருக்கையில் அவளைக்கதற விட்டு விட்டு வேருெரு தாயிடம் வளரப் போன அவன் ஒரு மனிதனு? "பெற்றதாய்க்கு உதவினுலன்ருே கொண்ட பெண்டிர்க்கு அவன் உதவுவான்". என்ற கருத்துப்பட "பெற்றிருந்தாளை ஒழியவே போய்ப் பேர்த்தொருதாய்இல் வளர்ந்த நம்பி" என்றும் கண்ணனின் கொடுமையைப் பேசியிருக்கிருள் ஆண்டாள்.

ஆக, இது காறும் கூறிய வாற்ருல் பிரிவில் ஆற்ருமை தாங்காது அரற்றும் போது, சில சமயங்களில் கண்ணனை நிந்தித்தும் பேசியிருப்பதால் அதுவும் ஒரு வகையில் கண்ணன் சொற்குப் பொருளாக அமையும் என்பது அறியப்பட்டது.

8. கரியமேனியன் கண்ணன்

இது காறும் தமிழ்க்கேற்பக் கண்ணன் சொற்குப் பல பொருள்களை உணர்ந்தோம். இனி வடமொழிக்கேற்பச் சில பொருள்களைக் காண்போம்.

கருநிற முடையவன் என்று பொருள் கொண்ட கிருஷ்ண: என்ற வடசொல் ப்ராகிருத மொழியில் கண்ஹோ என்று திரிந்து தமிழில் கண்ணன் என்று வழங்கும் என்பது அறியப் படுகிறது. இக்கண்ணன் சொல்லுக்கு வடமொழியில் உரைக்கப்படும் கரியன் என்ற பொருளையே தமிழிலும் கொள்ள வேண்டும். இவ்வாறான கண்ணன் சொல்லையும் ஆழ்வார்கள் பல இடங்களில் அருளிச் செய்திருக்கிறார்கள். அவற்றுள் ஒரு சில மேற்கோள்களை ண்டுக் காண்போம்.

"கார்முகில் போல் வண்ணன் என்கண்ணனை நான் கண்டேனே" என்ற இப்பாசுரத்தில் கார்காலத்து மேகம் போன்ற அழகிய கரிய திருமேனியை உடையவன் என்று, கண்ணன் சொற்பொருளை விவரித்து அப்பொருள் கொண்ட கண்ணன் சொல்லை 'என்கண்ணனை நான் கண்டேனே' என்று கூறியிருப்பது யாவருக்கும் புலனாகும். இதற்கு அடுத்த பாசுரமான பலஸ்ருதி ரூபமான பாசுரத்தில், கண்ணனைப் பற்றிப் பாடிய இப்பாடல்களையும் பயில்பவர் இன்ன பலனைப் பெறுவர்" என்று பலன் சொல்ல வந்தவர் கண்ணன் என்று பெயரைச் சொல்லாமல் அதன் பொருளையே கருத்தில் கொண்டு "கருமேனியம்மானைச் சொன்ன தமிழ்." என்பதனாலும் நன்கு உணரலாம்.

இப்படியே பகவானுக்குரிய கரிய திருமேனியையும், கண்ணன் என்ற திருநாமத்தையும் இணைத்துக் கண்ணன் சொற்பொருளை விவரித்துக் கூறிய இடங்கள் பல உண்டு. அவற்றில் சில "மொய்ம்மாம் பூம் பொழிற் பொய்கை முதலைச் சிறைப்பட்டு நின்ற கைம் மாவுக்கு அருள் செய்த கார்முகில் போல் வண்ணன் கண்ணன்" என்றும், "ஆராவமுதமாய் அல்லாவி உலகளந்த காரார்கரு முகில் போல் என் அம்மான் கண்ணன்" என்றும், "பேரமர் காதல் கடல் புரைய விளைவித்த காரமர் மேனி நம் கண்ணன்" என்றும், இவ்வாறே மேலும் பல பாசுரங்களிலும் கரிய திருமேனியை உடையவன் என்ற பொருளில் கண்ணன் சொற் பொருளை ஆழ்வார் விளக்கியிருக்கிறார்.

"கார்த்திரள் மாமுகில் போல் கண்ணன்" என்ற பாசுரப்பகுதிக்கு வ்யாக்யானம் செய்யுமிடத்து ஆச்சார்யர்கள் இக்கருத்தை நன்கு தெளிவு செய்திருக்கிறார்கள். இப்பாசுரத்தில் தலைமகனான எம் பெருமானை விட்டுப் பிரிந்து நோவுபடும் ஆழ்வாராகிய தலைமகள் சில பக்ஷிகளைத் தன் தலைவனிடம் தூது சொல்லும் படி வேண்டுகிறாள். அப்பக்ஷிகளுக்குத் தன் நாயகனது அடையாளங்களைச் சொல்லி அறிவுறுத்துவள் போல அவனது திருமேனி சௌந்தரியத்தில் ஈடுபட்டுப் பேசியிருக்கிறாள். "எல்லாவிடாயும் ஆறுங்கிடீர்! அவ்வடிவைக் காணப் பெறில். இவள் கண்ணுக்குக் கறுப்பாய் இருக்கிறதிறே. கறுப்பெல்லாம் திரண்டாப்போலே இருக்கிற மகாமேகம் போன்ற வடிவை உடையவன் அல்லது கார் காலத்தில் திரண்ட மஹா மேகம் போன்ற வடிவை உடையவன் என்றுமாம்." என்று அருளிச் செய்திருக்கும் வ்யாக்யானம் யாருக்கும் எளிதில் விளங்கக் கூடியதொன்றே.

ஆகவே வட மொழியில் கருநிற முடையவன் என்ற கருத்தில் விளங்கும் கிருஷ்ணன் என்ற சொல் தமிழில் கண்ணன் என்று வழங்கி மேற் கூறிய பொருளைத் தருகிறது என்பதை அறிந்தோம்.

9. களிக்கச் செய்பவன் கண்ணன்

இனி வட மொழியிலேயே கிருஷ்ண: என்பதற்கு ஆனந்திப் பிக்கிறவன். அதாவது மிகமகிழ்ச்சி அடையும்படி செய்பவன் என்ற பொருளும் உண்டு. அப் பொருளில் வழங்கும் கிருஷ்ண சப்தமும் ஆழ்வார் பாசுரங்களில் உண்டு என்பதை நோக்குவோம்.

அல்லலில் இன்பம் அளவிறந்தெங்கும் அழகமர் [சூழொளியன்
அல்லிமலர் மகள் போக மயக்குக்கள் ஆகியும் [நிற்குமம்மான்
எல்லையில் ஞானத்தன் ஞானம·:தே கொண்டு [எல்லாக் கருமங்களும் செய்
எல்லையில் மாயனைக் கண்ணனைத் தாள்பற்றி [யானேர்துக்க மிலனே.

என்ற பாசுரத்தில், எல்லையில் மாயனைக் கண்ணனைத்தாள்பற்றி என்ற விடத்து வழங்கியுள்ள கண்ணன் சொல் வடமொழியில் ஆனந்திப்பிக்கிறவன் என்ற பொருளில் வழங்கும் கிருஷ்ண சப்தத்தின் மருவுதலே. ஆகவே தான் இப்பாசுரத்தில் கண்ணன் சொல்லிற்கு அப்பொருள் கூறப்படலாயிற்று. வேதத்தில் ஆனந்திப்பிக்கிறவன் எம்பெருமான் என்ற பொருளில் வருகின்ற "ஏஷஹ் யெவாதந்தயாதி" என்ற வாக்யத்தையும், ஆனந்திப்பிக்கிறவன் என்ற கருத்தையே கிருஷ்ண சப்தத்திற்கு விவரித்துக் கூறுகின்ற

க்ருஷிர் பூவாசகச் சப்த: ணச்ச நிர்வ்ருதி,வாசக:|
விஷ்ணு: தத்பாவயோகாச்ச க்ருஷ்ணஇதயபீ
[தீயதே||

என்ற ப்ரமாணத்தையும், உட்கொண்டு கண்ணனைத் தாள் பற்றி யானோர் துக்கமிலனே என்ற பகுதிக்கு 'ஆனந்தா வஹனனவனைப் பற்றின எனக்கு ஒரு துக்கமில்லை' என்கிறார் என்று அருளிச் செய்த நம்பிள்ளை ஈட்டு வ்யாக்யானம் ரஸித்து அனுபவித்தற்குரியதாகும்.

10. ஆச்சார்ய குணசேஷ்டிதங்கள் உடையவன் கண்ணன்

ஆக இதுவரையும் கூறிய பொருள்கள் யாவும் கண்ணன் சொல்லுக்குரிய நேரான பொருள்களாம். இவ்வாறன்றி முன்பின்பதச் சேர்க்கையால் ஏற்படும் பொருள்கள் பலவாகும். அவற்றிலும் ஒரு சிலவற்றை இங்குக் காண்போம். மாயன் என்ற சொல்லுக்கு ஆச்சர்யமான சக்தியுடன் கூடியவன், செயல்களைச் செய்பவன் என்பது கருத்து. இம்மாயன் சொல்லோடு சேர்ந்துவரும் கண்ணனுக்கும் அதுவே பொருளாகக் கூறு மிடங்களுண்டு. "மலியும் சுடரொளி மூர்த்தி மாயப்பிரான் கண்ணன்" என்ற பாசுரத்தில் "ஆச்சரியமான குணசேஷ்டிதங்களையுடைய கிருஷ்ணன்" என்றும், "கண்ணனை மாயன் தன்னைக் கடல் கடைந்து அமுதம் கொண்ட அண்ணலை" என்ற விடத்து கண்ணனை மாயனை என்பதற்கு, "எத்திறம் என்னும் படியான குண சேஷ்டிதங்களை உடையவனை" என்றும் "கடல்மலிமாயப் பெருமான் கண்ணன் என் ஒக்கலையானே" என்ற விடத்து மாயனுக்குரிய பொருளே, அதாவது "அந்த ஆச்சரியங்களெல்லாம் தன் பக்கலிலே காணலாம் படி இருக்கிற கிருஷ்ணன்," என்றும் கண்ணன் சொல்லுக்குப் பொருள் கூறியிருப்பதை நோக்கினுல் ஆச்சரியமான குண சேஷ்டிதங்களை உடையவன் என்ற பொருளும் கண்ணன் சொல்லுக்கு உண்டு என்பது பெறப்படும். "தேவர்கட்கு எல்லாம் கருவாகிய கண்ணன்" என்ற பாசுரத்தில் ஜகத்திற்குக் காரணனுயிருப்பவன் என்ற பொருளும் "உண்ணும் சோறு பருகும் நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்" என்றும் "என்னுயிர்க் கண்ணபிரான்", என்ற பாசுரத்தில் உயிராயிருப்பவன் கண்ணன் என்றும் இப்படி முன்பின் சேர்ந்த சொல்லைத் தழுவிக் கூறும் பொருள்களும் பல உண்டு.

ஆகவே, "கண்ணன் சொற்பொருளும் ஆழ்வார்கள் அனுபவமும்" என்பது பற்றி அனுபவிக்கையில் 1. கண்ணுயிருப்பவன். 2. நிர்வாககன். 3. எங்குமுளன். 4. கண்ணழகன் 5. கண்ணுக்கினியன். 6. கண்ணோட்ட முடையவன். 7. கருத்தமேனியன். 8. மகிழ்விப்பவன் என்று சொல்லுக்குரிய நேர் பொருளும் 9. தீம்பன், 10. ஆச்சரியகுண சேஷ்டிதங்களை உடையவன். 11. எல்லாமாயிருப்பவன் 12. காரணனுயிருப்பவன். 13. உயிராயிருப்பவன், என்று இப்படி முன்பின் சொல் நோக்கிய பிறபொருள்களும் ஒருவாறு அனுபவிக்கப்பட்டதாயிற்று.

"கிளந்த வல்ல வேறு பிற தோன்றினும்
கிளந்தவற் றியலான் உணர்ந்தனர் கொளலே"

என்ற இலக்கணப்படி, பிற பொருள்கள் தோன்றினும் அவற்றையும் இவற்றுடன் இணைத்துக் கொள்க.

---★---

★

ஸ்ரீ பிரமராம்பாள் சமேத

ஸ்ரீ சென்னமல்லீசுவரர், சென்னை

திருத்தலத்து இறைவன் இறைவி திருப்பெயர்கள்

சமயபுரம் திரு. ந. இரா. ஊரன்

[தேவாரத் திருப்பதிகங்களைப் பெற்று விளங்கும் சிவத்தலங்கள் மொத்தம் 274. "இருநூற்று எழுபான் நான்கு என்பர் மூவர் அருட்பதிகம் இருக்கும் ஊர்" என்பது திருப்பதிக் கோவை. இவற்றோடு, கி.பி.1917ஆம் ஆண்டிற் கண்டுபிடிக்கப்பட்ட திருஞானசம்பந்தர் திருப்பதிகம் பெற்ற திருவிடைவாய் என்னும் தலத்தையும் சேர்த்தால், தேவாரப் பாடல் பெற்ற திருத்தலங்கள் மொத்தம் 275 ஆகும். இத் தலங்களிற் கோயில் கொண்டுள்ள இறைவன் இறைவி திருப் பெயர்களையெல்லாம் ஒருங்கு தொகுத்து, சைவசித்தாந்த சந்தானாசிரியர்களுள் ஒருவராகிய ஸ்ரீலஸ்ரீ உமாபதி சிவாசாரிய சுவாமிகள் அவர்கள், "சிவக்ஷேத்திர சிவநாமக் கலிவெண்பா" என ஓர் அரும் பெறல் நூலாக இயற்றியருளியிருக்கின்றார்கள். செய்யுள் வடிவில் உள்ள அதனைத் தழுவித் திரு. ந. இரா. ஊரன் அவர்கள் அமைத்துள்ள இத்தொகுப்பு, அன்பர்கள் யாவருக்கும் பயன்படும் பொருட்டு இங்கே வெளியிடப் பெறுகின்றது. இப் போற்றித் திருப்பெயர்த் தொடர்களை அன்பர்கள் தத்தம் சிவபூசையின் போது ஓதி வழிபட்டு மகிழலாம். இவற்றை ஓதித் துதிப்பதனால், ஈழம் முதல் இமயம்வரையிற் பரவியுள்ள எல்லாத் தேவாரத் திருத்தலங்களினும் எழுந்தருளி விளங்கும் இறைவன் இறைவியை, வழிபட்டு மகிழும் பெரும்பேறு வாய்க்கப் பெறலாம். இதனை அன்பர்கள் அனைவரும் ஓதிப் பயன் பெறுவார்களாக!

—ஆசிரியர்.]

தலப் பெயர்	இறைவன் பெயர்		இறைவி பெயர்	
சோழநாடு : காவிரியின் வடகரை 63				
கோயில் (சிதம்பரம்)	திருமூலநாத	போற்றி	உமையம்மை	போற்றி
திருவேட்களம்	பாசுபதேசுவர	,,	நல்லநாயகி	,,
திருநெல்வாயில்	உச்சிநாதேசுவர	,,	கனகாம்பிகை	,,
திருக்கழிப்பாலை	பால்வண்ணநாத	,,	வேதநாயகி	,,
திருநல்லூர்ப் பெருமணம்	சிவலோகத்தியாகேச	,,	நங்கையுமை	,,

தலப் பெயர்	இறைவன் பெயர்		இறைவி பெயர்		
திருமயேந்திரப்பள்ளி	திருமேனியழக	போற்றி	வடிவாம்பிகை	போற்றி	
திருமுல்லைவாயில்	முல்லைவனநாத	,,	கோதையம்மை	,,	
திருக்கலிக்காமூர்	சுந்தரேசுவர	,,	அழகுவனமுலையம்மை	,,	
திருச்சாய்க்காடு	சாயாவனேசுவர	,,	குயிலினும் நன்மொழியம்மை	,,	
காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரம்	பல்லவனேசுவர	,,	சௌந்தர நாயகி	,,	10
திருவெண்காடு	வெண்காட்டீசுவர	,,	பிரம்மவித்தியா நாயகி	,,	
திருக்காட்டுப்பள்ளி	ஆரணியசுந்தரேசுவர	,,	அகிலாண்ட நாயகி	,,	
திருக்குருகாவூர்	வெள்ளடையீசுவர	,,	காவியங் கண்ணி	,,	
சீர்காழி	பிரம்மபுரீசுவர	,,	திருநிலைநாயகி	,,	
திருக்கோலக்கா	சத்தபுரீசுவர	,,	ஓசைகொடுத்த நாயகி	,,	15
புள்ளிருக்குவேளூர் (வைத்தீசுவரன் கோயில்)	வைத்தியநாத	,,	தையல்நாயகி	,,	
திருக்கண்ணார் கோயில்	கண்ணாயிரேசுவர	,,	முருகுவளர்கோதை	,,	
திருக்கடைமுடி	கடைமுடிநாத	,,	அபிராமி	,,	
திருநின்றியூர்	மகாலட்சுமீசுவர	,,	உலகநாயகி	,,	
திருப்புன்கூர்	சிவலோகநாத	,,	சொக்கநாயகி	,,	20
திருநீடூர்	சோமநாதேசுவர	,,	வேயுறுதோளி	,,	
அன்னியூர்	ஆபத்சகாய	,,	பெரியநாயகி	,,	
வேள்விக்குடி	கலியாணசுந்தர	,,	பரிமளசுகந்தநாயகி	,,	
எதிர்கொள்பாடி	ஐராவதேசுவர	,,	மலர்க்குழல்நாயகி	,,	
திருமணஞ்சேரி	அருள்வள்ளல்நாயக	,,	யாழின்மொழியம்மை	,,	25
திருக்குறுக்கை	வீரட்டேசுவர	,,	ஞானாம்பிகை	,,	
கருப்பறியலூர்	குற்றம்பொறுத்தநாத	,,	கோல்வளையம்மை	,,	
குரக்குக்கா	கொந்தளேசுவர	,,	கொந்தளநாயகி	,,	
வாளொளிபுற்றூர்	மாணிக்கவண்ண	,	வண்டார்பூங்குழலி	,,	
மண்ணிப்படிக்கரை	நீலகண்ட	,,	அமுதகரவல்லி	,,	30
ஓமாம்புலியூர்	துயர்தீர்ந்தநாத	,,	பூங்கொடிநாயகி	,,	
கானாட்டுமுள்ளூர்	பதஞ்சலியீசுவர	,,	கானார்குழலி	,,	
திருநாரையூர்	சௌந்தரேசுவர	,,	திரிபுரசுந்தரி	,,	
கடம்பூர்	அமுதகடேசுவர	,,	சோதிமின்னம்மை	,,	
பந்தணைநல்லூர்	பசுபதீசுவர	,,	காம்பனதோளி	,,	35

தலப் பெயர்	இறைவன் பெயர்		இறைவி பெயர்		
கஞ்சனூர்	அக்கினீசுவர	போற்றி	கற்பகநாயகி	போற்றி	
திருக்கோடிகா	திரிகோடீசுவர	,,	திரிபுரசுந்தரி	,,	
திருமங்கலக்குடி	புராணவரதேசுவர	,,	மங்கலநாயகி	,,	
திருப்பனந்தாள்	செஞ்சடையப்ப	,,	பெரியநாயகி	,,	
திருவாப்பாடி	பாலுகந்தஈசுவர	,,	பெரியநாயகி	,,	40
திருச்சேய்ஞலூர்	சத்தியகிரீசுவர	,,	சகிதேவியம்மை	,,	
திருந்துதேவன்குடி	கற்கடகேசுவர	,,	அருமருந்தம்மை	,,	
திருவியலூர்	யோகாநந்தேசுவர	,,	சாந்தநாயகி	,,	
கொட்டையூர்	கோடீசுவர	,,	பந்தாடுநாயகி	,,	
திருவின்னம்பர்	எழுத்தறிநாத	,,	சௌந்தரநாயகி	,,	45
திருப்புறம்பயம்	சாட்சிநாதேசுவர	,,	கரும்படு சொல்லம்மை	,,	
திருவிசயமங்கை	விசயநாதேசுவர	,,	மங்கைநாயகி	,,	
திருவைகாவூர்	வில்வவனநாத	,,	வளைக்கைநாயகி	,,	
வடகுரங்காடுதுறை	குலைவணங்கீச	,,	அழகுசடைமுடியம்மை	,,	
திருப்பழனம்	ஆபத்சகாய	,,	பெரியநாயகி	,,	50
திருவையாறு	ஐயாறப்ப	,,	அறம்வளர்த்தநாயகி	,,	
திருநெய்த்தானம்	நெய்யாடியப்ப	,,	இளமங்கையம்மை	,,	
பெரும்புலியூர்	வியாக்கிரபுரீசுவர	,,	சௌந்தரநாயகி	,,	
திருமழபாடி	வயிரத்தூண்நாத	,,	அழகாம்பிகை	,,	
திருப்பழுவூர்	வடமூலநாத	,,	அருந்தவநாயகி	,,	55
திருக்கானூர்	செம்மேனிநாத	,,	சிவயோகநாயகி	,,	
அன்பிலாலந்துறை	ஆலந்துறைநாத	,,	சௌந்தரநாயகி	,,	
திருமாந்துறை	மாந்துறைநாத	,,	அழகாலுயர்ந்த அம்மை	,,	
திருப்பாற்றுறை	திருமூலநாத	,,	மேகலாம்பிகை	,,	
திருவானைக்கா	ஜம்புகேசுவர	,,	அகிலாண்டேசுவரி	,,	60
திருப்பைஞ்ஞீலி	நீலகண்டேசுவர	,,	நீணெடுங்கண்ணி	,,	
திருப்பாச்சிலாச்சிராமம்	மாற்றறிவரத	,,	பாலசௌந்தரி	,,	
ஈங்கோய்மலை	மரகதாசலேசுவர	,,	மரகதவல்லி	,,	

காவிரியின் தென்கரை 127

வாட்போக்கி	இரத்தினகிரீசுவர	,,	சுரும்பார்குழலி	,,	
கடம்பந்துறை	கடம்பவனநாத	,,	மூற்றிலாமுலையம்மை	,,	65

தலப் பெயர்	இறைவன் பெயர்		இறைவி பெயர்		
திருப்பராய்த்துறை	பராய்த்துறைநாத	போற்றி	பொன்மயிலம்மை	போற்றி	
கற்குடி	கற்பகநாத	,,	அஞ்சனாட்சி	,,	
மூக்கீச்சரம் (உறையூர்)	பஞ்சவர்ணேசுவர	,,	காந்திமதி	,,	
திருச்சிராப்பள்ளி	தாயுமானவ	,,	மட்டுவார்குழலி	,,	
எறும்பியூர்	எறும்பீசுவர	,,	நறுங்குழல்நாயகி	,,	70
நெடுங்களம்	நித்தியசுந்தர	,,	ஒப்பிலாநாயகி	,,	
மேலைக்காட்டுப்பள்ளி	தீயாடியப்ப	,,	வார்கொண்டமுலையம்மை	,,	
ஆலம்பொழில்	ஆன்மநாதேசுவர	,,	ஞானாம்பிகை	,,	
திருப்பூந்துருத்தி	புஷ்பவனநாத	,,	அழகாலமர்ந்தநாயகி	,,	
திருக்கண்டியூர்	பிரமசிரக்கண்டீசுவர	,,	மங்களநாயகி	,,	75
சோற்றுத்துறை	தொலையாச்செல்வ	,,	அன்னபூரணி	,,	
திருவேதிகுடி	வேதபுரீசுவர	,,	மங்கையர்க்கரசி	,,	
தென்குடித்திட்டை	பசுபதீசுவர	,,	உலகநாயகி	,,	
திருப்புள்ளமங்கை	ஆலந்துறைநாத	,,	அல்லியங்கோதை	,,	
சக்கரப்பள்ளி	சக்கரவாகேசுவர	,,	பால்வளைநாயகி	,,	80
திருக்கருகாவூர்	முல்லைவனேசுவர	,,	கரும்பணையாளம்மை	,,	
திருப்பாலைத்துறை	பாலைவனநாத	,,	தவளவெண்ணகையம்மை	,,	
திருநல்லூர்	கலியாணசுந்தர	,,	கலியாணசுந்தரி	,,	
திருவாவூர்ப் பசுபதீச்சரம்	பசுபதீசுவர	,,	மங்களநாயகி	,,	
திருச்சத்திமுற்றம்	சிவக்கொழுந்தீசுவர	,,	பெரியநாயகி	,,	85
திருப்பட்டீச்சரம்	பட்டீசுவர	,,	பல்வளைநாயகி	,,	
திருப்பழையாறை	சோமநாத	,,	சோமகலாநாயகி	,,	
வடதளி	வடதளிநாத	,,	கௌரி	,,	
திருவலஞ்சுழி	வலஞ்சுழிநாத	,,	பெரியநாயகி	,,	
குடமுக்கு (கும்பகோணம்)	கும்பேசுவர	,,	மங்களநாயகி	,,	90
குடந்தைக் கீழ்க்கோட்டம்	நாகேசுவர	,,	பெரியநாயகி	,,	
குடந்தைக் காரோணம்	விசுவநாத	,,	விசாலாட்சி	,,	
திருநாகேச்சரம்	நாகநாதேசுவர	,,	குன்றமுலைநாயகி	,,	
திருவிடைமருதூர்	மருதவாண	,,	நன்முலைநாயகி	,,	
தென்குரங்காடுதுறை	ஆபத்சகாய	,,	பவளக்கொடியம்மை	,,	95
திருநீலக்குடி	நீலகண்டேசுவர	,,	உமையம்மை	,,	
வைகன்மாடக்கோயில்	வைகல்நாத	,,	வைகலாம்பிகை	,,	

தலப் பெயர்	இறைவன் பெயர்		இறைவி பெயர்		
திருநல்லம்	உமாமகேசுவர	போற்றி	மங்களநாயகி	போற்றி	
திருக்கோழம்பம்	கோகிலேசுவர	,,	சௌந்தரநாயகி	,,	
திருவாவடுதுறை	மாசிலாமணிஈச	,,	ஒப்பிலாமுலையம்மை	,,	100
திருத்துருத்தி (குத்தாலம்)	வேதேசுவர	,,	முகிழாம்பிகை	,,	
திருவழுந்தூர்	வேதபுரீசுவர	,,	சௌந்தராம்பிகை	,,	
திருமயிலாடுதுறை (மாயூரம்)	மயிலாடுதுறையார்	,,	அப்யாம்பிகை	,,	
திருவிளநகர்	துறைகாட்டுவள்ளல்	,,	வேயுறுதோளி	,,	
திருப்பறியலூர்	வீரட்டேசுவர	,,	இளங்கொம்பனையாள்	,,	105
திருச்செம்பொன்பள்ளி	செம்பொன்பள்ளியார்	,,	மருவார்குழலி	,,	
திருநனிபள்ளி	நற்றுணையப்ப	,,	மலையான்மடந்தை	,,	
திருவலம்புரம்	வலம்புரநாத	,,	வடுவகிர்க்கண்ணி	,,	
தலைச்சங்காடு	சங்கருணாதேசுவர	,,	சௌந்தரநாயகி	,,	
திருவாக்கூர்த்தான்தோன்றிமாடம்	தான்தோன்றியப்ப	,,	வாள்நெடுங்கண்ணி	,,	110
திருக்கடவூர்	அமிர்தகடேசுவர	,,	அபிராமி	,,	
திருக்கடவூர் மயானம்	பிரமபுரீசுவர	,,	மலர்க்குழல்மின்னம்மை	,,	
திருவேட்டக்குடி	திருமேனியழக	,,	சாந்தநாயகி	,,	
திருத்தெளிச்சேரி	பார்வதீசுவர	,,	சத்தியம்மை	,,	
தருமபுரம்	யாழ்மூரிநாத	,,	மதுரமின்னம்மை	,,	115
திருநள்ளாறு	நள்ளாறப்ப	,,	போகமார்த்தபூண்முலைநாயகி	,,	
கோட்டாறு	ஐராவதேசுவர	,,	வண்டமர்பூங்குழலி	,,	
திருவம்பர்ப்பெருங் கோயில்	பிரமபுரீசுவர	,,	பூங்குழலம்மை	,,	
திருவம்பர் மாகாளம்	காளகண்டேசுவர	,,	பட்சநாயகி	,,	
மீயச்சூர்	முயற்சிநாதேசுவர	,,	சௌந்தரநாயகி	,,	120
மீயச்சூரிளங் கோயில்	சகலபுவனேசுவர	,,	மேகலாம்பிகை	,,	
திலதைப்பதி	முத்தீசுவர	,,	பொற்கொடியம்மை	,,	
திருப்பாம்புரம்	பாம்புரேசுவர	,,	வண்டார்பூங்குழலி	,,	
சிறுகுடி	மங்களேசுவர	,,	மங்கலநாயகி	,,	
திருவீழிமிழலை	வீழியழக	,,	சுந்தரகுசாம்பிகை	,,	125
வன்னியூர்	அக்கினீசுவர	,,	பார்வதி	,,	
கருவிலி	சற்குணநாயக	,,	சர்வாங்கநாயகி	,,	
பேணுபெருந்துறை	சிவானந்தேசுவர	,,	மலையரசி	,,	
நறையூர்ச்சித்தீச்சரம்	சித்தநாதேசுவர	,,	அழகாம்பிகை	,,	

தலப் பெயர்	இறைவன் பெயர்		இறைவி பெயர்		
அரிசிற்கரைப்புத்தூர்	படிக்காசளித்தபரம	போற்றி	அழகாம்பிகை	போற்றி	130
சிவபுரம்	சிவபுரநாத	,,	சிங்காரவல்லி	,,	
கலயநல்லூர்	அமுதகலயநாத	,,	அமுதவல்லி	,,	
கருக்குடி	சற்குணலிங்கேசுவர	,,	அத்துவிதநாயகி	,,	
திருவாஞ்சியம்	வாஞ்சியநாத	,,	வாழவந்தநாயகி	,,	
திருநன்னிலத்துப்பெருங் கோயில்	பிரகேசுவர	,,	பிரகேசுவரி	,,	135
திருக்கொண்டீச்சரம்	பசுபதீசுவர	,,	சாந்தநாயகி	,,	
திருப்பனையூர்	அழகியநாத	,,	பெரியநாயகி	,,	
திருவிற்குடி	வீரட்டானேசுவர	,,	மைவார்குழலி	,,	
திருப்புகலூர்	அக்கினீசுவர	,,	கருந்தாள்குழலி	,,	
திருப்புகலூர் வர்த்த மானீச்சரம்	வர்த்தமானீசுவர	,,	கருந்தாழ்குழலி	,,	140
இராமனதீச்சரம்	இராமநாத	,,	சரிவார்குழலி	,,	
திருப்பயற்றூர்	பயற்றூர்நாத	,,	காவியங்கண்ணி	,,	
திருச் செங்காட்டங்குடி	கணபதீசுவர	,,	திருக்குழல்நன்மாது	,,	
திருமருகல்	மாணிக்கவண்ண	,,	வண்டுவார்குழலி	,,	
திருச்சாத்தமங்கை	அயவந்தீசுவர	,,	மலர்க்கண்ணம்மை	,,	145
நாகைக்காரோணம்	காயாரோகணேசுவர	,,	கருந்தடங்கண்ணி	,,	
சிக்கல்	வெண்ணெய்ப்பெருமான்	,,	வேல்நெடுங்கண்ணி	,,	
கீழ்வேளூர்	கேடிலியப்ப	,,	வனமுலைநாயகி	,,	
தேவூர்	தேவபுரீசுவர	,,	பண்ணிலாவியமொழியுமை	,,	
பள்ளியின் முக்கூடல்	முக்கோணநாத	,,	மைமேவுகண்ணி	,,	150
திருவரூர்	வீதிவிடங்க	,,	அல்லியங்கோதை	,,	
திருவாரூர் அரநெறி	அரநெறியப்ப	,,	புவனேசுவரி	,,	
திருவாரூர்ப் பரவையுண் மண்டளி	மண்டலேசுவர	,,	பஞ்சினுமெல்லடியம்மை	,,	
திருவிளமர்	பதஞ்சலிமனோகர	,,	யாழினுமென்மொழியம்மை	,,	
கரவீரம்	கரவீரநாத	,,	பிரத்தியட்சமின்னம்மை	,,	155
பெருவேளூர்	பிரியாஈசுவர	,,	ஏலவார்குழலி	,,	
தலையாலங்காடு	ஆடவல்லஈசுவர	,,	திருமடந்தை	,,	
குடவாயில்	கோணேசுவர	,,	பெரியநாயகி	,,	
திருச்சேறை	செந்நெறியப்ப	,,	ஞானவல்லி	,,	
நாலூர் மயானம்	பலாசவனேசுவர	,,	பெரியாம்பிகை	,,	160
கடுவாய்க்கரைப்புத்தூர்	சொர்ணபுரீசுவர	,,	சிவாம்பிகை	,,	

தலப் பெயர்	இறைவன் பெயர்		இறைவி பெயர்		
இரும்பூளை	காசிஆரணியேசுவர	போற்	ஏலவார்குழலி	போற்றி	
அரதைப் பெரும்பாழி	பாதாளேசுவர	,,	அலங்காரநாயகி	,,	
அவளிவணல்லூர்	சாட்சிநாயக	,,	சௌந்தரநாயகி	,,	
பரிதி நியமம்	பரிதியப்ப	,,	மங்கள நாயகி	,,	165
வெண்ணியூர்	வெண்ணிக்கரும்ப	,,	அழகியநாயகி	,,	
பூவனூர்	புஷ்பவனேசுவர	,,	கற்பகவல்லி	,,	
பாதாளீச்சரம்	நாகநாத	,,	அமுதநாயகி	,,	
திருக்களர்	களர்முளை நாத	,,	இளங்கொம்பன்னாள்	,,	
சிற்றேமம்	பொன்வைத்தநாத	,,	அகிலாண்டநாயகி	,,	170
திருவுசாத்தானம்	சந்திரபுரீசுவர	,,	பெரியநாயகி	,,	
இடும்பாவனம்	சற்குண நாத	,,	மங்கள நாயகி	,,	
கடிக்குளம்	கற்பகநாத	,,	சௌந்தர நாயகி	,,	
தண்டலைநீணெறி	நீணெறிநாத	,,	ஞானம்பிகை	,,	
கோட்டூர்	கொழுந்தீசுவர	,,	தேன்மொழிப்பாவை	,,	175
வெண்டுறை	வெண்டுறைநாத	,,	வேனெடுங்கண்ணி	,,	
கொள்ளம்பூதூர்	வில்வவனேசுவர	,,	சௌந்தராம்பிகை	,,	
பேரெயில்	ஜகதீசுவர	,,	ஜகந்நாயகி	,,	
கொள்ளிக்காடு	அக்கினீசுவர	,,	பஞ்சினுமெல்லடியம்மை	,,	
தெங்கூர்	வெள்ளிமலை நாத	,,	பெரியநாயகி	,,	180
நெல்லிக்கா	நெல்லிவன நாத	,,	மங்கள நாயகி	,,	
நாட்டியத்தான்குடி	இரத்தினகிரிநாத	,,	மலர்மங்கை	,,	
காருயில்	கண்ணாயிர நாத	,,	கைலாய நாயகி	,,	
கன்றுப்பூர்	நடுதறியப்ப	,,	மாதுமையம்மை	,,	
வலிவலம்	மனத்துணை நாத	,,	மாழையங்கண்ணி	,,	185
கைச்சினம்	கைச்சின நாத	,,	வெள்வளை நாயகி	,,	
கோளிலி	கோளிலிநாத	,,	வண்டமர்பூங்குழலி	,,	
திருவாய்மூர்	வாய்மூர்நாத	,,	பாலினுநன்மொழியம்மை	,,	
திருமறைக்காடு	மறைக்காட்டீசுவர	,,	யாழைப்பழித்தமொழியம்மை	,,	
அகத்தியான்பள்ளி	அகத்தீசுவர	,,	பாகம்பிரியா நாயகி	,,	190
கோடிக்குழகர்	அமுதகடநாத	,,	மையார்தடங்கண்ணி	,,	

தலப் பெயர்	இறைவன் பெயர்		இறைவி பெயர்		
ஈழநாடு 2					
திருக்கோணமலை	கோணேசுவர	போற்றி	மாதுமையாளம்மை	போற்றி	
திருக்கேதீச்சரம்	கேதீச்சுவர	,,	கௌரி	,,	
பாண்டிநாடு 14					
திருவாலவாய்	சொக்கநாத	,,	மீனாட்சி	,,	
திருவாப்பனூர்	ஆப்பனூரீசுவர	,,	குரவங்கமழ்குழலி	,,	195
திருப்பரங்குன்றம்	பரங்குன்றநாத	,,	ஆவுடைநாயகி	,,	
திருவேடகம்	ஏடகநாத	,,	ஏலவார்குழலி	,,	
கொடுங்குன்றம்	கொடுங்குன்றீச	,,	குயிலமுதநாயகி	,,	
திருப்புத்தூர்	புத்தூரீசுவர	,,	சிவகாமி	,,	
திருப்புனவாயில்	பழம்பதிநாத	,,	கருணைநாயகி	,,	200
இராமேச்சுரம்	இராமநாத	,,	மலைவளர்காதலி	,,	
திருவாடானை	ஆடானைநாத	,,	சிநேகவல்லி	,,	
திருக்கானப்பேர்	காளையப்ப	,,	சொர்ணவல்லி	,,	
திருப்பூவணம்	பூவணநாத	,,	மின்னம்மை	,,	
திருச்சுழியல்	திருமேனிநாத	,,	துணைமாலைநாயகி	,,	205
திருக்குற்றாலம்	குறும்பலாவீச	,,	குழல்வாய்மொழியம்மை	,,	
திருநெல்வேலி	நெல்லையப்ப	,,	காந்திமதி	,,	
மலைநாடு 1					
திருவஞ்சைக்களம்	அஞ்சைக்களத்தப்ப	,,	உமையம்மை	,,	
கொங்குநாடு 7					
அவிநாசி	அவிநாசியப்ப	,,	பெருங்கருணைநாயகி	,,	
திருமுருகன்பூண்டி	முருகாவுடையார்	,,	ஆவுடைநாயகி	,,	210
திருநணா	சங்கமுகநாத	,,	வேதமங்கை	,,	
கொடிமாடச்செங்குன்றூர் (திருச்செங்கோடு)	மாதொருபாக	,,	பாகம்பிரியாள்	,,	
வெஞ்சமாக்கூடல்	விகிர்தேசுவர	,,	விகிர்தேசுவரி	,,	

தலப் பெயர்	இறைவன் பெயர்		இறைவி பெயர்		
திருபாண்டிக்கொடுமுடி	கொடுமுடிநாத	போற்றி	பண்மொழியம்மை	போற்றி	
கருவூரானிலை	பசுபதீசுவர	,,	கிருபாநாயகி	,,	215
நடுநாடு 22					
திருநெல்வாயிலரத்துறை	அரத்துறைநாத	,,	ஆநந்தநாயகி	,,	
திருப்பெண்ணுகடம்	சுடர்க்கொழுந்தீச	,,	கடந்தைநாயகி	,,	
கூடலையாற்றூர்	நெறிகாட்டுநாயக	,,	புரிகுழல் நாயகி	,,	
திருவெருக்கத்தம்புலியூர்	நீலகண்டேசுவ	,,	நீலமலர்க்கண்ணி	,,	
திருத்தினை நகர்	திருநந்தீசுவர	,,	இளங்கொம்பன்னுள்	,,	220
திருச்சோபுரம்	சோபுரநாத	,,	சோபுரநாயகி	,,	
திரு வதிகை	வீரட்டேசுவர	,,	அதிகைநாயகி	,,	
திரு நாவலூர்	நாவலீசுவர	,,	சுந்தராம்பிகை	,,	
திருமுதுகுன்றம்	பழமலைநாத	,,	பெரியநாயகி	,,	
திருநெல்வெண்ணெய்	வெண்ணெயப்ப	,,	நீலமலர்க்கண்ணி	,,	225
திருக்கோவலூர்	வீரட்டேசுவர	,,	சிவானந்தவல்லி	,,	
அறையணி நல்லூர்	அறையணிநாத	,,	அருள்நாயகி	,,	
இடையாறு	இடையாற்றுநாத	,,	சிற்றிடைநாயகி	,,	
திருவெண்ணெய் நல்லூர்	தடுத்தாட்கொண்டநாத	,,	வேற்கண்மங்கை	,,	
துறையூர்	துறையூர்நாத	,,	பூங்கோதைநாயகி	,,	230
வடுகூர்	வடுகூர்நாத	,,	வடுவகிர்க்கண்ணி	,,	
திருமாணிகுழி	மாணிக்கவரத	,,	மாணிக்கவல்லி	,,	
திருப்பாதிரிப்புலியூர்	பாடலேசுவர	,,	பெரியநாயகி	,,	
முண்டீச்சரம்	முண்டீசுவர	,,	செல்வநாயகி	,,	
புறவார்பனங்காட்டூர்	பனங்காட்டீசுவர	,,	புறவாம்பிகை	,,	235
ஆமாத்தூர்	அழகியநாத	,,	அழகியநாயகி	,,	
திருவண்ணுமலை	அண்ணுமலையார்	,,	உண்ணுமுலையம்மை	,,	
தொண்டைநாடு 32					
திருக்கச்சியேகம்ப	ஏகாம்பரநாத	,,	காமாட்சி	,,	
திருக்கச்சிமேற்றளி	மேற்றளிநாத	,,	காமாட்சி	,,	
திருவோணகாந்தன்தளி	ஓணகாந்தேசுவர	,,	காமாட்சி	,,	240

தலப் பெயர்	இறைவன் பெயர்		இறைவி பெயர்	
திருக்கச்சியனேகதங்காவதம்	காவதநாத	போற்றி	காமாட்சி	போற்றி
கச்சிநெறிக்காரைக்காடு	காரைத்திருநாத	,,	காமாட்சி	,,
குரங்கணில்முட்டம்	வாலீசுவர	,,	இறையார்வளையம்மை	,,
திருமாகறல்	அடைக்கலங்காத்தநாத	,,	புவனநாயகி	,,
திருவோத்தூர்	வேதநாத	,,	இளமுலைநாயகி	,,
பனங்காட்டூர்	பனங்காட்டுநாத	,,	அமுதவல்லி	,,
வல்லம்	வல்லநாத	,,	வல்லாம்பிகை	,,
திருமாற்பேறு	மால்வணங்கீசுவர	,,	கருணைநாயகி	,,
திருவூறல்	உமாபதீசுவர	,,	உமையம்மை	,,
இலம்பையங்கோட்டூர்	சந்திரசேகர	,,	கோடேந்துமுலையம்மை	,,
திருவிற்கோலம்	திரிபுராந்தக	,,	திரிபுராந்தகி	,,
திருவாலங்காடு	ஊர்த்துவதாண்டவ	,,	வண்டார்குழலி	,,
திருப்பாசூர்	பாசூர்நாத	,,	பசுபதிநாயகி	,,
திருவெண்பாக்கம்	வெண்பாக்கநாத	,,	கனிவாய்மொழியம்மை	,,
திருகள்ளில்	சிவானந்தேசுவர	,,	ஆனந்தவல்லி	,,
திருக்காளத்தி	காளத்தீசுவர	,,	ஞானப்பூங்கொடி	,,
திருவொற்றியூர்	படம்பக்கநாத	,,	வடிவுடையம்மை	,,
திருவலிதாயம்	வலிதாயநாத	,,	தாயம்மை	,,
திருமுல்லைவாயில்	பாசுபதேசுவர	,,	கொடியிடையம்மை	,,
திருவேற்காடு	வேற்காட்டீசுவர	,,	வேற்கண்ணி	,,
திருமயிலாப்பூர்	கபாலீசுவர	,,	கற்பகவல்லி	,,
திருவான்மியூர்	மருந்தீசுவர	,,	சொக்கநாயகி	,,
திருக்கச்சூர் ஆலக்கோயில்	விருந்திட்டநாத	,,	கன்னியுமையம்மை	,,
திருவிடைச்சுரம்	இடைச்சுரநாத	,,	இமயமடக்கொடி	,,
திருக்கழுக்குன்றம்	கழுக்குன்றநாத	,,	பெண்ணின்நல்லாள்	,,
அச்சிறுபாக்கம்	பாக்கபுரேசுவர	,,	சுந்தரநாயகி	,,
திருவக்கரை	சந்திரசேகர	,,	வடிவாம்பிகை	,,
அரசிலி	அரசிலிநாத	,,	பெரியநாயகி	,,
இரும்பைமாகாளம்	மாகாளேசுவர	,,	குயில்மொழியம்மை	,,

துளுவநாடு 1

திருக்கோகர்ணம்	மகாபலநாத	,,	கோகர்ணநாயகி	,,

தலப் பெயர்	இறைவன் பெயர்		இறைவி பெயர்	
வடநாடு 5				
திருப்பருப்பதம்	பருப்பதநாத	போற்றி	பருப்பதநாயகி	போற்றி
இந்திரநீலபருப்பதம்	நீலாசலநாத	,,	நீலாம்பிகை	,,
அனேகதங்காவதம்	அருண்மன்னேசுவர	,,	மனோன்மணி	,,
திருக்கேதாரம்	கேதாரநாத	,,	கேதாரகௌரி	,,
கைலாயம்	கைலாயநாத	,,	பார்வதி	,,
புதிய தலம்				
திருவிடைவாய்	புண்ணியகோடிநாத	போற்றி போற்றி	அபிராமியம்மை	போற்றி போற்றி

திருச்சிற்றம்பலம்.

————X————

[தேவாரப் பாடல் பெற்ற திருத்தலங்களுக்கு யாத்திரை சென்று தரிசித்து மகிழ்வதும், அவ்வத் தலங்களில் அவ்வத் தலத்திற்குரிய திருமுறைத் திருப்பதிகங்களை ஓதிப் பாராயணம் செய்து வழிபடுவதும், அத்தகைய பக்தியும் பண்பும் உடைய அடியவர்களோடு கூடி நட்புப் பூண்டு பழகி இன்புறுவதும், நாம் பெறத்தக்க சிறந்த பெரும் பேறு ஆகும். இதனைப் பின்வரும் சிவஞான சுவாமிகள் பாடல் உணர்த்துவது காணலாம்.

"பதிகள்தொறும் சென்றேத்திப் பயில்மூவர் தமிழ்மாலைப்
பதிகமெலாம் அங்கங்கே பாடி,உளம் களிகூரும்
பதிகரொடும் எனைக்கூடப் பணித்தருள்வாய், இமையவர்தம்
பதிகளுக்கும் பதியாகிப் பதிக்கலைசைப் பதியானே"

—ஆசிரியர்]

சூரியனார் கோயில்கள்

தைமாதம் முதல் நாளை நாம் பொங்கற் பண்டிகை அல்லது சங்கராந்திப் பண்டிகை எனவழங்கிச் சிறப்புறக் கொண்டாடுகின்றோம். அன்று நாம் சூரிய பகவானுக்குப் பொங்கலிட்டு வழிபாடு புரிகின்றோம்.

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரிபோற் பொற்கோட்டு
மேரு வலந்திரித லான்

எனச் சிலப்பதிகாரமும்,

"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு"

எனத் திருமுருகாற்றுப் படையும்,

ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்-ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிர் ஒன்று; ஏனையது
தன்னேர் இலாத தமிழ்

எனத் தண்டியலங்காரமும், பிற நூல்கள் பலவும் சூரிய தேவனைப் புகழ்ந்து போற்று கின்றன.

சூரிய வழிபாடு மிகவும் பழமையும் பெருமையும் வாய்ந்தது. எனினும் இந்நாளில் நம் இந்திய தேசத்தில் ஒருசில இடங்களில் மட்டுமே சூரியதேவனுக்குக் கோயில்கள் அமைந்திருக்கக் காண்கின்றோம். அவைகள் இருக்கும் இடத்தைத் தெரிந்து கொள்ளுதல், யாத்திரை சென்று க்ஷேத்திரங்களை வழிபட்டு மகிழும் இயல் புடையவர்களுக்கு மிகவும் பயன் படும். அவைகள் பின்வருமாறு:—

1. இன்றைய மேற்குப் பாகிஸ்தானில் மூல்ட்டான் என்னும் இடத்தில் மிகவும் புகழ் பெற்ற கோயில் ஒன்று சூரியனுக்கு அமைந்துள்ளது. அது குஷான அரசன் ஆகிய கனிஷ்கன் (கி.பி. 78—120) கட்டியதாகும்.

2. குவாலியர் மாவட்டத்தில் மண்டோசர் என்னும் இடத்தில் ஒரு கோயில் உள்ளது. தானேஷ்வர் என்பதனைத் தலைநகராகக் கொண்டு அரசாட்சி புரிந்த ஹர்ஷவர்த்தனன் (கி. பி. 606—647) என்னும் மன்னனும், அவன் முன்னோர்களும் வழிபட்டு மகிழ்ந்த இக் கோயில், கி.பி. 440-இல் கட்டப் பெற்றதாகும். சூரியனைப் பற்றிய பழமை மிக்க தோத்திரப் பாடல்,இக்கோயிலிலேசெதுக்கப்பெற்றுள்ளது.

3. சூரியனின் மற்றொரு கோயில் குவாலியர் என்னும் இடத்தில் இருக்கின்றது. அஃது ஊண அரசன் ஆகிய மிஹிரகுலன் (கி.பி.502-542) என்பவனால், அவனது ஆட்சிக் காலத்தில் கட்டப் பெற்றது.

4. ஒரிசாவில் கோனாரக் என்னும் இடத்தில் பூரி (ஜகந்நாதம்) என்னும் புனிதத் தலத்திற்கு 20 கல் தொலைவில், மிகவும் புகழ்பெற்ற கோயில் ஒன்று சூரியனுக்கு முதலாம் நரசிங்க தேவனால் (கி.பி. 1237-1264) ஏழு குதிரைகள் பூட்டிய தேர் போன்று அமைக்கப் பெற்றுள்ளது. இதன் சிற்ப வேலைப்பாட்டுத் திறனைக் கண்டு வியவாதார் இல்லை.

5. காஞ்சிபுரம் கச்சபேசுவரர் கோயில் தூண் ஒன்றில் (கி.பி. 11—ஆம் நூற்றாண்டு), ஹர்ஷனால் ஆதரிக்கப் பெற்று 'ஹர்ஷ சரித்திரம்' இயற்றிய பாணன் என்னும் வடமொழிக் கவிஞரின் உறவினனான மயூரன் என்பவன் பாடிய சூரிய வழிபாட்டுச் சுலோகங்கள் நூறில் முதல் ஆறு சுலோகங்கள் எடுத்துச் செதுக்கப் பெற்றுள்ளன. அச் சுலோகங்களைப் பாடி, அவன் தன் வெண்குஷ்டநோய் தீரப்பெற்றான் எனத் தெரிகின்றது.

6. முதலாம் குலோத்துங்க சோழன் (கி.பி. 1070—1120), கும்பகோணத்தை அடுத்துள்ள திருவிடைமருதூர்க்கு அணித்தாகச் சூரியனுக்கு ஒரு கோயில் கட்டுவித்தான். அக் கோயிலின் பெயரே, ஊருக்கும் அமைந்து சூரியனார் கோயில் என இந்நாளில் வழங்கி வருகின்றது.

7. சிதம்பரம் நடராஜா கோயிலில், மனித முகம் மூன்று கொண்ட சூரியனின் திருவுருவம் இடம் பெற்றுள்ளது.

8. கயை மாவட்டத்தில் தேவ் என்னும் இடத்தில், அதாவது பாமன்கஞ்ச் என்னும் ஊருக்குப் பதினான்கு கல் தொலைவில் தென் மேற்கே, சூரியனுக்கு ஒரு கோயில் இருக்கின்றது. புகழ் மிகுந்த பாணன் என்னும் வடமொழிக் கவிஞர்,இவ்விடத்திலேயே தவம்இயற்றியதாகக் கூறுவர். ஒவ்வொரு ஆண்டிலும் சித்திரை மாதம் ஆறும் நாளில், இவ்விடத்தில் ஒரு பெருந் திருவிழா நடைபெறுகின்றது. நாடெங்கணும் உள்ள தொழுநோயாளர்கள் அதுபோது அங்குவந்து கூடி வழிபடுகின்றனர். அதனால் தம்நோய் தீரும் என அவர்கள் நம்புகின்றனர்.

—ஆசிரியர்.

சொந்தம்

அருண்மொழியரசு திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் அவர்கள்:

நமக்குச் சொந்தமல்லாத பொருளை நாம் நமக்குச் சொந்தம் என்று எண்ணியும், இவை நமக்குச் சொந்தம் என்று கூறியும், மதிமயங்கி நிற்கின்றோம்.

இந்த வீடு நம்முடையது என்கின்றோம். இதற்குமுன் எத்தனையோ பேர் அதனை என்னுடையது, என்னுடையது என்று கூறினார்கள். நமக்குப் பின்னர் பலர் அவ்வாறு கூற இருக்கின்றார்கள். இந்த உலகங்கள் யாவும் இறைவனுடையவை. எல்லாவற்றையும் உடையவராதலின் இறைவனுக்கு 'உடையவர்' என்ற பேருண்டு. எல்லாம் அவருடைய உடைமை. "உடையவனே" என்கின்றார் மாணிக்கவாசகர்.

நாம் விலைகொடுத்து நம் பேருக்குப் பதிவு செய்துள்ள நம் வீட்டில் வாழும் பல்லி, எலி, பூனை, எட்டுக்கால்பூச்சி முதலியவை, அந்தவீட்டைத் தமக்குச்சொந்தமாகவே எண்ணுகின்றன. அதுபோல் எல்லாம் இறைவனுடைய உடைமையாக இருக்கவும், அவற்றை நம்முடையவை என்று மயங்குகின்றோம். என்னே நமது அறியாமை?.

இதனைவிட அறியாமை யுடையார் சிலர் உளர். "இந்த வீடு என்னுடையது" என்றார் ஒருவர். "என்ன வாடகை வருகின்றது" என்று கேட்டேன். "விற்று எட்டு ஆண்டுகள் ஆயின" என்றார். விற்றுவிட்ட நிலத்தையும் வீட்டையுங் கூட என்னுடையவை யென்று பிறரிடம் காட்டிப் பெருமை பேசும் பித்தர் சிலர் உள்ளனர்.

இனி இந்த உடம்பும் நமக்குச் சொந்தமன்று. இந்த உடம்பு நமக்கு இறைவன் கொடுத்த ஒரு வாடகை வண்டி. இதில் ஏறி நாம் பிரயாணம் பண்ணுகின்றோம். ஒரு குறிப்பிட்ட காலத்தை நமக்கு அளவிட்டுக் கொடுத்துள்ளார். அக்கால எல்லைக்குள் நாம் முத்தியுலகை நாடிப் பிரயாணம் புரியவேண்டும். பெரும்பாலோர் நமன் உலகை நாடியே போய்க் கொண்டிருக்கின்றார்கள். 'சாமாறே விரைகின்றனர்'.

இந்த உடம்பை, நெருப்பு எனக்கென்றும், புழு எனக்கென்றும், மண் எனக்கென்றும், பருந்து எனக்கென்றும், நரி எனக்கென்றும், நாய் எனக்கென்றும் கூறுகின்றன. நாம் நம்முடையது என்று கருதி ஜபம், தவம், தியானம், ஆலயவழிபாடு முதலிய ஒன்றும் புரியாமல், வேளை தவறாமல் விலாப்புடைக்க உண்டு இந்த உடம்பை வளர்க்கின்றோம்.

எரியெனக் கென்னும் புழுவோ எனக்கெனும்
இந்த மண்ணும்
சரியெனக் கென்னும் பருந்தோ எனக்கெனும்
தான்புசிக்க
நரியெனக் கென்னும் புன்நாய் எனக்கெனுமிந்
நாறுடலைப்
பிரியமுடன் வளர்த்தேன் இதனால் என்ன
பேறெனக்கே.

ஆகவே, இந்த உடம்பு, செல்வம், வான், காற்று, கனல், புனல், மண், கதிர், மதி முதலிய எல்லாம் இறைவனுடைய உடைமைகள். ஸ்வம்-சொத்து: எல்லாவற்றையும் சொந்தமாக உடையவராதலின் ஸ்வாமி, என்ற பெயரால் ஆண்டவரை அழைக்கின்றோம்.

முற்றத் துறந்த முனிவர் ஒருவர் திருத்தல யாத்திரை புரிந்து வந்தார். பற்றற்ற பரம ஞானியாகிய அவர் இன்

றிருந்த ஊரில் நாளை இரார். ஒருவேளையே உப்பில்லாத உணவை உண்பார். அவர் பொய்யை அதிகமாக வெறுப்பவர்.

'மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ் செய் வாரில் தலை'

என்ற திருக்குறளை இடையருது கூறுவார். அவருடைய வாய் மறந்தும் பொய் புகலாது. அன்றியும் பொய் புகல்வார் மனையில் புசியார். இதனை மிகவும் சிறந்த குறிக்கோளாகக் கொண்டு ஒழுகினுர்.

ஒரு ஊருக்குப் போனுல் அங்கே உண்மை பேசுவோர் யார் எனக் கேட்டறிந்த பின்னர், அவர் வீட்டில் உச்சிப் பொழுதில் ஒருசிறிது அன்னம் உண்பார்.

ஒருநாள் ஒரு ஊருக்குச் சென்ருர். 'இந்த ஊரில் உண்மையாளர் யாவர்? என உசாவினுர்'. அதோ தெரிகின்ற மாடி வீட்டில் வாழ்கின்ற முதலியார் உண்மையாளர். அடியார் பக்தியுடையவர். ஒரு லட்சம் செல்வமும், நான்கு புதல்வரும் உடையவர்! என்று பலரும் பகர்ந்தார்கள். பின்னர் முதலியாருடைய வீட்டை முனிவர் அணுகினுர்.

ஆசனத்தில் அமர்ந்திருந்த முதலியார் பளீர் என்று எழுந்தார். ஓடிவந்து ஞானியார் அடிமலர்மீது விழுந்தார். அவரை ஆசனத்தில் எழுந்தருளப்புரிந்து "பெருமானே! உணவுசெய்ய எழுந்தருள வேண்டும்" என்று வேண்டினுர். அவருடைய அன்பு அடக்கம் பணிவு முதலிய நற்குணங்களைக் கண்டு முனிவர் முக மலர்ந்து, உண்மையாளர்தானு என்று சோதித்தறிந்த பின்னரே உணவு செய்ய வேண்டும் என்று உன்னினுர்.

"ஐயா உமக்குச் செல்வம் எவ்வளவு உண்டு?"

"சுவாமீ! இருபத்து இரண்டாயிரம் ரூபாயுண்டு!"

"குழந்தைகள் எத்தனைபேர் ?"

"சுவாமி ஒரே புதல்வன்தான் "

"உமக்கு என்ன வயது? "

"சுவாமி! எனக்குவயது மூன்று வருஷம் ஐந்து மாதம் ஏழுநாள் பதினுறரை மணி".

முனிவருக்குப் பெருஞ் சினம் மூண்டது. "மூடனே! நீ சுத்த புளுகனுக இருக்கின்ருய். பேசுவதெல்லாம் பெரும் புரட்டு; உன் வீட்டு அன்னம் என் தவத்தையழிக்கும். நான் பொய்யர் வீட்டில் புசியேன்" என்று கூறிச் சீறி எழுந்தார்.

முதலியார் அவர் காலில் விழுந்து, "அருள் நிறைந்த அண்ணலே! அடியேன் ஒருபோதும் பொய் புகலேன்; சத்தியம் சொல்கின்றேன்; சற்று நிதானமாக ஆய்ந்து பார்த்து உண்மையுணர்வீராக" என்று கூறித் தனது வரவு செலவுப் புத்தகத்தைக் காட்டினுர். அதில் இருப்புத் தொகை ஒருலட்ச ரூபாய் என்றிருந்தது.

"அடேய்! இதோ உனக்குச் சொத்து ஒரு லட்சமென்றிருக்கிறதே. நீ இருபத்து இரண்டாயிரந்தான் என்று பொய் சொன்னுயே"! என்று கடிந்தார் முனிவர்.

"சுவாமீ! ஒருலட்ச ரூபாய் பெட்டியில் உளது. ஆனுல் பெட்டியில் உள்ள பணம் எனக்குச் சொந்தமாகுமா? இதோ பாருங்கள். தருமக் கணக்கில் இதுகாறும் இருபத்திரண்டாயிரமே செலவழித்துள்ளது. தருமம் புரிந்த பணம்தானே என்னுடையது; இப்போது நான் மாண்டால் இந்தப் பெட்டியில் உள்ள பணம் என்னுடன் வராதே? உடன் வருவது தருமம் ஒன்றுதானே. ஆகவே எனக்குச் சொந்தம் தருமம்புரிந்த இருபத்திரண்டு ஆயிரந்தான்" என்று கூறினுர் முதலியார்.

முனிவர் இதைக்கேட்டு வியப்புற்ருர். "ஆமாம் உனக்கு நான்கு புதல்வர்கள் உண்டு என்று கேள்விப்பட்டேனே ?"

"சுவாமீ! எனக்குப் பிறந்த பிள்ளைகள் நால்வர்; ஆனுல் என் பிள்ளை ஒருவன் தான் "

"அப்பா! நீ சொல்வதின் கருத்து எனக்கு விளங்க வில்லையே!"

"சுவாமீ! விளங்க வைக்கின்றேன்"

(1) "மகனே நடராஜா" என்றழைத்தார் முதலியார். "சீட்டு விளையாடுகின்றேன். வரமுடியாது" என்று பதில் வந்தது.

(2) "மகனே! சிவசாமீ!"

"உனக்குப் புத்தி யிருக்கின்றதா? உன்னோடு பேச என்னாலாகாது" பூமிக்குச் சுமையாக இன்னும் ஏன் இருக்கின்றாய்?"

(3) "மகனே வேல்சாமீ!"

"ஏன் இப்படிக் கத்துகின்றாய்? வாயை மூடிக்கொண்டிரு"

(4) "மகனே கந்தசாமி!"

கந்தசாமி ஓடிவந்து பிதாவையும் முனிவரையும் தொழுது, "சுவாமீ! பால் கொண்டு வரட்டுமா? பழம் கொண்டு வரட்டுமா? என்று கேட்டு உபசரித்து விசிறிஎடுத்து வீசிக்கொண்டு பணிவுடன் நின்றான்".

முதலியார், "சுவாமீ! அந்த மூவர்களும் என் புதல்வர்களா? என் கருத்துக்கு முரணானவர்கள் பிள்ளைகளா? போன பிறப்பிற்பட்ட கடன்காரர்கள். இவன் ஒருவன் தான் என்பிள்ளை" என்றார்.

"அப்பா! உன்கருத்து உவகையைத் தருகின்றது. வயது விஷயத்தில் நீ கூறியதன் உட்பொருள் யாது?"

"சுவாமீ! அடியேன் நாள் ஒன்றுக்கு ஒன்றரை மணி நேரம்தான் வழிபாடு செய்கின்றேன். மிகுதி நேரமெல்லாம் வயிற்றுக்காகவும் குடும்பத்துக்காகவும் உழைக்கின்றேன். பேசாத நாளெல்லாம் பிறவா நாள்தானே. இறைவனை மறந்த நேரம் இறந்த நேரம். இறைவனை நினைத்துப்பூசிக்கும் நேரம்தான் எனக்குச் சொந்தம். அடியேனுக்கு இந்த உடம்பு பிறந்து அறுபது ஆண்டுகள் ஆயின. ஐந்து வயதிலிருந்து பூசிக்கின்றேன். நாள் ஒன்றுக்கு ஒன்றரைமணி நேரம் பூசை செய்கின்றேன். அந்த வகையாகப் பார்த்தால், முப்பதாயிரத்து நூற்றுப் பன்னிரண்டரைமணி நேரம் ஆகின்றது. ஆகவே அடியேன் பிறந்து அறுபது ஆண்டுகளானாலும் எனக்குச் சொந்த வயது திட்டமாக மூன்று ஆண்டு ஐந்து மாதம் ஏழு நாள் பதினாறரைமணி தான்.

(1) தருமம் செய்த பணம் எனக்குச் சொந்தம்.

(2) என்கருத்தை அனுசரிக்கின்றவனே எனக்குச் சொந்த மகன்.

(3) பூசை செய்த நேரம் எனக்குச் சொந்தம் என்றார்.

இதைக் கேட்ட முனிவர் பெரிதும் மகிழ்ந்தார். முனிவர், அவர் வீட்டில் உண்டு அவரை வாழ்த்திவிட்டுச் சென்றார்.

ஸ்ரீ பரசுராமலிங்கேஸ்வரர் தேவஸ்தானம்,

அயனாவரம், சென்னை.

ஷை தேவஸ்தானத்தில் 30-11-63 அன்று கிருத்திகைத் தீப உற்சவம் வெகு விமரிசையாக நடந்தது. அன்று மாலை கோவிலில் நிறையத் தீப அலங்காரம் செய்யப் பட்டது. அன்று ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி ஊர்வலம் நடை பெற்றது. ஏராளமான பக்தர்கள் விஜயம் செய்து சுவாமி தரிசனம் செய்தார்கள்.

ஞானக்காட்சி

பேராசிரியர் திரு. ஔவை. சு. துரைசாமி பிள்ளை, மதுரை.

நம் சிவநெறி நாட்டில் ஊர்தொறும் பரந்து விளங்க வேண்டிய இன்றியமையாமை தோன்றிய காலம் ஒன்று ஆயிரத்து முந்நூறு ஆண்டுகட்கு முன் உண்டாயிற்று. அந்நாளில் பௌத்தம், சயினம், வைதிகம், காபாலம் முதலிய சமயங்கள் தமிழ் நாட்டிற் புகுந்து தத்தம் கொள்கைகளைப் பரப்பி வந்தன. தொண்டை நாட்டிலும், பாண்டிநாட்டிலும் சயினம் அரசியலைக் கைப்பற்றிக் கொண்டது. அதன் செல்வாக்கு மிகவும் ஏனைச் சமயங்கள் ஒளிகுன்றின. ஆரவாரமும் செல்வாக்கும் மிக்கு உடையார் பக்கம் கண்மூடிக் கொண்டு செல்வது தமிழ் மக்களின் பொதுவியல்பு. செல்வாக்குடையார் பால் அரசியல் அதிகாரம் சேர்ந்து விடின் சொல்ல வேண்டுவதில்லை. தமிழ் மக்கள் தம்மை மறந்து, தமக்கென அறிவும், அது கொண்டு அமைய வேண்டிய கொள்கையும் உண்டு என்பதைக் கைவிட்டுச் செல்வாக்கு உடைய அவர்பின் செல்வது அவர்கட்கு இயல்பாய் இருக்கிறது. அக் காலத்தே தமது மனக் கருத்தை வெளிப்படுத்தும் உயிர்க் கருவியாகிய மொழியையும், அதனால் உய்தி பெறற்கமைந்த சமயத்தையும் உதறிவிடுவர். மேலும் ஏதேனும் புதுமை தோன்றின் அதன் நலம் தீங்கு நோக்காது அதற்கு அடிமையாவதும், பழமையைக் கண்ணோடாது கையகன்றொழிவதும் தமிழர் தனிப்பண்பு.

இவ்வியல்பு தமிழர்க்கு உரியதானமையின் தமிழ் வாழ்வு செம்மையும், தெளிவும் பெற வேண்டிய சூழ்நிலை இன்றியமையாததாயிற்று. அக் காலத்தே ஞான சம்பந்தரும், நாவரசரும் தமிழரிடையே தோன்றினர். தமிழரது தொன்மைச் சமயமாகிய சைவத்தை நாட்டவர் மனத்தில் நினைவுறுத்தும் பணியை அவர்கள் மேற்கொண்டனர்.

சங்க காலத்தை அடுத்து வந்த காலத்தே களப்பிரர் என்ற வேற்றவர் கூட்டம் தமிழ் நாட்டிற்குள் புகுந்து அல்லல் செய்து அலைக்கழித்தது. தமிழ் இலக்கியங்கள் பல அச் சழக்கர் செய்த கலக்கத்தால் இறந்தொழிந்தன. இசையும் கூத்தும் மக்கள் உள்ளத்தில், உலக வாழ்வில் விருப்பமும், உயர்ந்த புகழ் நிறுவுவதில் விழைவும் உண்டாக்கும் இயல்பினவாதல் கண்ட வேற்றவர், அவை காமமும், நோயும் தருவன என இழித்துரைத்தது கண்டு, அவை இரண்டும் இருந்த இடம் தெரியாதவாறு மறையத் தலைப்பட்டன. இயல் வளர்த்த புலவரும், இசை வளர்த்த பாணரும், கூத்து வளர்த்த கூத்தரும் பொருநரும் சமுதாயத்தில் கீழ்நிலை அடைந்து தேய்வுற்றனர்.

இந்த நிலைமை நாடு முழுவதும் பரவவே, வேற்றவர் மொழியும், சமயக் கொள்கையும் இடம் பெறுவது எளிதாயிற்று. தொண்டை நாட்டில் அரசு கைப்பற்றி ஆட்சி நடத்திய பல்லவப் பேரரசு வேற்று மொழிகட்கு நல்லாதரவு நல்கிற்று. தமிழ் மக்கள் தம்மிற் கூடி அவ்வரசின் செயல் முறைகளைத் தமக்கேற்ற வகையில் நடக்குமாறு செய்யும் திறமின்றி அதன் வழிநின்று ஒருதலையே மேற்கொண்டனர். வடமொழிக்குச் சிறப்பிடமும், வடமொழி வாணர்க்கு வரிசையும் பல்லவ அரசு நல்குவது கண்ட தமிழ்ச் செல்வர்கள், தாமும் அதனையே செய்தனரேயன்றித் தம்முடைய தமிழிற்கோ, தமிழ் வாணர்க்கோ, தகுவன செய்யும் எண்ணமே இலராயினர். பல்லவர் காலக் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் தமிழகத்தின் இந்நிலையினை நன்கு தெரிவிக்கின்றன.

பொதுவகையில் நிலைமை இதுவாக, நாட்டில் ஆங்காங்கே தமிழுணர்வுடைய சிலர் இல்லாது போகவில்லை. அவர்கள் தனிமுறையில் தமிழும் சமயமும் நிலைபெறுதற் கமைந்த நினைவும் செயலும் கொண்டிருந்தனர். அவர்கள் தம்மில் ஒன்றிய செயல் மேற் கொள்ளுதற்குப்

பொது மக்களின் இயல்பு மாறுபட்டிருந்தமை யின் அவர்கள் நினைவு அந்நிலையில் செல்ல வில்லை. அதிகாரத்திற்கும், செல்வாக்கிற்கும் அஞ்சி அடிமையுறும் உள்ளம் அறிவுக்கும், ஒழுக்கத்திற்கும் இடந்தராது. இது எக்காலத் தும் மக்களிடத் தமையும் பொதுவான குறை பாடு. திருவாரூரில் புகழனார் என்பவரும், சீர் காழியில் சிவபாத இருதயரும், சிவநெறியும், செந்தமிழும் செம்மை நிலை பெற்றுச் செழித்தல் வேண்டித் தவம் முயன்றனர். அத்தவத்தின் பயனாகப் புகழனார்க்குத் திருநாவுக்கரசரும், சிவபாத இருதயருக்குத் திருஞான சம்பந்தரும் தோன்றிச் சிவம் பெருக்கும் அரும்பணியை வளர்க்கலுற்றனர். அவர் பிறப்பைக் கூற வந்த சேக்கிழார்,

"அலகில் கலைத்துறை தழைப்ப
அருந்தவத்தோர் நெறிவாழ
உலகில் வரும் இருள்நீக்கி
ஒளிவிளங்கு கதிர்போல்பின்
மலரும் மருள்நீக்கியார் (நாவரசர்)
வந்தவதாரம் செய்தார்"

என்றும்,

"தவம் பெருக்கும் சண்பையிலே தாவில்சரா
சரங்களெல்லாம்
சிவம் பெருக்கும் பிள்ளையார் திருவவதாரம்
செய்தார்"

என்றும் கூறுகின்றார். ஞான சம்பந்தருக்கு முன் தோன்றியவர் திருநாவுக்கரசர். அவர் காலத்தே வேற்றுச் சமயங்கள் பரவிச் சிவ நெறியை இருளில் கிடத்தியிருந்தமை இனிது புலப்படச் சேக்கிழார், 'உலகில் வரும் இருள் நீக்கி ஒளிவிளங்கு கதிர்போல்' என்ற உவமை யைப் பெய்திருக்கின்றார். ஞான சம்பந்தர் தோன்றிய காலத்தில் நன்மக்கள் உள்ளம் சிவ நெறி சிறப்புற வேண்டி அல்லும் பகலும் நினைந்து உருகிய நிலையைத், "தவம் பெருக்கும் சண்பை" என்ற தொடரால் தொட்டுக் காட்டு கின்றார்.

வேற்றவர் அரசும், வேற்றுமொழிச் சமயங் களும் பெற்றிருந்த உயர்வால் தென்னாட்டு மொழியும், வாழ்வும் தாழ்வுடையன என்றொரு கொள்கை மக்களிடையே தோன்றிப் பரவுவதா யிற்று. தொடக்கத்தில் அது நன்கு புலப்பட வில்லை யாயினும், பின்னர்ப் போந்த மணி வாசகர் காலத்தும், சேக்கிழார் காலத்தும் உயர் நிலை மக்களிடையே உருப்பெற்று விளங்கிற்று. அதனைக் கருத்திற் கொண்டே திருவாதவூரர் திருக்கோவையாரில், சிவபெருமான் தில்லையம் பலத்தில் திருக்கூத்தாடியது தென்னாட்டிற்கு இருந்த வசை நீங்குதற்கே என்பாராய்,

"தென்மாத்திசை வசைதீர்தரத் தில்லைச்சிற்றம்
பலத்துள்
என்மாத்தலைக் கழல்வைத்து எரியாடும்இறை"
(கோவை : 338)

என்றும், சேக்கிழார், இப்பெருமக்களின் தோற் றத்தால்,

"மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திட"

என்றும்,

"திசையனைத்தின் பெருமையெலாம் தென்
திசையே வென்றேற
அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல்
வழக்கின் துறைவெல்ல"

என்றும் பாடுகின்றார்கள்.

திருநாவுக்கரசர் முதலியோர்கள் தோற்றம் தென்திசை விளக்கம் பெறுதற்கென்றது நம் மனத்தே நல்லபல எண்ணங்களை எழுப்புகின் றது. இப் பெருமக்கள் வாழ்ந்த காலம் தென் திசை "வசை" யுற்று "வாழ்வு" இழந்திருந்த மைக்குக் காரணம் யாதாகலாம்? இதற்குரிய விடையை இக்கட்டுரை முன்னே சிறிது கூறி யிருக்கிறது.

திருநாவுக்கரசர் தன் வாழ்வின் பெரும் பகுதியை வேற்றுச் சமயம் விழுங்கிவிட்டது. மிக்க முதுமை யெய்திய போதுதான் அவர் சிவநெறி சேர்ந்து தமது திருப்பணியைச்செய்ய லுற்றார். அவர்க்கு வேற்றுச் சமயம் செய்த கொடுமைகள் நாம் நன்கு அறிந்தன. நீற் றறையில் சிறையிடல், உணவில் நஞ்சு கலத் தல், களிற்றியானையின் காலில் இடுதல், கல் லொடு பிணித்துக் கடலில் இடுதல் முதலியன அக் கொடுமைகள். இவற்றை அஞ்சாமல் ஏற்று வென்றது, அவரது திருத்தொண்டின் உறைப்பு. மலையே வந்து விழினும் நிலை கலங் காத நெஞ்சம்,

"நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலையில்லோம்"

என்றும்,

"வானம் துளங்கிலென், மண் கம்பம் ஆகில் என்,
மால் வரையும் தானம் துளங்கித் தலை தடுமாறில் என்,
தண் கடலும் மீனம்படில் என், விரிசுடர் வீழில் என்,
வேலை நஞ்சுண்டு ஊனம் ஒன்றில்லா ஒருவனுக்கு
ஆட்பட்ட உத்தமர்க்கே"

என்றும் வருவன அவருடைய மனத்திண்மையையும், சொல்வன்மையையும் காட்டுகின்றன.

பொன்னிறமான மேனியில் வெண்ணீறு, சண்ணித்து விளங்க, மார்பில் அக்குமாலையும், கையில் உழவாரமும் அவரது திருவுருவைச் சிறப்பித்தன. இதனைத் தம் ஞானக் கண்ணிற் கண்ட சேக்கிழார்,

"தூய வெண்ணீறு துதைந்த பொன்
மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரு சிந்தையும்
நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும்
பதிகச் செஞ்சொல்
மேய செவ்வாயும் உடையார்
புகுந்தனர் வீதியுள்ளே"

(திருநாவுக் : 140)

என்று சொல்லோவியம் செய்கின்றார். இதனைப் படிக்கும்போது, நாவுக்கரசரின் திருமுகத்தில் நாயகனை சிவனை நினைந்துருகும் அன்பின் ஒளியும், அதனால் உள்ளம் உருகிப்பெருகிக் கண்வழியாக வழிந்தொழுகும் கண்ணீரும் நிலவக் காண்கின்றோம். அவரது திருவாய் திருப்பதிகங்களை இனிமையாக இசைக்கின்றது.

இவ்வாறு திருவதிகை வீதியில் வரும் திருநாவுக்கரசர், சீர்காழிப் பதியில், எதிர்நோக்கி அன்பால் என்பு குழைத்து நிற்கும் ஞான சம்பந்தரின் கண்முன்னே தோன்றுகின்றார். அவரது தோற்றம்,

"சிந்தை இடையறு அன்பும்
திருமேனி தன்னில் அசைவும்
கந்தை மிகையாம் கருத்தும்
கையில் உழவாரப் படையும்
வந்திழி கண்ணீர் மழையும்
வடிவிற் பொலி திருநீறும்
அந்தம் இலாத் திருவேடத்து
அரசும் எதிர் வந்தணைய"

(ஞானசம்: 270)

என்று குறிக்கப் படுகிறது. இதனைப் படிக்கும் நாம் திருநாவுக்கரசைத் திருவதிகையிற் பார்த்தபோது காணப்பட்ட திருமேனியில் ஒரு சிறு வேறுபாடு புலனாகிறது. சீர்காழிக்கு வரும்போது நாவரசின் திருமேனியில் அசைவு காணப்படுகிறது. மூப்புறும் தளர்வும், சிவன் பால் நாளும்பெருகும் அன்பும் அவ்வசைவுக்குக் காரணமாகும் என நினைக்கின்றோம்.

திருநாவுக்கரசரை ஞான சம்பந்தர், சீர்காழியில் முதன் முதலாகக் காண்கின்றார். காண்பதற்கு முன், நாவரசின் வருகை ஞான சம்பந்தருக்குத் தெரிகிறது. அவருடைய வரலாறும், அவர் பொருட்டு நிகழ்ந்த அருட் செயல்களும் சம்பந்தரின் உள்ளத்தில் நிறைந் திருந்தமையின், அவரது உள்ளம் அன்பு சிறந்து அவருடைய திருமேனியை நினைக்கின்றது. சிவ பரம்பொருள் பால் அன்புற்று அடியராயினார் தோற்றம் எவ்வாறு இருக்குமென எண்ணியவர், தமது உள்ளக் கிழியில் ஞானம் துணை செய்ய ஓர் அழகிய உருவத்தை எழுதிக் காண்கின்றார். கள்ளமற்ற உள்ளத்தில் தோன்றிய அடியாரின் தெள்ளிய தோற்றம் ஞானசம்பந்தர்க்கு மிக்க இன்பம் செய்கிறது. அதனைப் பன்முறையும் அவர் மனக் கண்ணில் காண்கின்றார்.

இதற்கு முன் காணாது புதுவதாகக் காண இருக்கும் ஒருவரைப் பற்றியோ, ஓர் இடத்தைப் பற்றியோ, முன் கூட்டியே நினைப்பது மக்கள் அன்புள்ளத்துக்கு இயல்பு. அவ்வாறு நினைக்கும்போது நினைவில் எழும் தோற்றம், அவ்வொருவரையோ, இடத்தையோ நேரிற் காணும்போது பெரும்பாலும் ஒத்திருப்பது இல்லை. இதற்குச் சான்று வேறு தேட வேண்டியதில்லை.

பரமேசுவர மங்கலம் கல்வெட்டுக்கள்-1

டாக்டர் திரு. மா. இராசமாணிக்கனர், M.A., M.O.L., Ph.D.

பழைய நகரம்

செங்கற்பட்டு மாவட்டத்தில் பாலாறு கடலொடு கலக்கும் இடத்திற்கு இரண்டுகல் மேற்கில்—பாலாற்றின் தென்கரையில் மிகச் சில வீடுகளுள்ள சிற்றூரே பரமேசுவர மங்கலம் என்பது. அதற்கு அண்மையில் நத்தம் என்னும் பெயருடன் ஏறத்தாழ நான்கு தெருக்களைக் கொண்ட சிற்றூர் உள்ளது. நத்தத்திற்கு ஏறத்தாழ ஒருபர்லாங்கு மேற்கில் ஐம்பது வீடுகளைக்கொண்டு சோழக்கட்டு என்னும் மற்றொரு சிற்றூர் இருக்கிறது. நத்தத்திற்குத் தென்கிழக்கில் ஏறத்தாழ ஒருபர்லாங்கு தொலைவில் உடல்காரர் குப்பம் * என்னும் சிற்றூர் இருக்கின்றது. இந்த நான்கும் சேர்ந்தே முற்காலத்தில் பரமேசுவர மங்கலம் என்னும் பெயருடன் இருந்தது.

* சுவாமியைத் தூக்கினவர் 'உடல்காரர்' எனப்பட்டனர். அவர்கள் வாழ்ந்த சிற்றூர் 'உடல்காரர் குப்பம்' எனப் பட்டது. இன்று அங்கு வயல்களே உள்ளன.

கயிலாசநாதர் கோயில்

பாலாற்றின் வடகரையில் ஆயப்பாக்கம் என்னும் இடத்திலிருந்து ஒருவர் ஆற்றில் இறங்கி நேரே சென்றால் தென்கரையிலிருக்கும் பரமேசுவர மங்கலத்தை எளிதில் அடையலாம். தென்கரையிலிருந்து ஏறத்தாழ நூறடித் தொலைவில் ஆற்றினிடையில் கயிலாசநாதர் கோவில் ஒரு மேட்டின் மீது அமைந்துள்ளது. அம்மேடு கருங்கல் மேடு. அதனைச் சுற்றிலும் கற்பாறைகள் இருக்கின்றன. அம்மேட்டின் நீளம் ஏறத்தாழ 120 அடி; அகலம் 60 அடி. கோவில் செங்கற்களால் கட்டப்பட்டது. பாலாறு இன்று அக்கோவிலுக்கு இருபுறத்திலும் செல்கிறது. இதனை நோக்க, ஒரு காலத்தில் இக்கோவில் பரமேசுவரமங்

திருநாவுக்கரசரைத் தமது பெருந் தெய்வமாகப் பேணி வழிபட்டு வந்த அப்பூதி அடிகள் அரசின் திருவுருவத்தை ஒருவகையாகக் கொண்டிருந்தார். அதனால், நாவரசை அவர் நேரிற் கண்டபோது உணர்ந்து கொள்ள முடியவில்லை. அவரது திருவேடத்தை அப்பூதியின் உள்ளம் கண்டு உவகை மிகுந்ததாயினும் அவரது உண்மைத் தோற்றத்தை உணர முடியவில்லை.

இங்கே சீர்காழியில் ஞானசம்பந்தரின் திருவுள்ளம், திருநாவுக் கரசின் உண்மையுருவத்தை ஒருசிறு வேற்றுமையுமின்றிக் காட்டிற்று. தமது கருத்தில் நின்ற திருவுருவும் கண்முன் நின்ற திருவுருவும் ஒப்பக்கண்ட ஞானசம்பந்தர் உலவாப் பேரின்பம் உறுகின்றார். கைகள் அவரை அறியாமே குவிகின்றன. நாவுக்கரசரும் எதிர் வந்து வணங்குகின்றார். சம்பந்தரின் அகத்தே அன்பு நிறைந்து பெருகுகிறது. இன்பவுரைகள் வெளிவருகின்றன. இதனைச் சேக்கிழார்,

> "கண்ட கவுணியக் கன்றும்
> கருத்திற் பரவும் மெய்க்காதல்
> தொண்டர் திருவேடம் நேரே
> தோன்றிய தென்று தொழுதே
> அண்டரும் போற்ற அணைந்து
> அங்கு அரசும் வந்து எதிர் இறைஞ்ச
> மண்டிய ஆர்வம் பெருக
> மதுர மொழியருள் செய்தார்"

என்று பாடுகின்றார். ★

கலத்தைச் சேர்ந்த நிலப்பகுதியில் இருந்தது, பாலாற்று வெள்ளம் ஊரின் ஒரு பகுதியை அழித்துக் கோயிலுக்குத் தென்புறம் புகுந் திருத்தல் வேண்டும் என்பது தெரிகிறது. கயிலாசநாதர் கோயிலைச் சுற்றிலும் நான்கு தெருக்கள் இருந்தன. அப்பொழுது சிறிதாக இருந்த பாலாறு * காலப்போக்கில் வெள்ளப் பெருக்கெடுத்து ஊரின் ஒரு பகுதியை அழித்து விட்டது என்று ஊரார் உரைக்கின்றனர். இக் கோயில் செட்டிமார் பொறுப்பில் இருக்கிறது: அவர்கள் வாழ்ந்த தெருவும் வெள்ளத்திற்கு இரையானதாம்.

இக்கோயிலில் திருச்சுற்று இல்லை. கோயி லின் இடபுறத்திருச்சுற்றில் சிறுகோயில் இருந்த அடையாளம் இருக்கிறது. வலப்புறத் திருச் சுற்றில் சண்டேசுவரர் திருக்கோயில் உள்ளது. அம்மன் கோயிலின் அடிப்படை செங்கல்லும் கருங்கல்லும் கலந்தது. கோவிலைச் சுற்றிலும் செங்கற்சுவரின் சிதைவுகள் உள்ளன. வலப் புறத் திருச்சுற்றில் தரையில்உள்ள ஒரு கல்லின் இருபுறங்களிலும் கல்வெட்டு உள்ளது.

முன்மண்டபத் தூண்கள் மகேந்திரன் கால அமைப்புடையவை. நடுமண்டபத்து நுழைவாயிலுக்கு வலப்பக்கம் வாதாபி விநாயகர் சிலை—வயிறு அமுங்கிய நிலையில் உள்ளது. லிங்கம் பட்டையில்லாதது; சுற்றளவு இரண்டரை அடி, உயரம் நான்கடி.

அழிந்த தெருக்கள்

பாலாற்றின் தென்கரையில் ஏறத்தாழ நூறடி அகலமும் நான்கு பர்லாங்கு நீளமும் உடைய பகுதியில் பழைய செங்கற்களும் மட்பாண்டச் சிதைவுகளும் உறைகிணறுகளும் காணப்படுகின்றன. இவற்றுள் மட்பாண்டச் சிதைவுகள் பார்க்கும் இடமெல்லாம் வெளிப் படையாகவே காணப்படுகின்றன. காலப் போக்கில் அங்கு இருந்த பல தெருக்கள் அழிந்து விட்டன என்பதை இச்சிதைவுகள் உணர்த்துகின்றன. அங்குள்ள மட்பாண்டச் சிதைவுகள் ஏறத்தாழக் கி. பி. எட்டாம் நூற் றுண்டு முதல் 16-ஆம் நூற்றுண்டு வரை உள்ள காலத்தைச் சேர்ந்தவை என்று புதை பொருள் ஆராய்ச்சியாளர் புகல்கின்றனர்.*

பெருமாள் கோயில்

கயிலாச நாதர் கோவிலுக்குத் தென் மேற்கில் ஏறத்தாழ அரைபர்லாங்கு தொலைவில் இடிந்து பாழடைந்த பெருமாள் கோயில் மண்டபம் ஒன்று காணப்படுகின்றது. அதன் தூண்களில் சிற்பங்கள் இருக்கின்றன. பல்லவர் காலப் போதிகைகள் தரையில் கிடக்கின்றன. சிறிய ஓட்டுக் கட்டடம்ஒன்றில், நின்ற கோலத்தில் அமைந்த பெருமாளின் உருவச் சிலையும், திருமகள் நிலமகள் உருவச்சிலைகளும் உள்ளன. அவை ஐந்தடி முதல் 7 அடி வரை உயரம் உள்ளன. இக்கோவிற் பகுதியில் புதர்கள் மிகுந்துள்ளன. இப்பகுதியில் பாம்புகள் மிகுதியாக வாழ்கின்றனவாம். கோவிலுக்கு எதிரில் புதரிற் புதையுண்டு நிற்கும் பாறைப் பகுதியில் கல்வெட்டுள்ளது.

மாதர் எழுவர்கோயில்

பெருமாள் கோயிலுக்கு மேற்கில் ஏறத் தாழ நூறடித் தொலைவில் வைஷ்ணவி, வராகி முதலிய மாதர் எழுவர் உருவங்கள், இருந்த கோலத்தில் ஒரே வரிசையில் அமைந்துள்ளன. அவை சிறந்த வேலைப்பாடு கொண்டவை. அக்கருவறையின் மேற் கூரை செங்கல்லும் சுண்ணும்பும் கொண்டு செய்யப்பட்டதாகும்.†

---

* பாலாறு காவேரிப்பாக்கத்துக்கு அருகி லிருந்து வடகிழக்காகத் திருமாற் பேறு, திருப் பாசூர், திருவேற்காடு, திருமுல்லை வாயில் வழியாகப் பாய்ந்து எண்ணூருக்கருகிற் கடலிற் கலந்துவந்தது என்பது சம்பந்தர், சுந்தரர் பாடல்களாலும், கலிங்கத்துப் பரணி பெரிய புராணம் என்னும் நூல்களாலும், கொண்டா புரம், திருப்பாசூர்க் கல்வெட்டுகளாலும் நன் கறியக்கிடக்கிறது. கி.பி. 12ஆம் நூற்றுண் டிற்குப் பின்பே காஞ்சிக்கு அண்மையில் ஓடும் படி பாலாற்றின்போக்கு மாற்றப்பட்டது. அங்ங னம் மாற்றப்பட்டதால் அதன் புதிய போக்கில் இருந்த பல ஊர்கள் அழிந்தன. அவற்றுள் பரமேசுவரமங்கலம் ஒன்றாகும். கடற்கரையி லிருந்து மறைந்த பெரும்பட்டினம் மற்றென் றாகலாம்.

* புதை பொருள் ஆராய்ச்சியில் M.A. பட்டம் பெற்ற திரு. சீதாராமன் என்பவர் யான் எடுத்துச் சென்ற மட்பாண்டச் சிதைவுகளை ஆராய்ந்து இக்கருத்தைத் தெரிவித்தார்.

† இத்தகைய கோயிற் கூரையைக் கோச் செங்கணுன் (கி. பி. 5ஆம் நூற்றுண்டில்) கட்டிய சாயாவனம் கோவிலிலும் பெரு வேளூர்க் கோவிலிலும் திருவலஞ்சுழிக் கோயி லிலும் காணலாம்.

CONNEMARA PUBLIC LIBRARY

முன்மண்டபம் இடிந்துள்ளது. அங்கு சாஸ்தா உருவச்சிலை, யோக தண்ட நிலையில் அமைந்துள்ளது. கோயிலின் நுழைவாயிலின் வலப்புறம் ஒரு பெண்ணின் உருவச்சிலை உள்ளது. அதன் தலையணி, கூந்தல் ஒப்பனை, கழுத்தணிகள் முதலியன சிறந்த வேலைப்பாடு உடையன.

பொய்கை

பெருமாள் கோயிலுக்கு மேற்கில் ஏறத்தாழ ஒரு பர்லாங்கு தொலைவில், ஏறக்குறைய அறுபது அடி அகலமும் அரைக்கல் நீளமும் உள்ள நீர் நிலை ஒன்று அமைந்துள்ளது. ஊர் மக்கள் அதனைப் பொய்கை என்று வழங்குகின்றனர். இதற்கு மேற்கில் ஒன்றரைக்கல் தொலைவிலுள்ள செம்பூர் ஏரியிலிருந்து மூன்றடி அகலமுள்ள கால்வாய் இப்பொய்கைக்கு நீரை உதவுகிறது. இப்பொய்கையிலிருந்து மூன்றடி அகலமுள்ள கால்வாய் புறப்பட்டு ஆனைக்காரன் மடுவின் வழியாகப் பரமேசுவரமங்கலத்துக்குக் கிழக்கிலுள்ள வேப்பஞ்சேரி வயல்களுக்கு நீரைப் பாய்ச்சுகிறது. பொய்கையின் இருபுறங்களிலும் தென்னை, பனை, சவுக்கு முதலிய மரங்கள் உள்ளன. இதில் வெண்தாமரை, செந்தாமரை, அல்லி முதலியன இருந்தனவாம்.

மருதிமண்டபம்

இதுமேலே கூறப்பட்ட பொய்கைக்கு ஏறக்குறைய அரைபர்லாங்கு தெற்கில் அமைந்துள்ளது. இதன் கூரையும் முன்பு சொன்ன வடிவில் அமைந்துள்ளது. இதன் நீளம் ஏறத்தாழ 35 அடி; அகலம் 30 அடி. இதன் முப்புறச் சுவர்களும் தூண்களும், இதற்கு அரை பர்லாங்கு தொலைவிலுள்ள சிவன்கோயில் தூண்களையும் கற்களையும் கொண்டு கட்டப்பட்டதாம். அதற்குச் சான்றாகச் சுவர்களில் உள்ள எட்டுக்கற்களில் தொடர்பற்ற கோவில்கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அவற்றுள் சில சோழர் காலத்தவை. உட்புறச் சுவரிலுள்ள நான்கு தூண்களின் மேற்புறம் மூன்று நீண்ட கற்பாறைகள் பொருத்தப்பட்டுள்ளன. அவற்றில் இரண்டு வரிகள் அரபு எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு மேலுள்ள சுவரில் ஒருவரி அரபு எழுத்துக்கள் உள்ளன. கட்டிடத்தின் முன்புறம் மேற்கூறையில் கருங்கல் கொடுங்கை பதிக்கப்பட்டுள்ளது. அது கோயில் மண்டபத்தின் கொடுங்கை என்று ஊரார் உரைக்கின்றனர். ஊரில் முஸ்லீம் வீடுகள் சில இருக்கின்றன. ஊரில் உள்ள பெரும் செல்வர் முஸ்லீம்களே ஆவர்.

சண்பகேசர் கோயில்

இது மேட்டில் அமைந்துள்ளது. பாலாற்று வெள்ளம் ஊரினுள் நுழையும் பொழுது ஊரார் இம் மேட்டில் தங்கியிருப்பது வழக்கமாம்.

கோயில் கருவறை—நடுமண்டபம்—முன் மண்டபம் மட்டும் நன்னிலையில் உள்ளன. அவற்றுக்கு எதிரில் ஒருசிறு மண்டபம் இடிந்து நிற்கின்றது. உட்கார்ந்த சிங்கத் தூண்கள், நான்கு வாயிற் காவலர்களின் சிலைகளில் உள்ள கைகள் உடைந்து கிடக்கின்றன. இவற்றுக்கு எதிரிலுள்ள நீர் நிலையில் சண்பங்கோரை வளர்ந்துள்ளது. இதில் படிக்கட்டுகளும் சில இருக்கின்றன. இந் நீர்நிலை பண்டைக் காலத்தில் கோயிலின் உட்குளமாய் இருந்ததாம். அதிலிருந்து ஏறத்தாழ நூறடி வரையில் கோயில் மண்டபம் முதலியன இருந்தனவாம். அப்பகுதியில் இன்றும் கட்டடச் சிதைவுகள் காணப்படுகின்றன.

இக்கோயிலுக்குத் திருச் சுற்று அழிந்து விட்டது. திருச்சுற்றில் ஐந்து சிவலிங்கங்கள் தனித்தனியே உள்ளன. இடப்புறத் திருச்சுற்றில் அம்மன்கோயில் இருந்து அழிந்துவிட்டது. கோயில் விமானம், காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோயில் விமான அமைப்புடையது. அது செங்கல் விமானம். கருவறையின் பின்புறச் சுவரில் லிங்கோற்பவர் சிலை உள்ளது. அதன் மீது விமான அடிப்படையில் திருமாலின் உருவச்சிலை உள்ளது. கோயில் தளத்திலும் கருவறையின் உட்சுவரிலும் பல கல்வெட்டுகள் உள்ளன. நந்தியின் பீடத்தைச் சுற்றிலும் வாயிற்காவலர் பீடத்தைச் சுற்றிலும் கல்வெட்டுகள் உள்ளன. கோயிலில் ஐந்து கிணறுகள் இருந்தனவாம். இன்று இரண்டே உள்ளன. கோயில் வெளிமதில் அழிந்துவிட்டது. அதன் அடிப்படையில் $12 \times 6 \times 3$ அங்குல அளவுள்ள செங்கற்கள் இருக்கின்றன. சண்பகேசர்க்கு எதிரிலுள்ள நந்தி கிழக்கிலுள்ள கயிலாசநாதர்

கோயிலைப் பார்த்தபடி அமர்ந்துள்ளது குறிப்பிடத்தகும். கோயிலிலுள்ள லிங்கம் பட்டையில்லாதது.

சண்பகேசர் கோயிலிலுள்ள லிங்கம் தாமரை வடிவில் அமைந்த ஆவுடையாரோடு கூடிய லிங்கமாகும். எனவே, அது பத்மலிங்கம் எனப்படுகிறது. அம்மன் நிற்கும் பீடமும் பத்மபீடம். அம்மனுடைய இரண்டு கைகளிலும் தாமரை மலர்கள் இருக்கின்றன.

விநாயகர்—முருகர் கோயில்கள்

சண்பகேசர் கோயிலுக்குப் பின்புறமுள்ள வயல்களுக்கு இடையில் ஒரு மேட்டில் வாதாபி விநாயகர் சிலை உள்ளது. அதற்குரிய கோயிலைச் சார்ந்த பழைய கட்டட அடிப்படை தெரிகிறது. அதற்கு எதிரில் இருந்த குளம் எட்டு ஆண்டுகட்கு முன்பு வயலாக்கப்பட்டது. பிள்ளையார் உயரம் நான்கரை அடி. அந்த இடத்திற்கு நேர் வடக்கில் முருகன் கோயில் இருந்து அழிந்துவிட்டதால், அங்கு இருந்தசிலை சண்பகேசர் கோயிலில் வைக்கப்பட்டுள்ளது.

தெலுங்கு நூல்

"பரமேசுவர வர்மன் மக்கட்பேறு இன்மையால் இக் கோயிலைக் கட்டி வழிபட்டான்; இவ்வூரைத் தன் பெயரால் அழைத்தான். இவ்வூரில் கயிலாசநாதர் கோயில், வைகுந்தப் பெருமாள் கோயில், சௌந்தரியநாயகி கோயில் ஆகிய மூன்றும் இருந்தன என்னும் செய்தி தெலுங்கு நூல் ஒன்றிற் கூறப்பட்டுள்ளது." என்று சண்பகேசுவரர் கோயில் குருக்கள் (திரு. நாகரத்தின குருக்கள்) கூறினர். இக் கூற்றை நோக்க, சண்பகேசுவரர் கோயில் பிற்காலத்தது என்பதும், இக்கோயிலில் உள்ள சவுந்தரிய நாயகிக்கே பெரிய கோயில் அமைக்கப்பட்டிருந்தது என்பதும் அறியத்தகுவன.

மேலே கூறப்பெற்ற நான்கு ஊர்களையும் தன்னகத்தே கொண்ட பரமேசுவர மங்கலம் ஏறத்தாழ மூன்றுகல் நீளமும் மூன்றுகல் அகலமுமாக இருந்திருக்கலாம் என்பது தெரிகிறது.

இனிக் கயிலாசநாதர், வைகுந்தப் பெருமாள், சண்பகேசர் கோயில்களில் உள்ள கல்வெட்டுகள் கூறும் செய்திகளைக் காண்போம்.

ஆணையர் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள்

4-12-63 மருதமலை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயிலில் தண்ணீர்த் தேக்கவசதித் திறப்பு விழா.

5-12-63 கோயமுத்தூர்க் கோனியம்மன் கோயில் முன் கோபுரத் திருப்பணிக் கால்கோள் விழா.

,, செஞ்சேரி ஸ்ரீ மந்திரகிரி வேலாயுத சுவாமி கோயிலில் பாலாலய ஸ்தாபன விழா.

,, காரமடை ஸ்ரீ ரங்கநாத சுவாமி கோயிலில் முதலமைச்சர் திருமிகு. M. பக்தவச்சலம் அவர்கள் தலைமையில் மாட்சிமை தங்கிய மைசூர் மகாராஜா அவர்கள் நிகழ்த்திய வசந்த மண்டபத் திறப்பு விழா.

6-12-63 பேரூர்ப் பட்டீசுவரர் தேவஸ்தானத்தில் சிவாகமப் பயிற்சி வகுப்புத் தொடக்கவிழா.

8-12-63 திருப்பரங்குன்றம் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயிலில் "வள்ளித்திருமண மன்றம்" திறப்பு விழா.

,, மதுரை ஸ்ரீ மீனாட்சியம்மை கோயிலில், நாகர்கோயில் ஸ்ரீ ஆறுமுகநாவலர் எழுதிய "இந்துமத இணைப்பு விளக்கம்" என்னும் நூலை, முதலமைச்சர் திருமிகு. M. பக்தவத்சலம் அவர்கள் வெளியீடு செய்த விழா.

புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே!

பாலகவி, வயிநாகரம், திரு. வே. ராமநாதன் செட்டியார், தேவகோட்டை.

திருக்கயிலை மலையிலிருந்த சித்தராகிய திருமூலதேவநாயனார், சிவபெருமானது திருவருட் குறிப்பின் படி திருவாவடுதுறைத் திருக்கோயிலிலுள்ள சிவபோதியினடியில் மூவாயிரம் ஆண்டுகள் தவமிருந்து "திருமந்திரமாலை" என்னும் தமிழாகம நூலை அருளித்தந்தார். அவரது ஒவ்வொரு ஆண்டு தவத்தின் பயனும் ஒவ்வொரு திருப்பாடலாக வெளிவர, அவையனைத்தும் சேர்ந்த தொகுதி "திருமந்திரம்" என்னும் பெயர் பெற்றுச் சைவத் தெய்வத் திருமுறைகள் பன்னிரண்டனுள் பத்தாந் திருமுறையாக அமைந்து சித்தாந்த சைவர்களாகிய நம்மவர்களது பிரமாண நூல்களுள் ஒன்றாக விளங்கிக் கொண்டிருக்கின்றது.

நூல் செய்யும் ஆசிரியன், அந்நூல் முட்டின்றி முடிதற்பொருட்டும், மாணாக்கர்க்கு நெறிமுறையை அறிவுறுத்தற் பொருட்டுமாக முதற்கண் கடவுள்வணக்கம் கூறுதல், தொன்று தொட்டு வருகின்ற நமது மரபாகும். அந்த முறையில் திருமந்திரத்தில் அமைந்துள்ள கடவுள் வணக்கத் திருப்பாடல்

"ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே"

என்பதாகும்.

இத்திருப்பாடலில் வணங்கப் பெறுகின்ற கடவுள், வேழமுகமுடைய விநாயகப் பெருமான். சிவபெருமானது உருவத் திருமேனிகள் பலவற்றுள் விநாயகப் பெருமான் வடிவமும் ஒன்று. விநாயகப் பெருமானை "விக்கிநேசுவரர்" என்றும் கூறுவதுண்டு. விக்கிநேசுவரர் என்பது, துன்பத்திற்குத் தலைவர் என்னும் பொருளையுடையது. ஒருவருக்குத் துன்பத்தை ஆக்கவும் பிறிதொருவருக்கு அதனைப் போக்கவும் வல்லவராய் மறமும், அறமுமாகிய இரு பெருங்கருணைகளை உடையாராயிருப்பவர் விநாயகப் பெருமான்.

"இடர்தீர்ந் தெய்தப்
போற்று நருக் கறக்கருணை புரிந்தல் லார்க்கு
நிகரின்மறக் கருணைபுரிந் தாண்டு கொள்ளும்
நிருமலனைக் கணபதியை நினைந்து வாழ்வாம்"

என்பது கச்சியப்ப முனிவரருளிய விநாயக புராணத்திருப்பாடற்பகுதி. மெய்யன்பு வைத்து வழிபடுகின்றவர்களின் துன்பத்தைத் துடைக்கின்ற அவர், அங்ஙனம் தம்மை நினையாதவர்கள் பால் துன்பத்தை உண்டாக்கியே, பின்னர் அவர்களை ஆட்கொள்வார்.

விநாயகரை நினைவுறுது செய்யும் எந்தச் செயலும் துறைபோகி நிறைவுறு தென்பதை அறிவிக்கவே, சிவபெருமான் திரிபுரசங்கார வேளையில் அவரை நினையாது சென்று, அதனால் தாம் ஊர்ந்து சென்ற தேரின் அச்சு முறியும்படி ஒரு திருவிளையாடலைச் செய்து காட்டினார். முப்புரப் போருக்குச் சென்ற தேரின் அச்சு முறிந்த இடம் "திருஅச்சிறுபாக்கம்" என்று இன்றும் வழங்கப் பெறுகின்றது.

"முப்புரம் எரி செய்த அச்சிவன் உறைரதம்
அச்சது பொடி செய்த—அதிதீரா"

என்று அருணகிரிநாத சுவாமிகள் விநாயகப் பெருமானது பெருந்தீரத்தைப் பாராட்டுகின்றார்.

மெய்யடியார்களுக்குத் துன்பநீக்கம் செய்யும் வேளையில் அதன் பொருட்டு மறக்கருணை

உடையவராய் விளங்குகின்ற விநாயக மூர்த்தி அவர்களுக்கு இன்ப ஆக்கம் புரிகின்ற பொழுது அறக்கருணை உடையவராய்த் திகழு கின்றார். அதனோடு தம்மை நினையாதவர் களுக்குத் துன்ப ஆக்கமும் நினைப்பவர்க்குத் துன்பநீக்கமும் செய்வது அவரது இயல்பாய் அமைந்திருக்கின்றது என்பதை, அவருக்குரிய விக்கினேசுவரர் என்னும் திருப்பெயர் புலப் படுத்திக் கொண்டிருக்கின்றது. இக்கருத்தை

"பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே"

என்ற திருப்பாடலில் திருஞானசம்பந்த சுவா மிகள் தெளிவுற அருளி இருக்கின்றார்கள். இதில் "தனதடி வழிபடும் அவரிடர் கடி கணபதி வர அருளினன்" என்ற பகுதி, வழி படும் அடியார்களுக்குத் துன்ப நீக்கம் செய்தற் பொருட்டாகவே விநாயகப் பெருமான் திருவ வதாரம் செய்தார் என்பதைத் தெற்றெனத் தெரிவிக்கின்றது.

இங்ஙனம் இடையூற்றுக்கு இடையூறு செய் யும் இன்ப வடிவினராகிய ஐங்கரக் கடவுளைத் திருமூலதேவ நாயனார் தமது நூலுக்கு முன்நிறுத்தி வழிபடுகின்ற பொழுது "ஐந்து திருக்கரங்களும் ஆனைமுகமும் பிறைத்திங்களை ஒத்த கொம்பும் உடையவராய் நந்தியம் பெரு மானுக்கு ஞானோபதேசம் செய்தவராகிய மூல நந்தியின் மூத்த மைந்தராய் ஞானக் கொழுந் தாய்" உள்ளத்தில் சிந்தித்துக் கரத்தாலும் சிரத்தாலும் திருவடிகளைத் தொழுது வாயாரப் போற்றி மகிழ்வெய்துகின்றார். கடவுளருக்குச் செய்யும் வழிபாடு கரணங்கள் மூன்றும் ஒன்ற நிகழுதல் வேண்டும். அங்ஙனம் நிகழாத பொழுது வழிபட்டால் பெறத்தக்க பயன் வராது போய்விடும். இவ்வுண்மையை உண ராமையினாலேயே இந்நாளில் பலர் "வழிபாடு பயன் தரவில்லை" என்று வாய் கூசாது கூறி விடுகின்றனர். வெற்றிலையும் பாக்கும் சுண் ணமுமாகிய மூன்றும் சேரவேண்டிய முறையில் சேர்ந்து ஒன்றினாலன்றிச் செவ்வண்ணம் தோன்றுமாறில்லையாதல் போல, மனம் மொழி மெய் ஆகிய மூன்று கரணங்களும் சேர வேண்டிய முறையில் சேர்ந்து ஒன்றினால் மட்டுமே வழிபாட்டுப் பயன் குறைவற வந்து கிட்டும் இங்கே. "புந்தியில் வைத்து" என்பதில்மனமும் "அடி போற்றுகின்றேன்" என்புதில் மெய்யும் "போற்றுகின்றேன்" என் பதில் மொழியும் தொழிற்படுமாறு உணர்த்தப் பட்டுள்ளது.

மனம் ஒன்றே மற்ற அகக் கரணங் களாகிய புத்தி, சித்தம், அகங்காரங்களுக்கும் புறக் கரணங்களாகிய ஞானேந்திரிய கன் மேந்திரியங்களுக்கும் மூலமாய் நின்று அவைகள் தத்தம் தொழில்களைச் செய்வதற்கு அடிப்படையாகிய நினைத்தலைச் செய்வது. ஆன்ம தத்துவம் இருப்பது நான்கனுள் தோற்ற முறையில் நான்காவது தத்துவமாக இருப்பது மனம். பிரகிருதி, புத்தி, அகங்காரம் ஆகிய மூன்று தத்துவங்களும் தோன்றிய பின்னர் வெளிப்படுகின்ற மனமாகிய தத்துவம் நினைப் பிற்குக் கருவியாய் இருப்பது.

"அந்தக் கரணமிவ் வடைவே உரைக்கக்கேள்
அந்தமனம் புத்தியுட னங்காரம்—சிந்தையிவை
பற்றியது நிச்சயித்துப் பல்கா லெழுந்திருந்தங்
குற்றதுசிந் திக்கு முணர்"

என்பது உண்மை விளக்கத்திருப்பாட்டு. இதில் மனத்தின் தொழில் பொருளைப் பற்றுவது என்று கூறியிருப்பது உணரத்தக்க தாகும். மெய்யின் தொழிலாகிய வழிபாடும், மொழியின் தொழி லாகிய வாழ்த்தும், மனத்தின் தொழிலாகிய நினைப்பை அடிப்படையாகக் கொண்டு நிகழு மாதலின் "புந்தியில் வைத்து" என்று மனத் தொழில் முன்னர்க் கூறப் பெற்றுள்ளது.

விநாயகப் பெருமானது திருவடிகள் அவரது ஞான சத்தி கிரியாசத்திகளாதலின் அவற்றின் துணையையின்றி நாம் ஒன்றை அறியவோ, செய்யவோ வல்லமை உடையோர் அல்லோம். இறைவனது ஞானக் கிரியாசத்திகளே நமது அறிவுக்கும் செயலுக்கும் மூலமாய் இருந்து நம்மை அறியுமாறும் செய்யுமாறும் செய்து வரு கின்றன. நூற்பொருளை அறிந்து அமைத்து நூலை இயற்றுவதற்கும் பின்னர் அதனை ஓது வதற்கும் இறைவனது ஞானக்கிரியாசத்திகளா கிய திருவடிகளின் துணையை வேண்டி ஆசிரி யர் "அடிபோற்றுகின்றேன்" என்று அருளிச் செய்தார். "போற்றுகின்றேன்" என்பது காயத் தால் செய்யும் வழிபாட்டையும், மொழியால் புரி

யும் தோத்திரத்தையும் குறிக்கும். போற்றினேன் என்றோ போற்றுவேன் என்றோ சென்றகால வருங்காலங்களைக் காட்டும் சொற்களில் ஒன்றை அமைக்காமல், போற்றுகின்றேன் என நிகழ்காலம் காட்டும் சொல்லை அமைத்திருப்பது விநாயகர் வழிபாடு எந்த வேளையிலும் நிகழ்காலத்ததாயிருக்க வேண்டும் என்னும் உண்மையைப் புலப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

விநாயகப் பெருமானது ஐந்து திருக்கரங்களும் அவரே ஐந்தொழில் புரியும் ஆண்டவன் ஏனும் உண்மையைப் புலப்படுத்துவனவாகும். பிறப்பும் இறப்புமாகிய இரண்டையும் உடையவை உயிர்கள்; யாருக்கு அவை யிரண்டுமில்லையோ அவர் கடவுளென்பது வேதாகமங்களிற் கண்ட முடிபு, பிறந்திறந் துழலுகின்ற உயிர்களின் பொருட்டாகக் கடவுள் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்து தொழில்களையும் இடையறாது செய்து வருகின்றார். அத் தொழில்களால் அவருக்கு ஏதும் பயனில்லை. அவற்றால் பயன் பெறுபவர் ஆன்மாக்களே யாவர். தம் பயன் கருதாது நம்பயன் கருதி இறைவன் இவ்வைந்து தொழில்களையும் இயற்றுவதனாலேயே இவற்றை அவனது விளையாட்டு என்று ஆன்றோர் கூறினர், "காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி" என்பது மணிவாசகம்,

ஐந்தொழிற் கருத்தராகிய ஆனைமுகக் கடவுள் பலவகைப்பட்ட திருமேனிகளைக் கொண்டு எழுந்தருளியிருந்து அருள் புரிவார், அவரது வடிவ பேதங்களுள் நமது திருக்கோயில்களில் பெரும்பான்மையாக வைத்து வழிபடப் பெறும் ஒரு திருவுருவத்தில் அவர் ஒரு துதிக்கை முகமும், அங்குசம், பாசம், தந்தம், மோதகம் ஆகியவற்றைத் தாங்கிய நான்கு திருக்கரங்களும், துதிக்கை முகத்தில் ஒடிந்ததும் ஒடியாததுமான இரண்டு கொம்புகளும் உடையவராய்ச் சொற்கூறும் பொருட்கூறுமாகிய இருவகை உலகங்களும் தோன்றுவதற்குக் காரணமாகிய நாத வடிவமான பிரணவத்தை உணர்த்தும் தோற்றத்தினராய் எழுந்தருளியிருப்பார். இதனை,

"ஹரித்ராபம் சதுர்பாஹும் ஹரித்ரா வதநம்ப்ரபும்
பாசாங்குச தரம்தேவம் மோதகம் தந்தமேவச"

என்று தியான சுலோகம் அறிவிக்கிறது.

இவ் வடிவத்தில் பாசம் உயிர்களின் பிறப்புக்குக் காரணமாதலின், அப் பாசத்தைப் பற்றிய கை படைப்பைக் குறித்துக் கொண்டிருக்கிறது. அங்குசம் துடுக்கை ஒடுக்கி நேர்மையை வழங்கித் காப்பதாகலின் அதனைப் பற்றிய கை காப்பைப் புலப்படுத்திக் கொண்டிருக்கின்றது. ஒடிந்த கொம்பு கயமுகாசுரனை அழித்ததாகலின், அதனைபிடித்த கை அழிப்பை உணர்த்திக் கொண்டிருக்கிறது. துதிக்கை மோதகங் கொண்ட கையை நோக்கி வளைந்து மோதகத்தைக் காட்டிக் கொண்டிருக்கும். இது, அருட் சத்தியினிடம் ஆன்மாக்களைச் செலுத்துகின்ற திரோதான மாகிய மறைத்தலை அறிவிக்கும். மோதகம் அருள் வடிவமாதலின் அதனைக் கொண்ட கை அருளலை விளக்கிக் கொண்டிருக்கின்றது. இங்ஙனம் பஞ்சகிருத்தியகர்த்தா விநாயகரென்பதை முதற்கண் அறிவிக்கவே ஆசிரியர் "ஐந்து கரத்தனை" என்று பாடலைத் தொடங்கி யிருக்கின்றார்.

ஆனைமுகம் பிரணவத்தை விளக்கிக் கொண்டிருப்பது. "ஓம்" என்ற பிரணவ எழுத்து விநாயகப் பெருமானது வலது காதில் தொடங்கித் துதிக்கையில் நிறைவுறுவது கண்கூடு. பிரணவப் பொருளாகிய பெருந்தகை ஐங்கரக் கடவுளே என்று வேதாகமங்கள் பேசுகின்றன. வன்னம், பதம், மந்திரமாகிய சொற்கூறுகளும் கலை, தத்துவம், புவனமாகிய பொருட்கூறுகளும் பிரணவத்துள் அடங்குவன. இதனை நினைவு கூர்ந்தே நமது ஆசிரியர் திருமந்திர நூலைத் தொடங்கும்பொழுது 'ஒன்றவன்றானே' என்றுதொடங்கி அங்கும் பிரணவத்தைக் குறிப்பால் உணர்த்தியருளினார்.

பெருமானது கையில் அவரது ஒடிந்த வலது கொம்பு இருக்கும். இடது கொம்பு துதிக்கையிலேயே இருப்பது. இவை இரண்டும் அபரஞான பரஞான வடிவங்கள். "உவமையிலாக் கலைஞானம்" என்று அபர ஞானத்தையும் "உணர்வரிய மெய்ஞ்ஞானம்" என்று பரஞானத்தையும் சேக்கிழார் சுவாமிகள் அறிவிக்கின்றார்கள். அபர ஞானம் பரஞானத்திற்கு வாயிலாயிருப்பதன்றி முத்தியை நேரே தருவதன்று.

"பலகலை ஞானமும் பல்லுயிர் ஞானமும்
தலைவனை யணுகாத் தன்மைசாற் றியது"

என்பது சிவப்பிரகாசச் செய்யுள் ஒன்றுக்குக் கூறும் பொருட் குறிப்பு: "இந்தின் இளம்பிறை

அதோமுக தரிசனம்

பேராசிரியர். கோ. சுப்பிரமணியம், எம்.ஏ.,பி.எல்., அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

"அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய"

அதோ முகம் என்றால் கீழ்நோக்கிய முகம், உள்முகம், மறைமுகம். இறைவனுக்கு முகமாவது, பார்க்கப்படும் பாசப் பரப்பு எங்கணும் ஒளிக்குள் ஒளியாம் சிவமாயிருத்தல். தரிசனம் என்றால் காண்டல். எனவே, அதோமுக தரிசனம் ஆவது, காணப்படும் பாசப் பொருள் எல்லா வற்றையும் அவ்வாறு காணாமல், அவற்றுள் எங்கணும் நிறைந்தும் கரந்தும் நிற்கின்ற பரம்பொருளைச் சோதிக்குட் சோதியாய், ஒளிக்குள் ஒளியாய், அறிவுக்கறிவாய், உயிர்க்குயிராய்க் காண்டல் ஆகும். இது மெய்யடியார்களுக்கு இலக்கணமாயுள்ள 10 செயல்களுள், 8 ஆவதாகவுள்ள இலக்கணமாகும். இதனை ஞான நூல்கள் சிவதரிசனம் என்று எடுத்து ஓதும். இந்தப் பத்து இலக்கணங்களையும் சேர்த்துத் தசகாரியம் என்பர். அவையாவன: (1) தத்துவரூபம் (2) தத்துவ தரிசனம் (3) தத்துவ சுத்தி (4) ஆன்மரூபம் (5) ஆன்ம தரிசனம் (6) ஆன்மசுத்தி (7) சிவரூபம் (8) சிவதரிசனம் (9) சிவயோகம் (10) சிவபோகம் என்பனவாகும் "பத்துக் கொலாம் அடியார் செய்கை தானே" என்னும் அப்பர் அருள் வாக்கும், "பத்துடையீர் ஈசன் பழவடியீர்" என்னும் மணிவாசகரின் திருவாக்கும் ஈண்டுக் கருதத்தக்கன. அதோமுக தரிசனத்தின், அதாவது சிவதரிசனத்தின் இயல்பை உண்மை நெறி விளக்கம் என்னும் சித்தாந்த நூல் பின்வருமாறு கூறுகிறது:—

" பரை உயிரில் யான் எனது ஒன்றற நின்றது [அடியாம்
பார்ப்பிடம் எங்கும் சிவமாய்த் தோன்றலது [முகமாம்
உரையிறந்த சுகமதுவே முடியாகும் என்றங்கு
உண்மையினை மிகத் தெளிந்து பொருள் [வேறொன்றின்றித்
தரை முதலிற் போகாது நிலையினில் நில்லாது
தற்பரையில் நின்று அழுந்தாது அற்புதத்தின் [ஆகும்

போலும் எயிற்றனை" என்பதால் விநாயகப் பெருமான் வழங்கும் அபர ஞானமும் பரஞானமும் குறிக்கப்பெற்றன. "ஞானக்கொழுந்து" என்று பின்னர்க் கூறுவதும் இதனை வலியுறுத்துவதாகும்.

"நந்தி" என்பது சிவபெருமானுக் குரிய திருப் பெயர்களுள் ஒன்று. சிவபெருமானிடம் ஞானோபதேசம் பெற்ற முதல் மாணவராகிய நந்தியம் பெருமான், ஆசாரியரது திருப்பெயரையே தீட்சா நாமமாகச் சூட்டப்பெற்றார். அந்நந்தி தேவரது ஞானப் புதல்வராகிய திருமூலதேவநாயனார் சிவபெருமானைச் சிந்திக்கும் போது தமது குருபரம்பரை நினைவு முன்னிற்க இறைவனை "நந்தி" என்றும்,

"ஆத்மாவே புத்ரநாமாஸி"

என்ற சுருதிப்படி அவரின் வேறல்லாத விநாயகக் கடவுளை எண்ணும் போது "நந்திமகன்" என்றும் கண்டுரைப்பாராயினர். ★

தெரிவரிய பரமானந்தத்திற் சேர்தல் சிவன்
[உண்மைத்
தெரிசனமாய்ச் செப்பும் நூலே''

இதன் பொருளாவது 'யான், எனது என்னும் செருக்கற்று யாண்டும் நிறைந்து நிற்கும் பரம் பொருளை ஒளிக்குள் ஒளியாய்க்கண்டு, அந்தக் காட்சியில் தோன்றும் ஆனந்தத்தின் உண்மையை உணர்ந்து, நிலமுதலாய தத்துவங்களில் மீண்டும் செல்லாமல், நான்பிரமம் என்னும் பசு ஞானத்திலும் நில்லாமல், மேலான பரையிலேயும் நின்று அழுந்தாமல், சிவப்பேற்றில் ஆகும் அறிதற்கரிய பரமானந்தத்தே சேர்தலே சிவனை உள்ளபடி தரிசிப்பதாகிய சிவதரிசனம் என்று சிவாகமங்கள் சொல்லும்' என்பதாம்.

எனவே, அதோமுகதரிசனம் என்பதன் தத்துவப் பொருளாவது, யாண்டும் கலந்தும், கரந்தும் நிற்கும் பேரொளிப் பிழம்பாம் பரம் பொருளைத் தரிசித்தல் என்பதாம்.

''விறகில் தீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல் நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே''

என்னும் அப்பர் வாக்கும் ஈண்டுச் சிந்தித்தற்குரியது. அதோமுகத்தைப் பாதாளமுகம் என்று வேதங்கள் ஓதும். பாதாளமுகம் என்றால் மறைமுகம் என்னும் பொருட்டு, பாதாளம் என்றால் மறைவு.

இறைவன் இங்ஙனம் இயங்குதிணையும் நிலைத்திணையுமாகிய எல்லாப் பொருள்களிலும் விரவிக் கரந்திருத்தல், அவை நிலை பெறற் பொருட்டேயாகும். அங்ஙனம் விரவி இருப்பினும், அவனை அப்பாசங்கள் பந்திக்க மாட்டாவாம். இதனை,

''பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல்பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கில்பசு பாசம் நிலாவே''115

என்னும் திருமந்திரம் முன்னரே குறித்துள்ளது. அதனையே ஈண்டும் வேறொரு வகையாக வலியுறுத்துகிறார் திருமூலர்:—

''அண்டமொ டெண்டிசை தாங்கும் அதோமுகம்
கண்டங் கறுத்த கருத்தறி வாரில்லை
உண்டது நஞ்சென் றுரைப்பர் உணர்விலோர்
வெண்டலை மாலை விரிசடை யோற்கே'' 521

இறைவன் பாசத்தோடு விரவியிருப்பினும் அப்பாசங்கள் அவனை மறைத்தலும், மயக்குதலும் இல்லை என்பதனை அவனது திருநீல கண்டமானது விளக்கும். புராணகதையின் தத்துவப் பொருள் இதுவே. பாம்பின் நஞ்சு உட்கொண்டாரின் உடல் முழுதும் பரவி, மயக்கி, உயிரெனும் ஒரு பொருள் இன்றெனும் படி பாடாணம் போற்கிடத்திப் பிணம் எனப் பெயர் படுமாறு செய்யும். அங்ஙனமின்றி, அது இறைவன் கண்டத்தில் தனித்திருத்தல், அவனைப் பாசம் அணுகாது என்னும் உண்மையினையே விளக்கும்.

உலகத்து உயிர்களைப் பாதுகாக்கும் பரங்கருணையால் இறைவன் ஆலகாலத்தை எடுத்து மிடற்றில் அடக்கினான். அக் கருவிடம் இறைவனின் செந்நிறமான தூயகண்டத்தினூடு நீல நிழலொளி பரப்பி நிற்கிறதே தவிர இறைவன் கண்டம் கறுத்து விட்டது என்றோ, கருகி விட்டது என்றோ கூறுதல் பொருந்தாது. அது பொய்யே யாகும்.

''எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள், மெய்ப்பொருள் காண்ப தறிவு''

என்பது போல், உண்மையை உணர்ந்து இறைவனுக்கு ஆட்செய்ய வேண்டும். இதனை,

''செய்தான் அறிவன் செழுங்கடல் வட்டத்துப்
பொய்யே உரைத்துப் புகழும் மனிதர்காள்!
மெய்யே உரைக்கில் விண்ணோர் தொழச்செய்வன்
மைதாழ்ந் திலங்கு மணிமிடற் றோனே''

என்னும் திருமந்திரம் வலியுறுத்துகிறது. விண்ணோர் தொழச் செய்வன் என்ற கருத்து, பிரம விட்டுணுக்கள் போன்ற முதல் தேவர்களும் வணங்கும் படியாகச் செய்வன் என்பதாம். இதனை அப்பர் தேவாரம் ஒன்று வேறு விதமாய்க் கூறுகிறது:—

''முழுத்தழல் மேனித் தவளப் பொடியன்
[கனகக் குன்றத்

தெழிற்பெருஞ் சோதியை எங்கள் பிரானை இகழ் [திர்கண்டீர்
தொழப் படுந் தேவர் தொழப்படுவானைத் [தொழுதபின்னைத்
தொழப்படுந் தேவர்தம்மால் தொழுவிக்குந் [தன் தொண்டரையே"

"செய்தான் அறிவன்" என்னும் திருமந்திரம் சில பாடவேறுபாடுகளுடன் கூடாவொழுக்கம் என்ற தலைப்பின் கீழும் வந்துள்ளது.

அதோமுகம் என்னும் இத் திருமுகம் சிவ யோகியரான அறிஞரால் தியானித்துத் தரிசித் தற்குரியது.

இதனை,

"நந்தி எழுந்து நடுவுற ஓங்கிய
செந்தி கலந்துட் சிவனென நிற்கும்
முந்திக் கலந்தங்கு உலகம் வலம்வரும்
அந்தி இறைவன் அதோமுகம்ஆமே"

என்னும் திருமந்திரம் அறிவுறுத்துகிறது. இத் திருமந்திரத்தை மனதிற் கொண்டே பாடியது போல் அமைந்துள்ளது கந்தபுராணப்பாடல்:—

"வந்திக்கும் மலரோனாதி வானவர் உரைத்தல் கேளாப்
புந்திக்குள் இடர்செய்யற்க புதல்வனைத் தருது மென்று
அந்திக்கு நிகர்மெய்யண்ணல் அருள்புரிந்தறிஞ ராயோர்
சிந்திக்குந் தனது தொல்லைத் திருமுகம் ஆறும் கொண்டான்"

(உற். அவ—43)

"ஐந்து முகத்தோடு அதோமுகந் தந்து
திருமுகங்கள் ஆறாகி"

எனக் கந்தர் கலி வெண்பாவிலும் காணலாம்.

இவ்வாறாக, இத்திருமுகமானது, உண்மை ஞானிகளின் தியான பாவனைகளால் மட்டும் அகக்கண்ணால் தரிசித்தற்குரியதாக இருத் தலினாலே, செந்தமிழ்ச் சைவத் திருமுறைகளில் இத்திருமுகத்தினைப் பற்றிய செய்தி மிகவும் அருமையாகவே போற்றி ஓதப் பட்டிருக்கிறது. பொதுவாக எங்கணும் ஐந்து முகங்களே கூறப் பட்டிருக்கும். அப்பர் திருப்பாடல் ஒன்றில் மட்டும் சிவபெருமானுக்கு ஆறு முகங்கள் உண்மை குறிக்கப்படுகின்றது.

"ஏறனார் ஏறுதம்பால் இளநிலா எறிக்குஞ் சென்னி
ஆறனார் ஆறுசூடி ஆயிழை யாளோர் பாகம்
நாறுபூஞ் சோலைத்தில்லை நவின்றசிற்றம்பலத்தே
நீறுமெய் பூசி நின்று நீண்டெரி யாடுமாறே"

இதில் "இளநிலா எறிக்கும் சென்னி ஆறனார்" என்றும், பின்னர் "ஆறு சூடி" என்று கங்கை தரித்தமையை வேறு குறித்தும் வந்தமை நோக்கற்பாலது.

இந்த ஆறு திருமுகங்களிலுள்ள நெற்றிக் கண்களினின்றும் ஆறு செந்தீப் பொறிகள் தோன்றி, அவை யாறும், விண்ணிலும், காற்றிலும், தீயிலும், நீரிலும், மண்ணிலும் விரவித் தங்கிய புராண கதையின் தத்துவமும், மேலே குறித்தவாறு இறைவனை யாண்டும் பேரொளி யுருவினனாகத் தரிசிக்கும் வாய்மையினை விளக்கும். முருகன் இறைவனது கிழக்குதெற்கு மேற்கு வடக்கு மேல்கீழ் திசைகளை நிரலே நோக்கிய ஈசானம், தற்புருடம், அகோரம், சத்தியோசாதம், வாமதேவம், அதோமுகம், ஆகிய முகம் ஆறும் உடையான். ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம், ஆகிய இந்த ஐந்து முகங் களும் சிகராதித் திருவைந் தெழுத்தில் உள்ள 5 எழுத்துக்களையும் மந்திரவித் தெழுத்தாக (அதாவது, பீஜாக்ஷரமாக) உடையன. 6-ஆவ தாகிய இந்த அதோமுகமானது, ஓம் என்னும் பிரணவ மந்திர சொருபமாயுள்ளது. சொல்லும் பொருளுமாயுள்ள இரு கூ உலகங்கட்கெல்லாம் மூலமாயுள்ளது இந்த ஓங் காரமாகிய பிரணவ மந்திரமேயாகும். இதனைத் திருமூலர் எவ்வாறு கூறுகிறார் பாருங்கள்:—

"அதோமுகங் கீழண்ட மான புராணன்
அதோமுகந் தன்னெடும் எங்கு முயலுஞ்
சதோமுகத் தொண்மலர்க் கண்ணிப் பிரானும்
அதோமுகன் ஊழித் தலைவனும் ஆமே"

சதோமுகம் என்றது, சத்து ஓம் முகம்—சத்து= உள்ளது.

"முகத்தில் ஒன்றதாய் அவ்வெழுத்
துடையதோர் முருகன்"
"ஒமெனப்படும் குடிலையே ஒப்பிலா முருகன்
மாமுகத்துள் ஒன்ரும்"

என்னும் திருவாக்கும் ஈண்டுச் சிந்திக்கத் தக்கது. சிவபெருமான் அதோ முகங்கொண்டு தோற்றி யருளிய முருகப் பெருமான் உருவமே 'ஓங்காரத்தின் உள்ளொளி' என்பதை அருண கிரியாரும் கந்தரலங்காரத்தில் பாடியுள்ளனர். இதுவே அதோமுக தரிசனம். இவற்ருல், எல்லாவற்றுக்கும் தாரகமாயுள்ள ஓங்காரமான தாரகமந்திரத்தை முதலிற் கொண்டுள்ள திருவைந்தெழுத்தே அதோமுக தரிசனம் என்பது புலனும். அஃது அவ்விறைவனை மந்திர வடிவின ணுகத் தியானிக்கும் முறைமையாகும்.

சூரபன்மன் என்பவன் அசுரன். அசுரன் என்றது ஆணவமல இருளை. அசுரன் உயிரினங்களுக்கெல்லாம் பகைவன். அவனை ஒடுக்க வேண்டி இறைவனிடம் தேவர்கள் முறையிட்டனர். தற்பரசிவம் அதோமுகம் கொண்டு,ஆறுமுகவனை வெளிப்படுத்தி 'அவ்வசுரனைக்கொல்' என்று ஏவினுன். இதைத் திருமூலர் கூறுகிருர்:-

"எம்பெரு மான்!இறை வா!முறை யோ!என்று
வம்பவிழ் வானேர் அசுரன் வலிசொல்ல
'அம்பவள மேனி அறுமுகன்! போயவர்
தம்பகை கொல்' என்ற தற்பரன் தானே"

இங்கு முருகனை 'அம்பவள மேனி அறுமுகன்' என்று அழகாகக் கூறுகிருர் திருமூலர். பவளம் போற் சிவந்த அழகிய மேனியை உடையவன் அறுமுகன். ஆறுமுகக் கடவுளே அதோமுக தரிசனம் என்பதை நாம் உணர்தல் வேண்டும். இந்த அதோமுக தரிசனம் என்னும் அதிகாரத்தில் உபதேசிக்கப் பட்டுள்ள தத்துவப் பொருளை விளக்குதற் கெழுந்த நூலே கந்த புராணம் ஆகும். அறுமுகக் கடவுளின் அவதாரத்தால் மறை முகமாய் அதோமுகமாய் நின்ற பரம் பொருளின் தன்மையை அனைவரும் எளிதில் தரிசிக்கும் வண்ணம் விளக்குவது கந்தபுராணமாகும்.

இனி, இவ்வாறின்றி, அதோமுகம் என்பதைப் பிரகிருதிமாயை எனக் கொண்டு, சிவசத்தி யாகிய மாயையின் மேல்முகம் விந்து, நடுப்பாகம் மான், கீழ்ப்பாகம் மோகினி (அதோமுகமாயை) என்னப்படுவதின்றி வேறின்மையால் அதோமுக மாயையிலும் உருக்கொண்டு சகலராகிய ஆன்மாக்களுக்கு அருள்புரிவான் ஈசன் என்பது அதோமுகதரிசனம் என்ப தன்கருத்து எனக் கூறுவாரும் உளர். அதோமாயைக்கும் அதோமுகத்திற்கும் யாதொரு இயைபும் இல்லை. ஆயினும் அவ்வாறு கூறுவர். இது பொருந்துமாறில்லை.

ஆனல், திருமூலர் ஒரு தலைசிறந்த யோகியாதலால், யோக நிலைகளையும், முறைகளையும் குறிப்பதாகவே செய்யுள் இயற்றுதல், அவருக்கு வழக்கம். அதேபோல் இங்கும் கூறுகின்ருர். யோகியின் பார்வை ஊர்த்துவ முகமாய் புருவத்தின் மையத்தை உற்று நோக்காது, அதோமுகமாக உள்முகமாய்க் கீழே நோக்கி நூறு இதழ்களைக் கொண்ட தாமரையாய் விரிந்த இதய கமலத்தில் அந்தமில் சக்தியை அளிக்க வல்ல அதோமுக மந்திரமாகிய ஓங்காரத் திருவைந்தெழுத்து மந்திரத்தை உருவெழுதித் தியானிக்க, இறைவன் அங்கே அதோமுக தரிசனம் அளிப்பன் என்று பாடுகிருர்.

"அதோமுக மாமல ராயது கேண்மின்
அதோமுகத் தாலொரு நூருய் விரிந்து
அதோமுக மாகிய அந்தமில் சத்தி
அதோமுக மாகி அமர்ந்திருந் தானே"

இப் பாடலில் முருகன் சரவணப் பொய்கையில் தாமரை மலர்மேல் வீற்றிருந்த கோலத்தை அழகுறச் சித்திரிக்கிருர் திருமூலர். சிவனது அதோ முகத்து அருட் பெருங் குணத்தால் நூறு இதழ் கொண்ட பெரிய தாமரை மலராக அவ்வதோமுகமே விரிந்து கொடுக்கவும், அம்மலர் மேல் எல்லையில்லாத சத்தி மயமாகிய அதோமுகக் கடவுளாகிய முருகன் அதோமுகம் ஆகி, அதாவது, ஆறுமுகங் கொண்டு அமர்ந்திருந்தான் என்று கூறுகிறது இப் பாடல். சரவணப் பூம் பள்ளியறையின் திருவோலக்கக் காட்சியே அதோமுக தரிசனம் என்பது இங்கே நன்கு புலனுகா நிற்கும்.

ஏறுமயி லேறிவிளை யாடுமுகம் ஒன்று
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்று

கூறுமடி யார்கள்வினை தீர்த்தமுகம் ஒன்று
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்று

மாறுபடு சூரரை வதைத்தமுகம் ஒன்று
வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்று

ஆறுமுக மானபொருள் நீயருள வேண்டும்
ஆதிஅருணு சலத்தில் அமர்ந்த பெருமாளே.

ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

திரு. K. பட்சிராஜன், B.A., B.L., திருநெல்வேலி.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

நம்பிகள் சேரபாண்டியனில் நம்பெருமாளை வணங்கி நிற்கும் காலத்தில் இளையாழ்வாரும் (உடையவரும்) நம்பி திருவடிகளிலே தண்டனிட்டார். "இருவரும் திருமால் முன்னே எழில்பெற நின்றவேலை,"

"பெருமான் நம்பி முகநோக்கிப்
பேதமில்லாய் இவனுக்(கு) இங்கு
அருமா மறையின்முடி வுரைக்கும்
சரமச்லோகம் அருளென்றான்"

நம்பியும் பெருமாளை நோக்கி இவ்வர்த்தம் சொல்வதற்கு, சில நியதிகள் தேவரீரே நியமித்திருக்க வில்லையோ என்று வினவ நம் பெருமாளும் "நமக்காவாரை நாமே தேடிக்கொள்ளுகிறோம். நம்பீ! நம்மிராமாநுசன் பக்கல் சிஷ்ய லக்ஷண பூர்த்தி உண்டாகையாலே நீர் சொல்லில் குறைவு நேரிடாது" என்று அருளிச் செய்தார். நம்பிகளும் தேவரீர் ஸ்வதந்திரர். எது வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால்,

"எந்தன் நாக்குப்புரளாது என்
நினைவின்படியே நைவு பிறந்தன்றி"

என்று கூறி உடையவரை நோக்கி நீர் நம்மூரே வாரும் என அருளிச் செய்து திருக்கோட்டியூர் சென்று விட்டார்.

இங்ஙனம் எழுந்தருளிய நம்பிகள், அழகிய மணவாளனை மங்களாசாஸனம் பண்ணக் கோயிலுக்கு எழுந்தருள, அங்கே உடையவர் இவரைக் கண்டு தண்டம் சமர்ப்பித்தார். இருவரும் சென்று பெரிய பெருமாளைச் சேவித்து நின்றனர். அப்போது பெருமாள் நம்பியை அருளப்பாடிட்டு, தீர்த்தம் சடகோபனையும் பிரஸாதித்து அவரை நோக்கி "நம் இராமாநுசனுக்கு ரஹஸ்யார்த்த விசேஷங்களை உபதேசியும்" என்று நியமித்தருளினர்.

நம்பியும் "எம்பெருமானே! அதிகார பூர்த்தியுடையவருக்கேயன்றோ இவ்வர்த்தங்களைக் கூற வேண்டும் எனத் தேவரீரே நியமிக்கவில்லையா?" என்று விண்ணப்பிக்க பெருமாளும் "நம் இராமாநுசன் சிஷ்ய இலக்கணம் யாவும் நிரம்பப் பெற்றவன்தான்" என்று பதிலிறுத்தார். நம்பியும் ஒன்றும் கூறாது உடையவரை நோக்கி "எல்லாம் நம்மூரே வாரும்" என்று சொல்லித் திருக் கோட்டியூருக்கு எழுந்தருளினர். உடையவரும் நம்பியுடனே சென்றார்.

சென்ற மறுநாள் உடையவர் நம்பிகள் திருவடிகளிலே ஆறுமாதமாக தண்டனிட்டு நிற்க அவரும் "இன்று போய் மற்றொருநாள் வாரும்" என்று கூறி அனுப்பிவிட்டார். இப்படியே பதினேழுதடவை, உடையவர் நம்பியின் திருமாளிகைக்குச் செல்வதும் வருவதுமாயிருந்தது. இவ் ஆறு மாதமும் உடையவர் மாதூகரம் (பிக்ஷையேந்தி) பண்ணி வாழ்ந்து வந்தார். அவ்வாறு மாதூகரம் பண்ண வரும் போதெல்லாம், மிகவும் ஈடுபாட்டோடு திருப்பாவையை அநு சந்திப்பது வழக்கம். ஒரு நாள், உடையவர் இவ்வித அநுசந்தானத்துடன் மாதூகரம் பண்ணிச் செல்லும் போது நம்பியின் திருமாளிகை கிட்ட, தற்செயலாக அப் போதைய அநுசந்தானம் "உந்துமத களிற்றன்" என்ற பாசுரமாயிருந்தது. உடையவர் பாசுரத்தில் "செந்தாமரைக் கையால் சீரார் வளையொலிப்ப, வந்து திறவாய் மகிழ்ந்

தேலோரெம்பாவாய்" என்ற அடிகளை உணர்ச்சியோடு சேவித்து முடிக்கவும், மாளிகையில் சாத்தியிருந்த கதவை, தன்னுடைய அங்கை யொலிப்பப் பந்தாடிக் கொண்டிருந்த, நம்பிகளின் திருமகளார் தேவகி பந்தும் கையுமாகத் திறந்து வெளிவரவும் ஒத்து இருந்தது. வளையொலியும், கதவுதிறப்பொலியும் உணர்ச்சி மிகுதியிலே இருந்த உடையவரைத் தட்டியெழுப்ப அவரும் ஒலிவந்த திசை நோக்கித் திரும்பி, வாசலிலேநின்ற நம்பி குமாரத்தியான தேவகியைக் கண்டார்.

அவர் கண்களுக்கு அவள் தேவகியாகவே படவில்லை. அவளை நப்பின்னையாகவே கண்டார். பின்னைப் பிராட்டி தம் பஞ்சுத் திருவடிகள் பாரில் படிய அடிபெயர்த்து வந்து தம் மெல்விரல்கள் சிவப்பெய்தத் தாள் திறப்பதே! என்று அவள் எளிமையை எண்ணி மகிழ்ச்சியினல் மேனி புளகமெய்தித் தம்முடைய பொன்னொத்த திருமேனி புழுதியிலே புரள இருந்து தண்டம் சமர்ப்பித்துக் கிடந்தார். ஒரு துறவி தன்னைக்கண்டு அடி வீழ்ந்து வணங்கக்கண்ட தேவகி மனம் பதறி, பரபரப்போடு உள்ளே ஓடினள். நம்பி முன்னே கையைப் பிசைந்து நின்றாள். அவள் கலக்கத்தைக்கண்ட நம்பி என்ன நடந்தது என்று கேட்டார். தேவகி நாக்குழற, "அந்த மாதுகரத்துக்கு எழுந்தருளும் சந்நியாசி இன்று நம் வாசல் வருகையில் கதவைத் திறவாய் என்றார். நான் திறந்ததும் என்னை ஏறப்பார்த்து மோகித்துத் தரையில் வீழ்ந்து கிடக்கிறார்" என்று விம்மலும் பொருமலுமாகக் கூறினள். அவருக்கு விஷயம் சட்டென விளங்கியது. நேரே தலைவாயில் வந்து அங்கே கீழே கிடந்த உடையவர் நிலையைக்கண்டார். அவரை வாரியெடுத்துத் தம்மோடு அணைத்து "உந்துமத களிற்றன் பாசுரத்தை அநுசந்தித்து வந்தீரோ! திருப்பாவை ஜீயரே! என்று அவர் கேட்டார். அவர் 'ஆம்' என்ன, நம்பிகள் உடையவருடைய அத்யவசாயம்" (உறுதிப் பாடு) கண்டு வியந்து அவர் உள்ளக் கிடக்கையைத் தம் மகளுக்கு உணர உணர்த்தி அவரைப்பற்றி அவள் தவருக எண்ணியதற்கு மன்னிப்புக் கோருமாறு கூற அவளும் தன் "பெரிய பேதைமைச் சின்மதிப் பெண்மை"க்கு மிக நொந்து உடையவர் திருவடிகளிலே வீழ்ந்து அவர் மன்னிப்பைப் பெற்றாள்.

இவ்விதம் நம்பிகளின் திருவுள்ளத்தை எதிர்பார்த்தே மாதங்கள் ஆறு கழிந்துவிட்டன. இராமானுசர் மீண்டும் நம்பிகளைத் தண்டனிட்டு நின்றார். நம்பிகள் அவரை நோக்கி நீர் இப்போது கோயிலுக்குப் போய் மற்றுமொரு நாள் வாரும் என்று கூறி விட்டார். உடையவரும் கண்ணீரும் கம்பலையுமாகக் கோயிலுக்கு எழுந்தருளினர்.

சிலகாலம் செல்ல, திருக்கோட்டியூரினின்றும் திருக்கோட்டியூர் நம்பி திருவடி சம்பந்தி (சிஷ்யர்) ஒருவர், திருவரங்கம் வந்து நம் பெருமாளை சேவித்து மீளுகிறவர், உடையவர் திருமடத்தே வந்து அவரைத் தண்டனிட்டு நின்றார். உடையவரும் தம்முடைய உள்ளக் கிடக்கைகளை யெல்லாம் கூறி நம்பிகள் பக்கலிலே அவை ஈடேருது நிற்பதில் தமக்குள்ள மனவருத்தத்தையும் விவரித்து "பொன்னுழிக்கையார் கடிப் பூந்துழாய் முடியார்க்கு இங்கு, என்னுவி ஈடழித்தல் தகவல்ல வென்றியம்பீர்" என்று நம்பிகளிடம் அடியேன் நிலையை கிருபைகூர்ந்து விண்ணப்பிக்கவேண்டுமென்று வேண்டி விடையளித்தார். அந்த ஸ்ரீ வைஷ்ணவரும் நம்பிகளிடம் இச்செய்தியை விண்ணப்பம் செய்தார். நம்பிகளும் 'இராமாநுசன் ஆர்வ மிகுதியை உணர்ந்தோம். ஆகிலும் ஒன்றையும் உண்ணுமல் ஒருமாதகாலம் பட்டினி விட்டுப் பின் மீண்டும் பவித்ரமும் தண்டுமாய் அவர் ஒருவரைமாத்திரம் வரச்சொல்லும்' என்று அந்த ஸ்ரீ வைஷ்ணவரையே கோயிலுக் கனுப்பினர். அவரும் அரங்கம் சென்று உடையவரிடம் அறிவிக்க அவரும் கோட்டியூர் எழுந்தருளி நம்பியைத் தண்டனிட்டுத் தம் உபவாசத்தைத் தொடங்கி ஸௌம்ய நாராயணன் சன்னிதியிலே எழுந்தருளியிருந்தார். பட்டினியால் அவருடைய அழகிய திருமேனி வாடியது. நாள் பதினறு கழிந்தது. அவர் தம் கைகால்களை அசைக்கவும் சக்தியற்று, இட்டகால் இட்ட கையராய்க்கிடந்தார்.

"எட்டினே டெட்டும் சென்றுங்
கிசைந்தபின் அடுத்த நாளில்
பட்டினி மோகத் தாலே
பரமசாத் திகற்குச் சீவன்
விட்டது போல மூச்சும்
மெய்யுற அடங்கக் கண்டார்"

கெட்டது திருமால் மார்க்கம்
கெடுத்தனன் நம்பி!''

என்று ஸ்ரீ வைஷ்ணவர்கள் "நம்பி வைத்திருக்கிற பத்தியத்தைப் பார்க்கில் இனி இவ் வைஷ்ணவ மார்க்கம் அடங்கிவிடும் போலே காண்கிறதே!'' என்று ஒருவருக் கொருவர் பேசிக் கொண்டனர். இதனை முன்பே இடையாளாக இருந்து உடையவரைக் கொணர்ந்த ஸ்ரீ வைஷ்ணவர் கேட்டு வெகு விரைவிலே ஓடி வந்தார். உடையவர் கிடக்கையைக் கண்டார். மனம் தாளாமல் வாயிலும் வயிற்றிலும் அறைந்து கொண்டு நேரே நம்பியிடம் சென்று உடையவர் நிலையைக் கூறி இப்படி இவரைச் சோதித்து ஈடழிக்கலாமா? என்று விண்ணப்பித்தார். நம்பிகளோ ஒரு வித மனச் சஞ்சலமு மற்றவராய் அந்த ஸ்ரீ வைஷ்ணவரைப் பார்த்து, "நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள். அந்த இராமாநுசர் இங்கிருக்கப் பெற்றுராகில் அறிய வேண்டுவன வற்றை இவ்விடத்தே அறிந்து கொள்ளாதொழியார். அப்படிக் கின்றி மேல்வீடு எழுந்தருளுவாராகில் அங்கே ஸ்ரீஆளவந்தாரிடத்தில் அறிந்து கொள்ளாது போகார். அவர் ப்ரபன்னன். ப்ரபன்னனுக்கு உபய விபூதியிலும் நயமே யன்றிப் பயம் ஒருகாலும் நேருடாது காணும்'' என்று சாவதானமாக அருளிச் செய்தார்.

உடையவர் துணிவையும் நம்பியின் மனோதிடத்தையும் உன்னி,

"என்ருன் நம்பி தேசிகனும்.
இலங்கு நீதிக் குருமானும்
அன்ருங் கவர்கள் இருவருமே
அல்லா திந்த அம்புவியில்

நின்ருர் மேலோர் பலரெனினும்
நிகரி லாமற் றிவர்க்கிணையாய்க்
கன்ருல் கனிகொண் டவன்ஆணை!
காணேன்! காணேன்! காணேனே!''

என்று வியக்கிருர் வடிவழகிய நம்பிதாஸர்.

கேட்ட ஸ்ரீ வைஷ்ணவருக்கு ஒன்றுமே ஓடவில்லை. அவர்உள்ளம் இராமாநுசரின் செயலற்ற நிலையையே உன்னி உருகியது. நம்பியிடமோ ஒன்றும் பேச இயலாது. அப்படியே விட்டுவிடவும் மனம் துணியவில்லை. நம்பிகள் திருவடிகளிலே விழுந்தார். "இன்று தொடங்கி ஒரு சிருங்கை தீர்த்தமாவது உட்கொள்ளும்படி நியமானமாக வேணுமென்று பிரார்த்தித்தார். நம்பியும் உடையவர் நலத்திலே அவர்க் குண்டான பரிவை உள்ளத்தே வியந்து, அவ்விதம் செய்து கொள்ளும்படி அநுமதி அளித்தார். பெருப்பேறு பெற்றது போல மகிழ்ந்த அந்த ஸ்ரீ வைஷ்ணவர் நேரே ஸௌம்ய நாராயணன் சன்னதிவந்து பெருமாள் ஸ்ரீ பாத தீர்த்தத்திலே ஒரு சிருங்கை கொணர்ந்து உடையவருக்குப் புகட்டினுர். இவ்விதமே மற்றை நாட்களிலும் நடந்து உபவாசமும் முற்றுப் பெற்றது.

உடையவரும் முதலியாண்டானுேடும் கூரத்தாழ்வானையும் கூட்டிக்கொண்டு மெல்ல மெல்ல எழுந்தருளி நம்பிகளைத் தண்டனிட்டுக் கிடந்தார். நம்பியும் இவரை மெல்ல எடுத்து "நாம் உம் ஒருவரையுமே வரச் சொல்லியிருக்க இன்னும் இருவரைக் கூட்டி வந்திருக்கிறீரே'' என்று வினவினுர். இவரும் 'ஸ்வாமீ! தேவரீர் தண்டும் பவித்திரமுமாக வரும்படி கட்டளை யிட்டிருந்தீர். அதன் படியே அடியேனுக்குத் தண்டும் பவித்திரமுமான இவர்களிருவரையும் கூட்டிவந்தேன்'' என்று விண்ணப்பித்தார். நம்பியும் அவர்பதிலை உகந்து "இவர்களில் யார் பவித்திரம்? யார் தண்டு''? என்று கேட்டார். உடையவர் முதலியாண்டானைச் சுட்டி "இவர் திரிதண்டம்'' என்றும், கூரத்தாழ்வானைக் காட்டி "இவர் பவித்ரம்'' என்றும் விண்ணப்பித்தார். நம்பிகள் அவர்களையும் ஏற்று உடையவரை நோக்கி "சரி. இப்போது நாம் கூறப் போகும் வார்த்தைகளை இவர்களை யொழிய மற்றவர்களுக்குச் சொல்லாமல் கொள்ளும்'' என்று நியமித்து, தம்முடைய கருணையெல்லாம் நன்கு தோன்ற உடையவரை வலப்புறத்திலே வைத்துக் கொண்டு, முமூட்சு (வீடுபேறுற்றவர்)க்களால் எப்போதும் தியானம் செய்யப் படுவதும், பிரணவத்தை முதலிலும், நம என்பதை இடையிலும் நாராயண பதத்தை ஈற்றிலும் கொண்ட மூன்று பதங்களை யுடைய தாய் எட்டுத் திருவெழுத்தால் அமைந்ததும் "காமம் யாவையும் தருவதும் அப்பதங்கடந்தாற் சேம வீடு செய்வதும்'' ஆன "நலம் தரும் சொல்'' என்கிற பெரிய திருமந்திரார்த்தத்தையும் மற்றும் சரம சுலோக அர்த்தத்தையும் சுருக்கமாக அருளிச் செய்தார். இவரும் பசியன் சோற்றைக் கண்டாற் போலே அநுபவித்து மகிழ்ந்தார்.

(தொடரும்)

திருவொற்றியூர்க் கல்வெட்டு வரலாறு

வித்துவான். திரு. வை. சுந்தரேச வாண்டையார், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

தலத்தைப் பற்றிய பொதுச் செய்தி

திருவொற்றியூர்—இது தொண்டை நாட்டுத் தேவாரம் பெற்ற தலங்களுள் ஒன்று. திருவொற்றியூர் இரயில்வே நிலையத்துக்குக் கிழக்கே அரைக்கால் மைல் தூரத்திலிருக்கிறது. ஒரு காலத்தில் தலங்கள் உள்பட எல்லா ஊர்களுக்கும் இறை (Revenue tax) விதித்து அரசன் சுற்றோலை அனுப்பினான். அது பொழுது அவனுக்கும் ஓலை நாயகத்திற்கும் தெரியாதபடி வரிபிளந்து 'இவ்வாணை ஒற்றியூர் நீங்கலாகக் கொள்க' என்று அவ்வோலையில் எழுதப்பட்டிருந்ததை வியந்து அவ்வூர்க்கு ஒற்றியூர் (விலக்கு அளிக்கப்பட்ட ஊர்) என்றும், பெருமானுக்கு எழுத்தறியும் பெருமான் என்றும் பெயர் ஆயிற்று. "ஏட்டு வரியில் ஒற்றியூர் நீங்கல் என்ன எழுத்தறியும் நாட்டம் மலரும் திருநுதலார்" என்னும் பெரிய புராணச் செய்யுளும் காண்க. இறைவரின் திருப்பெயர் படம்பக்க நாதர். உபமன்யு முனிவரிடத்துச் சிவதீட்சை பெற்றுத் தம்மை வழிபட்ட வாசுகியை இறைவர் தம் திருமேனியில் ஐக்கியம் செய்து கொண்டமையால் இப்பெயர் பெற்றார். அப்பாம்பின் வடிவத்தை இறைவர் தம் திருமேனியில் இன்றும் காணலாம். தியாகேசர் என்னும் வேறு பெயரும் இறைவர்க்கு உண்டு. அரசனுக்குக் கொடுக்கும் பொருட்டுத் தம்மிடம் நிறைந்த அன்புடைய ஏலேல சிங்கருக்கு மாணிக்கம் கொடுத்தருளியமையால் இப்பெயர் பெற்றார். இவைகளன்றி ஆதி புரீஸ்வரர், புற்றிடங்கொண்டார் என்னும் பெயர்களும்உண்டு. இறைவியாரின் திருப்பெயர்—வடிவுடையம்மையார். தலத்துக்கு உரிய மரம்—மகிழமரம், தீர்த்தம்—பிரம தீர்த்தம். பிடாரியாரின் திருப்பெயர்—வட்டப்பாறை அம்மை. மக்கள் இவரைச் சிறப்பாக வழிபட்டு வருகின்றனர். நந்திதேவர். திருமால். பிரமதேவர், வான்மீகி முனிவர், சந்திரன் முதலானோர் வழிபட்டுப் பேறு பெற்றனர். சுந்தர மூர்த்தி நாயனார் இங்கு எழுந்தருளி, ஞாயிறுகிழாரின் மகளாய்த் தோன்றிய சங்கிலியார்க்கு மகிழ மரத்தடியில் சத்தியஞ் செய்து கொடுத்த வரலாற்றை முன்னிட்டு இக் கோயிலில் மாசி மகத்தில் மகிழடித் திருவிழா மிகச் சிறப்பாக ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது. தைலவினைத் தொழில் மரபினராகிய கலிய நாயனார் அவதரித்து, கோயிலின் உள்ளும் புறமும், திருவிளக்கு எரித்து வரும் திருத்தொண்டை, வறுமைக் காலத்தும் விடாது நடத்தி வந்தும் ஒரு நாள் முட்டுப்பட அது காரணமாகத் தம் கழுத்தை அரிந்து கொள்ளத் தொடங்கினபோது இறைவன் தடுத்து அருள் செய்ததும் இப்பதியாகும். "பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப் போல் யாரும் துறக்கல் அரிது அரிது" என்று தாயுமானவரால் பாராட்டப் பெற்ற பட்டினத்துப் பிள்ளையார் பேறு பெற்றதும் இப்பதியிலே தான். இத்தலத்திற்கு ஞான சம்பந்தர் பதிகம் ஒன்று, திருநாவுக்கரசர் பதிகங்கள் ஐந்து, சுந்தரர் பதிகங்கள் இரண்டு ஆக எட்டுப் பதிகங்கள் இருக்கின்றன.

கல்வெட்டு வரலாறு

இவ்வூர்க் கோயிலில் சோழ மன்னர்களுள் மதுரை கொண்ட கோப்பரகேசரி வர்மன், உத்தம சோழன், முதலாம் இராசராச சோழன், முதலாம் இராசேந்திர சோழன், முதலாம் இராசாதிராச சோழன், முதற் குலோத்துங்க சோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசாதிராசன், மூன்றாம் குலோத்துங்கன் முதலானோர் காலங்களிலும் , கங்க பல்

லவர்களில் விஜய அபராஜித போத்தரையன், கோவிஜய நிருப துங்கவர்மன், கோ விஜய கம்பவர்மன், இவர்கள் காலங்களிலும், பாண்டிய மன்னரில் திரிபுவனச் சக்கரவர்த்தி சுந்தர பாண்டி தேவர் காலத்திலும், இராஷ்டிர கூட மன்னரில் கச்சியும் தஞ்சையும் கொண்ட கன்னரதேவர் காலத்திலும் விசய நகர வேந்தர்களில் சாயண்ண உடையார், தேவராய மகா ராஜா குமாரர் புக்கண்ண உடையார், வீரப்பிரதாப தேவ மகாராயர் முதலானோர் காலங்களிலும், சம்புவராய மன்னரில் சகலபுவனச் சக்கரவர்த்தி இராச நாராயண சம்புவராயர் காலத்திலும், சாளுவமன்னரில் நரசிங்க தேவர் காலத்திலும், யாதவ மன்னரில், திரிபுவனச் சக்கரவர்த்தி ஸ்ரீ ரெங்கநாதர் காலத்திலும், பொறிக்கப் பெற்ற கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

இறைவரின் திருப்பெயர்

இக்கோயில் கல்வெட்டுக்களில் இறைவர் மகாதேவ பட்டாரர், திருஒற்றியூர் மகாதேவர், ஒற்றியூர் ஆழ்வார், திருஒற்றியூருடைய நாயனுர், படம்பக்க நாயக தேவர், திருவொற்றியூருடைய தம்பிரானுர், என்னும் பெயர்களால் குறிக்கப் பெற்றுள்ளனர். இவைகளுள் படம்பக்கநாயக தேவர் என்னும் பெயர் திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ இராசாதிராச தேவரின் ஒன்பதாம் ஆண்டுக் கல்வெட்டிலும், மகாதேவ பட்டாரர் என்னும் பெயர் தெள்ளாறெறிந்த நந்தி போத்தரையன் கல்வெட்டிலும், திருவொற்றியூர் ஆழ்வார் என்னும் பெயர் உத்தம சோழன் கல் வெட்டிலும், காணப்படுகின்றன.

திருவிழா

இத் திருக்கோயிலில் பங்குனி உத்திரத் திருவிழாவும், ஆனித் திருவிழாவும், மாசி மக விழாவும் மிகச் சிறப்பாக நடைபெற்று வந்தன. பங்குனி உத்திரத் திருவிழாவின் ஆரும் நாளில் படம்பக்க நாயக தேவரைத் திரு மகிழ மரத்தின் கீழ்த் திருவோலக்கஞ் செய்தருளுவித்து ஆளுடைய நம்பியின் ஸ்ரீ புராணத்தைக் கேட்டருளச் செய்வது வழக்கம். ஆனித் திருவிழாவின் ஆரும் நாளில் மூன்ருங்குலோத்துங்க சோழன் இக் கோயிலிலுள்ள இராசராசன் திருமண்டபத்தில் திருவோலக்கஞ் செய்தருளி விநோதம் கொண்டருளினுன் என்று அம் மன்னனது 19 ஆம் ஆண்டுக் கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ளது. மாசி மக விழாவின் பொருட்டுச் சிறுவப்பேடாகிய மும்முடிச் சோழ நல்லூர்ப் புரவு வரித் திணைக்களத்துக் கணக்காளன் நிவந்தம் அளித்திருந்தான். இந் நிவந்தம் அளிக்கப் பெற்ற காலம் மூன்ருங் குலோத்துங்க சோழ தேவரின் முப்பத் தொன்ருவது ஆண்டாகும்.

மண்டபங்கள்

இக் கோயிலில் இராசராசன் மண்டபம் என்னும் பெயருடைய மண்டபம் ஒன்று இருந்தது. அம் மண்டபத்தில் இருந்து கோயில் காரியங்களை ஆராய்ந்து வந்தனர். இது முதலாம் இராசராசன் காலத்தில் ஏற்பட்டதாகும்.

குலோத்துங்க சோழன் மண்டபம்

இதுவும் கோயிலுக்குள் இருந்த மண்டபம் ஆகும். இதில் நாடோறும் ஐம்பது அடியார்களுக்கு அன்னம் அளிக்கப் பெற்று வந்தது. இதன் பொருட்டுப் பையூர்க் கோட்டத்து அரசுருக்கு அருகிலுள்ள பவனம் பாக்கத்துக்கு எழுத்தறிவார் நல்லூர் என்னும் பெயரை இட்டு அதில் ஒரு பகுதியை அன்னம் அளிப்பதற்கு முதற் குலோத்துங்க சோழன் அளித்திருந்தான். இந்த ஏற்பாட்டை முதற் குலோத்துங்க சோழன் தன் தலைநகராகிய கங்கை கொண்ட சோழ புரத்திலிருந்து செய்தருளினுன். இம் மண்டபம் முதற் குலோத்துங்க சோழன் காலத்தில் கட்டப்பெற்றதாகும்.

வியாகரண தான வியாக்கியான மண்டபம்

இதுவும் கோயிலுக்குள் இருந்த மண்டபம் ஆகும். இது சித்தரசன் பொருட்டுத் துர்க்கை யாண்டி நாயக்கனுல் கட்டப் பட்டது. இம் மண்டபத்துப் பரிபாலனத்தின் பொருட்டு இவனே குளத்தூராகிய குலோத்துங்க சோழன் காவனூரைக் கொடுத்துள்ளான்.

மண்ணைக் கொண்ட சோழன்

இப்பெயருள்ள மண்டபம் ஒன்று இக்கோயிலில் இருந்தது. வளவன் மூவேந்தவேளார் என்னும் இரண்டு அதிகாரிகள் இம் மண்டபத்

திலிருந்து கோயில் சம்பந்தமான ஒரு வழக்கை விசாரித்ததாக முதலாம் இராசாதிராச தேவரின் 26-ஆம் ஆண்டுக் கல்வெட்டு அறிவிக்கின்றது.

திருமடங்கள்—திருஞான சம்பந்தர் திருமடம். இது விஜய கண்ட கோபால தேவன் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது. இவ்வூரில் சதுரானன பண்டிதர்க்குத் திருமடம் ஒன்று இருந்தது. அதற்குத் திருமயான மடம் என்று பெயர் வைக்கப் பெற்றிருந்தது. இச் செய்தி முதலாம் இராசேந்திர சோழ தேவரின் 31 ஆம் ஆண்டுக் கல் வெட்டில் குறிக்கப் பெற்றுள்ளது.

குலோத்துங்க சோழன் மடம்

இது கோயிலுக்குள் இருந்தது. இச்செய்தி முதற் குலோத்துங்க சோழன் கல்வெட்டில் குறிக்கப் பெற்றுள்ளது.

இராசேந்திர சோழன் மடம்

ஆரிய தேசத்து மேகலா புரத்து பிராமணி நாகலவைச் சானியான ஆரிய அம்மையாரால் கட்டப் பட்டது. இம் மடத்திற்கு மடப்புறமாக இவ்வம்மையார் நிலம் வாங்கி விட்டிருந்தனர்.

அங்கராயன் மடம்:—இது விசயநகர வேந்தர் இரண்டாம் ஹரிஹரரின் காலத்துக் கல்வெட்டில் குறிக்கப் பெற்றுள்ளது.

வெளிப் பிராகாரம் கட்டியவர்

ஆதி மங்கலத்து ஆட்கொண்ட நாயகனை சேதிராயர் இப்பிராகாரத்தைக் கட்டியவர் ஆவர். இது கட்டி முடிந்தது மூன்றாங் குலோத்துங்க சோழ தேவர் காலத்தில் ஆகும்.

பொதுச் செய்திகள்

கோயிலுக்கு நெய் கொண்டு வந்து அளந்தவர்கள் அருமொழித்தேவன் நாழியால் அளந்து வந்தனர். எனவே இக் கோயிலில் வழங்கி வந்த அளவு கருவி அருமொழித்தேவன் என்னும் பெயர் பெற்றிருந்தது. படம் பக்க நாயகர் என்னும் இறைவர் திருப்பெயரைக் கோயில் நாயகம் செய்து வந்த ஒருவனுக்குப் படம் பக்க நாயக பட்டன் எனவும், திரிபுவன சுந்தரத்தெரு மன்றுடிகளில் ஒருவனுக்குப் படம் பக்கன் எனவும் இட்டு அழைக்கப் பெற்றிருந்தனர். எழுத்தறிவார் என்னும் திருப் பெயரை, பையூர்க் கோட்டத்தில் உள்ள அரசூர்க்கு அருகில் இருக்கும் பவனம் பாக்கத்திற்கு எழுத்தறிவார் நல்லூர் என்று வைக்கப் பெற்றிருந்தது. விசய நகர வேந்தனாகிய வீரப் பிரதாப தேவராயர் காலத்தில் அதாவது சகம் 1346 இல் புழல் நாட்டு மணலி என்னும் ஊரினர், ஒற்றியூருடைய நாயனார்க்கு உப்புத்தட்டு (Salt pan) ஒன்றைக் கொடுத்திருந்தனர். அதற்குப் படம் பக்க நாயகப் பேரளம் என்றும் பெயர் வைக்கப் பெற்றிருந்தது.

அரசர்களின் சிறப்புப் பெயர்கள் :—

உத்தம சோழர் சென்னி எறி படைச் சோழர் என்றும், முதற் குலோத்துங்க சோழன் ஜெயதரன் என்றும், மூன்றும் குலோத்துங்க சோழ தேவர், வீரராசேந்திர சோழ தேவர், உலகுய்ய வந்த பெருமாள், கோனேரின்மை கொண்டான் எனவும் இக்கோயில் கல் வெட்டுகளில் குறிக்கப் பெற்றுள்ளனர்.

முதலாம் இராசேந்திர சோழனின் பிறந்த நட்சத்திரம் மார்கழித் திருவாதிரையாகும். இச் செய்தி அம்மன்னனது 31 ஆம் ஆண்டுக் கல்வெட்டில் காணப்பெறும் "திருவொற்றியூருடைய மகாதேவர்க்கு இராஜேந்திரசோழன் திரு நாள் மார்கழித் திருவாதிரை நாளன்று நெய்யாடியருள வேண்டுமிடத்துக்கு திருவொற்றியூர் திருமயானமுடைய சதுரானன பண்டித தேவர் பண்டாரத்து வைத்த காசு நூற்றைம்பது"—என்னும் கல்வெட்டுப் பகுதியால் அறியக்கிடக்கின்றது. இக் கோயிலில் வீரராஜேந்திரன் திருப்பள்ளி யெழுச்சி, திரிபுவன வீர தேவன் சந்தி இவைகளுக்கு நிவந்தங்கள் அளிக்கப் பெற்றிருந்தன. இவைகளுள் திரிபுவன வீரதேவன் என்பது மூன்றாங் குலோத்துங்க சோழனுக்குரிய சிறப்புப் பெயராகும். அவன் பெயரால் ஏற்படுத்தப்பட்ட இச்சந்திக்கு குலோத்துங்க சோழ வள நாடான புலியூர்க் கோட்டத்தில் சிவபாத சேகர நல்லூராகிய குளப் பாக்கத்தில் நூறு வேலி நிலம் விடப்பட்டிருந்தது.

இவ்வூரில் சாலியர்கள் வசித்து வந்த தெருக்கள் ஜெயசிங்க குலகாலப் பெருந்தெரு

என்றும், இராஜராஜப் பெருந்தெரு என்றும், மன்றாடிகள் வசித்து வந்த தெருக்கள் திரிபுவனச் சுந்தரச் சேரி, திரிபுவன நகரத் தெரு என்றும் பெயர்கள் இட்டு வழங்கப் பட்டிருந்தன. மன்றாடிகள் என்பார் திருவிளக்குக் குடிகளாவர். இவர்கள் நுந்தாவிளக்கினுக்குவிடப் பட்ட சாவா மூவாப் பேராடுகளையோ அல்லது பசுக்களையோ பெற்று உரிய திட்டப்படி தவறாது நெய் அளப்போராவர். இங்கே உத்தம சோழ தேவர் காலத்தில் கவரிப்பிணாக்கள் இருபத்து நால்வரும் காளம் ஊதுபவர் எண்மரும் இருந்தனர். இக்கோயிலில் உள்ள கிரந்தக் கல்வெட்டுக்கள் இவ்வொற்றியூரை ஆதி புரி என்றும், இறைவரை ஆதிபுரீஸ்வரர் என்றும் கூறுகின்றன. கங்க பல்லவ வம்சத்து விஜய கம்பவர்மனின் 19 ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒற்றியூரில் நிரஞ்சன ஈஸ்வரமகா தேவர்க்கு நிரஞ்சன குரவரால் கோயில் கட்டப் பட்ட செய்தியை உணர்த்துகின்றது. சோழ நாட்டுத் தென்கரை நாட்டுப் பொய்யில் கூற்றத்துச் சிறுகுளத்தூருடையான் மாறன் செம்பியன் சோழ வரையன் சீட்புலியை யெறிந்து நெல்லூரை அழித்துத் திரும்பினவன் திருஒற்றியூர் மகா தேவர்க்குத் திருநுந்தாவிளக்கு எரிப்பதன் பொருட்டு 96 சாவா மூவாப்பேராடுகளை அளித்தான் என்பதை மதுரை கொண்ட கோப்பர கேசரிவர்மனின் 34-வது ஆண்டுக் கல்வெட்டு அறிவிக்கின்றது.

சதுரானன பண்டிதர், நிரஞ்சன குரவருடைய மாணவர் ஆவர். இப்பண்டிதர் இராசேந்திர சோழன் காலத்தில் இருந்தவர். இவர் மேற்பார்வையில் பல திருப்பணிகள் இக்கோயிலில் நடைபெற்றன. இக் கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டு பிள்ளைசுப்பிரமணியர், திருவட்டப்பிறை, பிடாரியார், காரானை விடங்கதேவர் படம் பக்க தேவர், க்ஷேத்திர பால தேவர், சூரியர், அறிஞ்சீஸ்வரமுடையார், கம்பீஸ்வமுடையார், விடேல்விடுகு ஈஸ்வரர், துர்க்கையார், அனுக்கப்பிள்ளையார் இவர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. படம்பக்க தேவர் கோயில் முதலாம் வீர ராசேந்திர சோழ தேவனின் ஐந்தாம் ஆண்டில் கட்டி முடிவு பெற்றதை ஒருகல்வெட்டு உணர்த்துகின்றது. இக் கோயிலில் சிவதர்மம், சோமசித்தாந்தம் இவைகள் விரிவுரையாற்றப் பெற்று வந்தன. திருவெம்பாவையும் ஓதப்பட்டு வந்தது. இக் கோயிலில் உள்ள ஸ்ரீ பலி தேவர் திருமேனி உத்தம சோழ தேவரால் எழுந்தருளுவிக்கப்பட்டது. இக் கோயிலில் உத்தராயணச் சிறப்பு, ஆவணித் திருநாள் இவைகள் சிறப்புற நடத்தப்பட்டு வந்தன. இக் கோயிலில் அகமார்க்கம் பாடப் பெற்று வந்ததை மூன்றும் இராசராசன் கல்வெட்டு உணர்த்துகிறது.

இக்காலம் சென்னையின் ஒரு பகுதி சேத்துப்பட்டு என்று வழங்கப் பெறுவதன் பழம் பெயர் சேற்றுப்பேடு என்பதாகும். அது புலியூர்க் கோட்டத்துத் துடர் முனி நாட்டைச் சேர்ந்தது. திருவொற்றியூர், கங்கை கொண்ட சோழன் காலம் முதல், முதற் குலோத்துங்க சோழன் காலம் வரை சயங்கொண்ட சோழ மண்டலத்துப் புழற்கோட்டத்துப் புழல் நாட்டு ஊர்களில் ஒன்று என்று குறிக்கப் பட்டுள்ளது. முதற் குலோத்துங்க சோழன் காலத்தில் இவ்வூர், இராசேந்திர சோழவள நாட்டுப் புழல் கோட்டத்துப் புழல் நாட்டு ஊர்களில் ஒன்று என்று கூறப்பட்டுள்ளது.

செய்திச் சுருக்கம்

17—11—63 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்குக் கோடம்பாக்கம் வடபழநி ஆண்டவர் கோயிலில், கந்தர்சஷ்டி லட்சார்ச்சனை விழாவை, அமைச்சர் திரு. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் அவர்கள் துவக்கி வைத்தார்கள். துணை ஆணையர் திரு D. இராமலிங்க ரெட்டியார் அவர்களும், நிர்வாக அதிகாரி திரு. K. சிதம்பரம், B.A., அவர்களும், அறங்காவலர் குழுவினரும், அமைச்சர் அவர்களைச் சிறப்புற வரவேற்றுத் தரிசனம் செய்து வைத்தனர்.

Acknowledgment :

Sandesanugraha Murtam :

Copy Right : Institut Francais,

D' Indologie, Pondicherry.

திருப்பராய்த்துறையில் துலா விஷுக் காட்சி.



கோயம்புத்தூர் ஸ்ரீ கோனியம்மன் கோயிலில்
அமைச்சர் திருமிகு. N. S. S. மன்ருடியார் அவர்கள்.



கோயம்புத்தூர் ஸ்ரீ கோனியம்மன் கோயிலின் முன்கோபுரத் திருப்பணிக்கு, நமது அறநிலய ஆணையர் திரு. M. S. சாரங்கபாணி முதலியார், B.A.,B.L., அவர்கள், கால்கோள் விழா நிகழ்த்துதல் (5-12-63)



திருவுத்தரகோச மங்கை கோயிலின் சிறப்புத் தோற்றங்கள்

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowme
(Admn.) Dept. Madras-34. Printed at The United Printers, 3/27 Broadway, Madras-1.